பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | மார்கழி 23 | ஞாயிற்றுக்கிழமை 07.01.2018 | கதிர் 63

## மாணவனின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

யாழ்ப்பாணம்,ஜன.07

அச்சுவேலி – ஆவரங்கால் பகுதியில் கிணற்றிலிருந்து மாணவன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பக்கம் 03

# ஆளுநருடனும் தளபதியுடனும் மட்டும் பேசி யாழ்.நிலைமை அறிந்த பிரிட்டன் எம்.பிக்கள்

### முதலமைச்சர், மாவட்ட செயலருடன் சந்திப்பில்லை

(எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம், ஜனவரி 07**

**யாழ்ப்பாண மக்களின் தற்போதைய நிலை தொடர்பில் வடக்கு ஆளுநரையும், யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியையும் மட்டும் சந்தித்துப் பேசிவிட்டுக் கொழும்புக்குத் திரும்பியது பிரிட்டன் எம்.பிக்கள் குழு.**



யாழ்ப்பாணம் வந்த இந்தக் குழுவினர் யாழ். மக்களின் தேவைகள் தொடர்பில் நன்கறிந்தவரான மாவட்ட செயலரையோ அல்லது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதியான வடக்கு முதலமைச்சரையோ சந்திக் பக்கம் 22

## வேட்பாளர் நியமனம் வழங்காமையால் ஆசிரியர் தலையங்கம் எழுதுகிறார்கள்!

### பத்திரிகை மீது சுமந்திரன் எம்.பி. பாய்ச்சல்



யாழ்ப்பாணம்,ஜன.07

ஒரு பத்திரிகை ஆசிரியர் எங்களிடம் வேட்பாளர் நியமனம்கேட்டார்.கொடுக்கவில்லை என்றவுடன் அவருக்கு எட்டாப் பழம் புளிக்கிறது. தொடர்ந்து ஆசிரியர் தலையங்கம் எழுதிக் கொண்டிருக்கி றார்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின்நாடாளுமன்றஉறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்.

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின்சார்பில்போட்டியிடும்வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டம் நேற்றுப் பருத்தித் பக்கம் 22

## வல்வெட்டித்துறையில் நேற்று கஞ்சா, ஹசீஸ், அபின் சிக்கின!

### கடற்படையின் சுற்றிவளைப்பில்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.07

கேரளக் கஞ்சா, ஹசீஸ், அபின் ஆகிய அபாயகரமான போதைப்பொருள்கள் அடங்கிய 98 கிலோ எடை கொண்ட பொதிகளை இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் வைத்து இந்தப் பெருந்தொகைப்போதைப்பொருள்கள்கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி 3 கோடி பக்கம் 03

## 27 இந்தியர்கள் வவுனியாவில் நேற்றுக் கைது

வவுனியா,ஜன.07

இலங்கையில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 27 இந்திய பிரஜைகள் வவுனியாவில் வைத்துக்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குடிவரவு – குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட பக்கம் 22

## வடக்கு - கிழக்கு இணைப்பு இப்போது சாத்தியமாகாது

### அதற்காகத் தமிழரின் அபிலாஷையில் மு.கா. மண்போடாது என்கிறார் ஹக்கீம்

மட்டக்களப்பு, ஜன 07

அரசியல் பிழைப்புக்காகவே முஸ்லிம் காங்கிரஸ் வடக்கையும் கிழக்கையும்இணைக்கப்போகிறது என்று பிரசாரம் செய்துவருகின்றனர். சமகாலத்தில்நடக்கமுடியாத ஒரு விடயத்துக்காகத்தமிழர்களின் அபிலாஷையில் மண்ணை அள்ளிப் போடவேண்டிய தேவை முஸ்லிம் காங்கிரஸுக்குக் கிடையாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பக்கம் 22



## அபிவிருத்தி அரசியலை ஏற்றது தமிழ்க் காங்கிரஸ்

### அதன்படியே திட்டவரைவு முன்வைப்பு

யாழ்ப்பாணம்,ஜன .07

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் முதன் முறையாக அபிவிருத்தி அரசியலை இலக்குவைத்துத் திட்டவரைவை முன் வைத்துள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையைத் தமிழ்த் தேசியப் பேரவை கைப்பற்றினால், முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி மற்றும்திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவம் தொடர்பான வரைவை அந்தக் கட்சி நேற்று ஊடகங்கள் முன் வெளியிட்டது. பக்கம் 03

## இது ரகசியம் அல்ல!

யாழ். குடாநாட்டின் பத்திரிகைப் போக்குக் குறித்து நேற்றுமுன்தினம் நண்பர் ஒருவர் தொலைபேசியில் பேசினார்.

ஒரு கட்சிப் பத்திரிகை போல (அது கட்சிப் பத்திரிகைதான்!) வெளிவந்துகொண்டிருந்த ஒரு நாளிதழ் கடந்த சில நாள்களாக தனது போக்கை மாற்றிக் கொண்டு விட்டது போலத் தெரிகின்றது. திடீரென எல்லாப் பக்கத்துக்கும் – பக்கம் 22

## குருநகர் வீடொன்றில் தீ!



யாழ்ப்பாணம், ஜன.07

யாழ்ப்பாணம், குருநகர் ஐந்துமாடிக் குடியிருப்புக்கு அண்மையில் உள்ள வீடோன்றில் நேற்றுத் திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

வீட்டு அறை ஒன்றுக்குள் மின் ஒழுக்குக் காரணமாகவே தீ பரவியதாகத் தெரிவிக்கப்பட்டது. பக்கம் 22

## தமிழரசு வேட்பாளர் மீது சாவகச்சேரியில் தாக்குதல்

### பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தவேளை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் சாவகச்சேரி நகர சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி வேட்பாளர்மீதுதாக்குதல்நேற்று நடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி, சிவன் கோயில்பகுதியில்நேற்று முற்பகல்10.30 மணிக்கு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. பக்கம் 22

## இலங்கை தொடர்பில் கனடா மிக இறுக்கமான நிலைப்பாடு

### கிளிநொச்சியில் கூறினார் கரி ஆனந்தசங்கரி எம்.பி.



கிளிநொச்சி, ஜன 07

இலங்கை அரசு மீதும், சர்வதேச சமூகம் மீதும் காணாமற்போனோரின் உறவினர்கள் நம்பிக்கை யிழந்தே காணப்படுகின்றனர்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி.

இலங்கை தொடர்பில் கனடா அரசு பக்கம் 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்கதிர்

## தரம் 5 புலமைப் பரிசில் வினாத்தாள்களின் விடைகள்

பிரபல ஆசிரியர் வே.அன்பழகன் தயாரித்து கடந்த 5 ஆம், 6 ஆம் திகதிகளில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத் தாள் பகுதி I மற்றும் II இன் விடைகள் இங்கே தரப்படுகின்றன.

### வினாத்தாள் - I

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 11. 1 | 21. 1 | 31. 1 |
| 02. 2 | 12. 3 | 22. 3 | 32. 2 |
| 03. 3 | 13. 2 | 23. 2 | 33. 2 |
| 04. 2 | 14. 2 | 24. 2 | 34. 21 |
| 05. 2 | 15. 1 | 25. 3 | 35. 3 |
| 06. 3 | 16. 1 | 26. 2 | 36. (35) 1 |
| 07. 3 | 17. 3 | 27. 3 | 37. 2 |
| 08. 2 | 18. 3 | 28. 3 | 38. 2 |
| 09. 2 | 19. 3 | 29. 3 | 39. 2 |
| 10. 3 | 20. 2 | 30. 3 | 40. 1 |

### வினாத்தாள் - II

01. 1) அல்லும் பகலும்
2) கன்று
3) நல்ல ஆர்வத்தோடு
4) நன்றி
5) நன்மை
6) உள்ளம் சுசியும் (6புள்ளி)

02. 1) பாறை
2) கனம் (2புள்ளி)

03. 1.சுயசரிதை 2) பெற்றோர் (4புள்ளி)

04. 1. விருப்பம் 2. அறம்
3. வித்தை 4. ஞாலம் (4புள்ளி)

05. 1.மலைவேம்பு
2.சங்கிலிக்கொம்பு (4புள்ளி)

06. 1. சமூகசேவை செய்தலை ஒரு தெய்வீகப் பணியாகக் கொண்டிருந்தார்.
2. தமிழர்கள் தை முதல் நாளில் தைப்பொங்கலைக் கொண்டாடுவர் (4புள்ளி)

07. 1. Happy new year (2புள்ளி)

08. 1) நான் உள்ளே வரலாமா?
2) அமைதியாக இருக்கவும் (4புள்ளி)

09. 1) Light house
2) mangoes (4புள்ளி)

10. 1) பாடமகியள தென்ன. (3புள்ளி)

11. 1) புத்தகம் தாருங்கள் (3புள்ளி)

12. ✎ பொருத்தமான வாக்கியங்கள்
✎ சொற்களுக்கு இடையே இடைவெளி
✎ முற்றுப்புள்ளி (6புள்ளி)


13. 1) 3
2) 400
3) 1000
4) 70
5) ஆறாயிரத்து நானூற்று எழுபத்து மூன்று
6) 9054, 5056, 4507, 4056
7) 6792
8) கனவுரு
9) 12
10) $\frac{7}{10}$
11) 6kg 500g
12) 9472
13) ரூபாய் 52.50
14) 105
15) 600ml (30புள்ளி)

14.

| | | |
|---|---|---|
| 1) 3 | 10) 4 | 19) 3 |
| 2) 2 | 11) 2 | 20) 3 |
| 3) 1 | 12) பிரார்த்தனை | |
| 4) 2 | 13) 2 | |
| 5) 2 | 14) 3 | |
| 6) 3 | 15) 3 | |
| 7) 1 | 16) 3 | |
| 8) 4 | 17) 3 | |
| 9) 2 | 18) 4 | (20புள்ளி) |

14ஆவது பிரிவில் 12 ஆவது வினாவுக்குப் புள்ளி வழங்கவும்.

# சிதம்பரத்துக்கு கப்பல் பயணம் உடன் பதிவு செய்யுங்கள்




சிதம்பரத்துக்கு இந்து அடியவர்கள் கப்பலில் வழிபாட்டுக்குப் பயணம் மேற்கொள்ள இலங்கை – இந்திய அரசுகள் ஒப்புக்கொண்டுள்ளன. அடுத்த சில வாரங்களில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படும் இக்கப்பல் பயணத்தில் சிதம்பரம் சென்று வழிபட்டு மீண்டும் திரும்பி வர விரும்பும் அடியவர்கள், வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் உள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தற்காலிகப் பணிமனையில் அலுவலக வேலை நேரத்தில் கடவுச்சீட்டின் படியைக் காட்டிப்பதிவுசெய்துகொள்ள முடியும்.

– இவ்வாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கப்பல் புறப்படும் இடம், புறப்படும் நாள், நேரம் மற்றும் கப்பல் கட்டண விவரங்கள் காலப்போக்கில் அறிவிக்கப்படும்.

விவரங்கள் அறிந்து கொள்ள 071 440 2318 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

# விவேகானந்தரின் ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், ஜன. 07

சுவாமி விவேகானந்தரின் 156 ஆவது ஜெயந்தி விழா நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு மருதனார்மடம் வீதி, உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுகள் மாலை 4 மணி முதல் 6 மணிவரை இடம்பெறவுள்ளன. பிரதம விருந்தினர் உரையைக் கோண்டாவில் இந்துக் கல்லூரி அதிபர் செ.மோகநாதன் நிகழ்த்துவார். தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

(இ)

# நாளை மின் தடை

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கள் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ் பிரதேசத்தில் –**

காரைநகர், ஊர்காவற்றுறை, பொன்னாலை, காரைநகர் கடற்படை முகாம், ஊர்காவற்துறை நீதிமன்ற கட்டடத் தொகுதி, நாரந்தனை நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் கணேசபுரம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# நேர்மையானது மக்கள் காங்கிரஸ்



## கூறுகிறார் அமைச்சர் ரிஷாத்

மன்னார், ஜன 07

சமூகச் சிந்தனையுடனும், தூரநோக்குடனும் உருவாக்கப்பட்ட மக்கள் காங்கிரஸ் தனது பணிகளை நேர்மையுடனும், உண்மையுடனும் முன்னெடுத்து வருகின்றது என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் சிறிய கட்சியாக இருந்தபோதும், இறைவனை முன்னிறுத்தி மிகவும் தைரியமாகக் கடந்த அரசிலிருந்து வெளியேறி, மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தோம்.

தமிழ்ச் சமூகமும், மலையக சமூகமும், முஸ்லிம் சமூகமும் மஹிந்தவுக்குப் பாடம் புகட்ட வேண்டுமென்று முடிவெடுத்த பின்னர், அப்போதைய மஹிந்த அரசில் அங்கம் வகித்த சிறிய கட்சிகள் யாரை ஆதரிப்பது என்று தடுமாறிக் கொண்டிருந்தபோது, நாம் துணிச்சலுடன் முடிவெடுத்து மைத்திரியை ஆதரிக்க முன்வந்தோம்.

போர் முடிவடைந்திருந்த போது, பெரும்பான்மைச் சமூகத்திலுள்ள ஒருசில மதகுருமார்கள் இனவாதத்தைத் தூண்டி சிறுபான்மையினரின் மத உரிமைகளை அடக்குகின்ற – ஒடுக்குகின்ற, அவர்களின் பொருளாதாரத்தை நாசமாக்குகின்ற வேலைகளில் ஈடுபட்டனர்.

இனவாத மதகுருமாரின் நடவடிக்கைகளை அடக்க முடியாது, அந்த அசிங்கங்களைப் பார்த்துக்கொண்டு இருந்த நாட்டுத் தலைவரை, வீட்டுக்கு அனுப்புவதற்கு நாங்கள் அடிகோலி இருக்கிறோம்.

மக்கள் காங்கிரஸ் மக்களின் அடிநாதத் துன்பங்களைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்சியே.சமூக சிந்தனையுடனும், தூரநோக்குடனும் உருவாக்கப்பட்ட இந்தக் கட்சி, தனது பணிகளை நேர்மையுடனும், உண்மையுடனும் முன்னெடுத்து வருகின்றது.

அகதியாக வெளியேற்றப்பட்டு, அகதிகளுடன் அகதியாக வாழ்ந்து பல்வேறுதுன்பங்களைஅனுபவித்ததன் விளைவினாலேயே, இந்த சமூகத்துக்கு விடிவு கிட்டவேண்டும் என்ற எண்ணத்தில் அரசியலுக்குள் உந்தப்பட்டேன்.

அகதி மக்களின் வறுமை, கொடுமையான வாழ்வு, மழை வந்தால் ஒழுகும் கொட்டில்களில்அவர்கள்பட்ட துன்பங்கள் தான், எனது அரசியல் செயற்பாடுகளை தீவிரப்படுத்தியது – என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலைப் பதவி நீக்க சிலர் ரகசியத் திட்டம்



எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு முன்னர் ரணில் விக்ரமசிங்கவைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, கரு ஜயசூரிய அல்லது சஜித் பிரேமதாஸவைப் பிரதமராக நியமிக்கும் இரகசியத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகச் சிங்கள இணையத் தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

அதில் மேலும், பிணை முறிப்பத்திர விவகாரம் தொடர்பான குற்றச்சாட்டைப் பிரதமர் மீது சுமத்தி, நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் அவரைப் பதவியில் இருந்து விலக்கிவிட்டு, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவரைப் பிரதமராக நியமிக்க அந்தக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோர் திட்டமிட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்துக்கு கூட்டு எதிரணியின் ஆதரவை மாத்திரமல்லாது ஜே.வி.பியின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நடவடிக்கையில் சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தலையீடுகளை மேற்கொண்டுள்ளதுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர் ஒருவரும் தலையீடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் பேசப்படுகிறது. (ஐ)

## அபிவிருத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் தமிழ்த் தேசியப் பேரவை என்ற தேர்தல் கூட்டின் முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் இந்த அபிவிருத்தித் திட்ட வரைவை முன்வைத்தார்.

"யாழ் 2020 - நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டதேசம்செயற்றிட்டம்" என்ற தலைப்பில் இது வெளியிடப்பட்டது.

தமிழ்த்தேசியப்பேவையால் யாழ்ப்பாணத்தில் நேற்று ஒழுங்கமைக்கப்பட்ட செய்தியாளர்கள் சந்திப்பும், செய்தியாளர்களுக்கான விருந்துபசார நிகழ்வும் யாழ்.நகர விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்றது. இதில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் இந்த அபிவிருத்தி வரைவை முன்வைத்தார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், அபிவிருத்தி அரசியலை வைத்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கடுமையாக விமர்சித்து வருகின்றது.

இந்த நிலையில் முதல் முறையாகத் தமிழ்க் காங்கிரஸும் அபிவிருத்தி அரசியலை ஏற்றுத் திட்டவரைவை வெளியிட்டுள்ளது.

இதில் உரையாற்றிய சட்டத்தரணி மணிவண்ணன்,

யாழ்.நகரத்தில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது தொடர்பில் நிபுணர்களுடன் ஆராய்ந்து திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளேன். எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் அதனை நடைமுறைப்படுத்தவும் உள்ளேன். குறிப்பாக யாழில் இரண்டு நவீன சந்தைக் கட்டடத் தொகுதிகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இதில் ஒன்று குருநகர் சின்னக்கடையும், மற்றையது யாழ். நகரில் இயங்கி வருகின்ற சந்தையையும் நவீனமயமாக்குவது. மேலும் பிரதானமாக மீள் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டு சூழலுக்குத் தீங்கில்லாத வகையில் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தை நடைமுறைக்குக் கொண்டுவருதல். இதன் மூலம் கல்லுண்டாயில் கொட்டப்படும் கழிவுகளுக்கு நிரந்தர தீர்வு ஒன்றை எட்ட முடியும்.

இது தவிர யாழ்.நகரில் உள்ள வீதிகள் அனைத்துமே நடைபாதைக்கு என இடம் ஒதுக்கப்படாமல் தான் காணப்படுகின்றன. இதனால் மக்கள் வீதிகளினாலேயே நடந்து செல்லும் நிலை காணப்படுகின்றது. நோயாளர்களும் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஆகவே எமது திட்டத்தில் நகரத்தில் காணப்படுகின்ற அனைத்து வீதிகளுக்கும் நடைபாதைகள் அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நகரில் வாகனத் தரிப்பிடம் ஒன்று நவீனமயப்படுத்தப்பட்ட முறையில் அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம். இந்த வாகனத் தரிப்பிடம் அமைக்கப்படுமாக இருந்தால் வீதிகளின் நடுவே வாகனங்களை நிறுத்த வேண்டிய தேவை ஏற்படாது. குறிப்பாக யாழ்.மாநகரத்துக்குள் காணப்படும் வாய்க்கல்கள் அனைத்துமே மாசடைந்த நிலையில்தான் காணப்படுகின்றன. எனவே சிறந்த ஒரு வடிகாலமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

நகர திட்டமிடல் தொடர்பில் ஆராய்வதற்குப் பேராசிரியர்கள், துறைசார் நிபுணர்கள், பொருளியல் நிபுணர்கள் என்போரை உள்ளடக்கிய குழு ஒன்றும் உருவாக்கப்படவுள்ளது. மேலும் எம்மால் கைப்பற்றப்படும் உள்ளூராட்சிச் சபைகளையும் ஒவ்வொரு நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர்ந்த உறவுகள் பொறுப்பெடுத்து அந்தச் சபைகளின் கிராம, நகர அபிவிருத்திக்கு நிதி துறை சார் வளங்கள், பயிற்சிகள், அபிவிருத்திகள் வழங்க சம்மதம் தெரிவித்துள்ளனர் - என்றார். (ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் இறுக்கமான நிலைப்பாட்டையேகொண்டிருக்கும் எனவும் அவர் கூறினார்.

வடக்குக்குப் பயணம் மேற்கொண்டுள்ள கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி, நேற்றுக் கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொண்டு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் 321 ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபடும் காணாமற்போனோரின் உறவினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டவர்களைச் சந்திப்பதற்காக நான் இன்று இங்கு வந்தேன். கடந்த தடவை வந்தபோது இருந்த அதே நிலைமை இன்றும் தொடர்கின்றது.

இது தொடர்பில் நான் ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறேன். இலங்கைப் பிரச்சினை தொடர்பில் கனடா இறுக்கமான நிலைப்பாட்டை தொடர்ந்தும் கடைபிடிக்கும் - என்றார். (ஐ)

## மாணவனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ச.டிஷாந்த் என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

அந்தப் பகுதியில் உள்ள தோட்டக் கிணற்றிலிருந்தே மாணவனின் சடலம் மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் கூறினர். (ஐ)

## வல்வெட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா என்று வடக்குக் கடற்படையின் கட்டளைப் பிரிவு தெரிவித்துள்ளது.

80 கிலோ கேரளக் கஞ்சாவும், 4 கிலோ ஹசீஸும், 4 கிலோ அபினும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கடற்பிரதேசத்தில் மூன்று விதமான போதைப் பொருள்கள் பெரும்தொகையில் கைப்பற்றப்பட்டுள்ள சந்தர்ப்பம் இது எனக் கடற்படை கூறியுள்ளது.

கைப்பற்றப்பட்ட இந்தப் போதைப்பொருள்கள் மேலதிக நடவடிக்கைக்காகவும் விசாரணைக்காகவும் விடே அதிரடிப் படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (ஐ-7)

## சிவத்தமிழ்ச் செல்வி அன்னையின் 93 ஆவது பிறந்தநாள்

தெய்வத்திருமகள் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரர் அவர்களின் தொண்ணூற்றி மூன்றாவது பிறந்தநாள் இன்றாகும். எம் மண் செய்த மாதவதத்தால் தெல்லிப்பழை திருவூரில் வாழ்ந்த உயர்பண்பாளர் அப்பாக்குட்டி தையற்பிள்ளை தம்பதிகளுக்கு 07.01.1925 மிருகசீரிட நட்சத்திரதத்தில் பிறந்தார். தெய்வத்திருவருளால் சிறு பராயத்திலேயே ஆன்மீக நாட்டம் உடையவராக விளங்கிய அம்மையார் கல்வியிலும் முன்னிலை வகித்தார். சிறுமியாக பாடசாலை மேடையில் 1931இல் பரிசு பெறத் தொடங்கிய அம்மையார் இறையடி சேரும் வரை பரிசுகளாலும் விருதுகளாலும் தன் பெருமையை நிலை நாட்டினார். கணீர் என்ற குரலில் பேசும் ஆற்றல் மிக்க அம்மையார் பாடும் ஆற்றலும் மிக்கவர். 1941ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரியில் இயங்கிய ஆசிரியர் கலாசாலையில் கற்கும் தகுதியைப் பெற்றார்.

அக்காலத்தில் திரு.சு.நடேசபிள்ளை, திரு.ஏ.எஸ்.சுந்தர்ராஜ ஐயங்கார், பிரம்ம ஸ்ரீ இராமசாமி ஐயர், பிரம்ம ஸ்ரீ கணபதி ஐயர் போன்ற தமிழ் நாட்டு அறிஞர்களிடம் உன்னத தமிழ் அறிவைப் பெற்றார். மூன்று ஆண்டுகள் பயிற்சி பெற்று ஆசிரியராகப் பணியேற்றார். இராமநாதன் கல்லூரி விடுதிச்சாலை வாழ்வு அம்மையாரை சமய நெறிக்குள் மிகவும் ஈடுபடுத்தியது எனலாம். 1946ஆம் ஆண்டு மட்டக்களப்பு சென்சிசிலியா பாடசாலையில் ஆசிரிய சேவையை தொடங்கிய அம்மையார் கிழக்கிலங்கையில் பலரது பாராட்டைப் பெற்ற ஆசிரியராக விளங்கினார்.

1949ஆம் ஆண்டு கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலைக்கு இடம் மாறிவந்த அம்மையார் இப்பாடசாலையில் பதினொரு ஆண்டுகள் அரிய சேவை ஆற்றினார். 1953இல் பண்டிதர் பரீட்சையிலும் 1958ஆம் ஆண்டு சென்னை சைவ சித்தாந்த சமாசம் நடாத்திய சைவப்புலவர் பரீட்சையிலும் சிறந்த சித்தியைப் பெற்றார். சிறு பராயத்தில் பாடசாலை அரங்குகளில் உரையாற்றிய அம்மையார் கொழும்பில் ஆசிரியராக கடமையாற்றிய போது இவரது புலமை கண்டு கொழும்பில் உள்ள திருக்கோயில்கள் ஆன்மீக உரைக்கு வாய்ப்பு அளித்தன.

1956ஆம் ஆண்டு திருக்கேதீச்சர சிவராத்திரி விழாவில் இவர் ஆற்றிய உரையை இலங்கை வானொலி அஞ்சல் செய்தது. அன்று முதல் இவரது பெருமை இலங்கை முழுவதும் பரவியது. கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 1956ஆம் ஆண்டு அம்மையார் திருமுருகாற்றுப்படை என்ற தலைப்பில் உரையாற்றி அறிஞர் கூட்டத்தில் பெருமதிப்பைப் பெற்றார். 1958ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தினால் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்று வந்தார். அளவெட்டி சதாநந்த வித்தியாலயத்திலும் பின் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் நிறைந்த ஆசிரியப்பணி ஆற்றினார்.

1963ஆம் ஆண்டு துர்க்காதேவி தேவஸ்தானத்தின் திருப்பணிச்சபையில் உறுப்பினராக சேர்க்கப்பட்ட அம்மையார் 1965இல் துர்க்காதேவஸ்தான நிர்வாக சபையில் பொருளாளராக நியமிக்கப்பட்டார். அம்மையாரின் அரிய முயற்சியினால் ஆலயம் எழுச்சி பெற்றது. 1977ஆம் ஆண்டு தேவஸ்தான நிர்வாக சபையின் தலைவராக அம்மையார் பொறுப்பேற்றுக் கொண்டார். அம்மையாரின் அளப்பெரிய தொண்டினால் இத் திருக்கோயில் சர்வதேசம் முழுவதும் பிரசித்தம் பெற்ற கோயிலாக மாறியது.

ஆலயம் சமூகத்திற்கு எவ்வாறு உதவலாம் என்பதை தன் தலைமைத்துவ ஆளுமையால் நிரூபித்துக் காட்டியவர் அம்மையார். ஆதரவற்ற பெண்குழந்தைகளுக்கு கோயில்ச் சூழலில் துர்க்காபுர மகளிர் இல்லத்தை ஸ்தாபித்து பலர் வாழ வழிகாட்டியவர். அல்லலுற்றவர்கள், அகதிகளாக அலைந்தவர்கள், நோயாளர்கள், கைம்பெண்கள் கவலையைப்போக்குவதற்கு அம்மையார் ஆற்றிய தொண்டு எவராலும் மறக்கமுடியாது.

இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று அரிய ஆன்மீக உரைகளை ஆற்றி சைவ மக்களை நெறிப்படுத்தியவர் இவர். அம்மையாரின் சொற்பொழிவு நடைபெறாத திருக்கோயில்கள் இல்லையென்று தன் நாவன்மையால் சமய வாழ்வை நெறிப்படுத்தியவர்.பல தேவஸ்தானங்கள் பல கௌரவப்பட்டங்களை வழங்கிய போதிலும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் வழங்கிய சிவத்தமிழ்ச் செல்வி என்ற பட்டத்தை தன் பெயரோடு விருப்பமாக ஏற்றுக் கொண்டவர். இன்று அம்மையார் எம்மோடு இல்லை.

2008ஆம் ஆண்டு ஆனிமாதம் 15ஆம் நாள் இறையழைப்பை ஏற்று அம்மையார் இம் மண்ணைவிட்டுச் சென்றுவிட்டார். ஆனால் அம்மையார் சாதித்தவை ஏராளம். அவருக்கு நிகராக ஒருவரையும் சொல்ல முடியவில்லை. சமூகத்திற்காக முழுமையாகத் தன்னை அர்ப்பணித்த தெய்வப்பிறவி. ஏழைப் பங்காளராக இறுதி மூச்சுவரை வாழ்ந்த வழிகாட்டி. தான் வாழும் போதே தன் பிறந்த தினத்தை முன்னிட்டு அன்பர்கள் வழங்கிய நிதியை அறக்கொடையாகப் பிரகடனப்படுத்தியவர்.

அதனால் அம்மையாரின் அறக்கொடை நிதியம் நிரந்தர நிதியமாக வளர்ச்சி பெற்றுள்ளது. அவர் காட்டிய வழியில் எமது தேவஸ்தானம் வைத்தியசாலைகளுக்கும், மாணவர்களுக்கும் அறக்கொடை வழங்கி, அவர்பணி தொடர்கிறோம். அன்னாரின் பெயரால் ஆண்டு தோறும் எம்மண்ணில் தொண்டாற்றிய சான்றோர் ஐவரைத் தேர்ந்தெடுத்து சிவதத் தமிழ் விருது வழங்கி சான்றோர் சிறப்பைக் கௌரவப்படுத்தி வருகிறோம்.

பாங்கான தெய்வப் பணிகள் பலசெய்த
ஓங்கார ஓசை உறங்கியதால் - தாங்காதே
ஏந்திச் சுடர்விளக்கை என்றும வணங்கிடுவோம்
நீந்துகவே முத்தியின்ப நீழல்.

(வி.கந்தவனம்.)

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்.
தலைவர்,
சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறக்கொடை நிதியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தனிவழிக்கு தயாராகிறது ஐ.தே.க.?

உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த கையோடு, சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து கூட்டமைத்து உருவாக்கிய நல்லாட்சி அரசிலிருந்து வெளியேறவும், தனித்து ஆட்சி அமைக்கவும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி தீர்மானித்து விட்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டாம் மட்டத் தலைவர்கள் பிரிந்து சென்று ஆட்சி அமைப்பதை வலியுறுத்துகின்றனர் என்றும், ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள பிற கட்சிகளின் தலைவர்களும் அதற்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டனர் என்றும் கூட சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசை வீட்டுக்கு அனுப்பி மைத்திரி - ரணில் கூட்டரசை உருவாக்குவதில் பின்னணியில் செயற்பட்ட அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளும் கூட ஐ.தே. கட்சி தனித்து ஆட்சி அமைக்கும் தீர்மானத்துக்கு ஆசி வழங்கி விட்டன என்று தகவல்.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய அமைச்சர் நியமனம் ஒன்றே சு.க. - ஐ.தே.க. தேனிலவுக் காலம் குழம்பிப் போவதற்குப் பிரதான காரணமாக அமைந்ததாகவும் தெரிகின்றது.

இரட்டைப் பிரஜாவுரிமைச் சிக்கலில் மாட்டி நடிகை கீதா குமாரசிங்க தமது எம்.பி. பதவியை இழந்தார். மஹிந்த அணியில் இருந்த கீதா குமாரசிங்கவின் இடத்துக்கு விருப்பு வாக்கு வரிசையில் அடுத்ததாக இருந்த பியசேன கமகே எம்.பியானார். அவர் நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்து ஒரு சில நாள்களில் அவர் சட்டம், ஒழுங்கு இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றார் என்ற ஒரு தகவல் திடுதிப்பென வெளிவந்தது.

சட்டம், ஒழுங்கு அமைச்சு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வலது கரமான சாகல ரட்னாயக்காவின் வசம் உள்ளது. அவர் அந்த அமைச்சைச் சரியாகக் கையாளவில்லை என்றும், முன்னைய மஹிந்த அரசில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் அவர் மெத்தனமாக நடந்து கொண்டார் என்றும் ஜனாதிபதி தரப்பில் இருந்து குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பின்புலத்திலேயே, சட்டம், ஒழுங்கு அமைச்சருக்கும் தெரியாமல், பிரதமருக்கும் அறிவிக்காமல், திடுதிப்பென அந்த அமைச்சுக்கு ஜனாதிபதியின் ஆளான பியசேன கமகே இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இது, ஐ.தே.க.வட்டாரங்களில் பெரும் சீற்றத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின்படி பிரதமரின் பரிந்துரையின் பேரிலேயே ஒருவரை அமைச்சராக ஜனாதிபதி நியமிக்க முடியும். ஆனால் அரசமைப்பை மீறும் வகையில் பிரதமருக்குக் கூடத் தெரியாமல், ஐ.தே.கட்சிக்கு உரிய அமைச்சுக்குள் தன் ஆளை ஜனாதிபதி வல்வந்தமாகச் சொருகியிருக்கின்றார் என ஐ.தே.க.தலைமை பொருமுகின்றதாம்.

அத்தோடு, சட்டம் - ஒழுங்கு அமைச்சைக் கவனிக்கும் பொறுப்பு பியசேன கமகேயை நியமித்தமை ஆட்சி முறைமையையே நையாண்டி பண்ணும் நடவடிக்கை என்றும் அவை கருதுகின்றன.

பியசேன கமகே ஒரு குட்டிச் சண்டியர். ஊடகவியலாளர் தயா நெத்தசிங்கவைத் தாக்கிய பரபரப்பை ஏற்படுத்தியவர். தண்ணீர் கட்டண பில் செலுத்தாமல் வேண்டுமென்றே தவறிழைத்தவர். அத்தகையவரை பிரதமருக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சருக்கும் தெரியாமல் - அவர்களுக்கு அறிவிக்காமல் - இராஜாங்க அமைச்சராக ஜனாதிபதி நியமித்தமை ஐ.தே.கட்சிக்கு விடுக்கப்பட்ட சவால் என அக்கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர் கருதுகின்றனர்.

போதாக்குறைக்கு தனது சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களை மட்டும் தனியாக சந்திக்கும்போது அவர்களிடம் அடிக்கடி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறும் ஒரு விடயம் ஐ.தே.கவினரை பெரும் கோபத்தில் ஆழ்த்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

"மஹிந்த ராஜபக்ஷவினால் விடுதலைப் புலிகளை மட்டும்தான் வெல்ல முடிந்தது. ஆனால் சு.க.தலைவராக இருக்கும் என்னால் தான், என் காலில் ஐ.தே.கவினரையே விழ வைக்க முடிந்தது." - என்று பீற்றிக் கொள்கின்றாராம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இந்தத் தகவலினால் வெகுண்டெழுந்துள்ளனர் ஐ.தே.கவின் இரண்டாம் மட்டத் தலைவர்கள்.

ஐ.தே.கவினரின் கடுமையான உழைப்பினாலும் வாக்கினாலும் பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன இப்போது ஐ.தே.கவினரை புறம் ஒதுக்கி நடக்கின்றார்; உதாசீனம் செய்கின்றார்; இளக்காரமாக நையாண்டி பண்ணும் விதத்தில் செயற்படுகின்றார். பிணைமுறி விசாரணை விவகாரம் என்ற பெயரில் தம்மை சுத்த மானவராகவும், ஐ.தே.கட்சியை ஊழல் கட்சியாகவும் காட்டி குறுகிய அரசியல் லாபம் தேடுகின்றார் - இப்படி எல்லாம் ஐ.தே. கட்சித் தலைவர்கள் பலர் தங்களுக்குள் பேசி மனக் குமைச்சலை வெளிக் கொட்டுகின்றனர் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

உள்ளூராட்சித் தேர்தல் சமயத்தில் கொழும்பு அரசியல் குழப்பங்களை ஏற்படுத்துவது தங்களுக்கு அரசியல் ரீதியாகப் பின்னடைவையும் பாதிப்பையும் ஏற்படுத்தலாம் எனக் கருதும், ஐ.தே. கட்சியின் தலைமை தேர்தல் முடிவடையும் வரைக் காத்திருப்பதாகத் தெரிகின்றது.

எது, எப்படியென்றாலும் உள்ளூராட்சித் தேர்தல்கள் பெப்ரவரி 10 இல் முடிவடைந்த கையோடு தென்னிலங்கை அரசியலில் பல புதிய மாற்றங்கள் நிகழும், புதிய கூட்டுகள் கட்டவிழும்; வெவ்வேறு அரசியல் செல்நெறிகள் - பாதைகள் - வெளிப்படும்.

அப்போது தமிழரின் தலைவிதி மேலும் கேள்விக்குள்ளாவதை தவிர்க்க முடியாததாக இருக்கும்.

# அரசின் அபிவிருத்திப் பணிகள் வடக்கு – கிழக்கில் தொடரும்

## ஜனாதிபதியின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.07

வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் நன்மை அடையும் வகையில் தொடர்ந்தும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மொரகஹகந்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜனாதிபதியின் மொரகஹகந்த அபிவிருத்தி திட்டம் நாளை 8ஆம் திகதி மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது. இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட மகாவலி திட்டத்தைப் பார்க்கிலும் விரிவான திட்டமாகவும் நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வலுச்சேர்க்கக்கூடிய திட்டமாகவும் மொரகஹகந்த திட்டம் அமைந்துள்ளது.

வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ராஜரட்டை அப்பாவி விவசாய சமூகத்தினருக்காக மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட அர்ப்பணிப்பினதும் விடாமுயற்சியினதும் பெறுபேறே மொரகஹகந்த நீர்த்தேக்கத் திட்டமாகும் – என்றார். (ஐ)

# கின்னஸ் சாதனையை நிகழ்த்திய சிறுவனுக்கு ஜனாதிபதி பாராட்டு



கொழும்பு, ஜன.07

கின்னஸ் சாதனை ஒன்றைப் பதிவு செய்த தனுவன சேரசிங்க எனும் சிறுவனை நேரில் சந்தித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராட்டுக்களையும், ஆசியையும் தெரிவித்துள்ளார்.

உலகில் புத்தகம் ஒன்றை வெளியிட்ட மிகவும் வயது குறைந்தவர் என்ற சாதனையை தனுவன சேரசிங்க நிலைநாட்டியிருந்தார்.

சிறுவனின் திறமையைப் பாராட்டி ஜனாதிபதி அவருக்கு நினைவுச் சின்னம் ஒன்றையும் வழங்கினார். சிறுவனின் எதிர்காலக் கல்வி நடவடிக்கை வெற்றி பெற ஜனாதிபதி ஆசி வழங்கினார்.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தனுவன சேரசிங்க என்ற சிறுவன் 'ஜங் பூட்'(Junk Food) என்ற ஆங்கிலப் புத்தகத்தை எழுதியதன் மூலம் கின்னஸ் சாதனை படைத்திருந்தார்.

அந்த ஆங்கில புத்தகத்தை எழுதும் போது அவருக்கு 4 வயதும் 356 நாள்களுமாகும். இந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு அவருக்கு 3 நாள்கள் மாத்திரமே செலவாகியுள்ளன. தனுவன சேரசிங்க தனது பெற்றோருடன் சீலெஸ் நாட்டில் வசித்து வருகின்றார். (ஐ)

# கடலில் காணாமற்போன மாணவனின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஜன.07

ஏறாவூர் புன்னைக்குடாக் கடலில் நீராடிய நிலையில் அலையால் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமற்போன மாணவன் நேற்றுச் சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் மாக்கான் மாக்கார் வித்தியாலயத்தில் சாதாரண தரத்தில் கல்வி கற்கும் அப்துல் ஸலாம் அஸ்பஹான் (வயது-16) என்ற மாணவனின் சடலமே கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் சதாம் ஹுஸைன் கிராமத்தை வசிப்பிடமாகக் கொண்ட இந்த மாணவன் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் புன்னைக்குடா கடலில் நீராடிக் கொண்டிருக்கும்போது காணாமற்போயிருந்தார்.

உடனடியாக மீனவர்களும் கடற்படையினரும் தேடுதலில் ஈடுபட்டபோதும் நேற்றுச் சனிக்கிழமையே அவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காகச் சடலம் ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவம் குறித்து ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# தேர்தல் நடவடிக்கைகளினால் மக்கள் சேவை முடங்கக்கூடாது

## ஜனாதிபதி மைத்திரி உத்தரவு

கொழும்பு, ஜன.07

தேர்தல் நடவடிக்கைகள் காரணமாக அரச நிறுவனங்களின் நாளாந்த மக்கள் சேவைகள் எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியுள்ளார்.

அமைச்சுக்களின் செயலாளர்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்ற சந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.


அங்கு ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களுக்கான சேவையை வினைத்திறனுடன் மேற்கொள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் உதவவேண்டும்.

எந்தவொரு அரச நிறுவனத்திடமும் உள்ள சொத்துக்கள் அல்லது வாகனங்களைத் தேர்தல் நடவடிக்கைக்குப் பயன்படுத்த இடமளிக்காதிருப்பது அமைச்சுக்களின் செயலாளர்களினது பொறுப்பாகும். புதிய வருடத்தின் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் திட்டங்களைவருடத்தின் ஆரம்பத்திலிருந்தே நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

அந்தவகையில், கடந்த வருடம் அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாது மீளவும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்குமானால் அது தொடர்பில் அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார். (ஐ)

# 10 ஆம் திகதி வரை குளிர் தொடரும்



கொழும்பு, ஜன.07

நாட்டில் தற்பொழுது நிலவும் குளிர்ச்சியான காலநிலை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தக் குளிர்ச்சியான காலநிலைக்கு நாட்டில் உள்ள வெப்பநிலையே காரணம் எனவும் திணைக்களம் கூறியுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்குப் பின்னர் மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்க முடியும் எனவும் அது மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## நாளை

08.01.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம் : உத்தரம் மு.ப. 7.11வரை
திதி : ஸ்தபி மு.இ.09.55 வரை
சுபநேரம் : 12.32 – 02.02 வரை
இராகுகாலம்: 08.02 – 09.32 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்துல் ரஸாக்கின் பதவிகளை பறித்தது முஸ்லிம் காங்கிரஸ்

கொழும்பு, ஜன.07

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அப்துல் ரஸாக் (ஜவாதி) கட்சியில் வகிக்கும் பதவிகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் எனக் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் அவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

குழந்தை மரைக்கார் அப்துல் ரஸாக் என்பவர், கட்சிக் கட்டுக்கோப்புகளைக் கடுமையாக மீறி நடக்கின்றமையால் அவர் வகிக்கும் கட்சியின் பிரதிப் பொருளாளர் பதவியிலிருந்தும் அத்துடன் உச்சபீட உறுப்பினர் பதவி யிலிருந்தும் ஜனவரி 03ஆம் திகதியிலிருந்து உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் இடைநிறுத்தப்பட் டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் யாப்பின் மூலம் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, இவரை இடைநிறுத்தியுள்ளார் எனக் கட்சியின் செயலாளர், குழந்தை மரைக்கார் அப்துல் ரஸாக்குக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

குழந்தை மரைக்கார் அப்துல் ரஸாக் என்பவருக்குச் செயலாளர் அனுப்பிய கடிதத்தில், கல்முனை மாநகரசபையில் ஐ.தே.க. சார்பாக யானைச் சின்னத்தில் போட்டியிடும் எமது கட்சியின் வேட்பாளர்களுக்கு எதிராக வெளிப்படையாகவும், தீவிரமாகவும் பிரசாரத்தில் ஈடுபடுகின்றமையால் கட்சியின் ஒழுக்க விதிமுறைகளைக் கடுமையாக மீறியுள்ளார் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், கட்சியின் உயர்பீடம் அவருக்கெதிராக மேற்கொள்ளவுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக உரிய காலத்தில் அவருடன் தொடர்புகொள்ளும் என் றும் செயலாளர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

ஆகையால், கட்சி உறுப்பினர்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உச்சபீட உறுப்பினர் என்ற முறையிலோ பிரதி, பொருளாளர் என்ற முறையிலோ தம்மை பிரதிநிதித்துவப்படுத்த முடியாது என்று குழந்தை மரைக்கார் அப்துல் ரஸாக் என்பவருக்குச் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் கிளிநொச்சியைக் கட்டியெழுப்புவோம்

## சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன.07

போரிலே அழிவடைந்த கிளிநொச்சி மாவட்டத்தை எல்லோரும் ஆச்சரியப்படத் தக்க வகையில் கட்டியெழுப்புவோம். மக்களின் பங்கேற்புடன் இதைச் சாத்தியமாக்குவோம்.

–இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவருமான முருகேசு சந்திரகுமார்.

கிளிநொச்சி கல்மடுப் பிரதேச மக்கள் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுடையதேவைகள் இரண்டு வகையில் உள்ளன. ஒன்று அரசியல் தீர்வு காண்பது. மற்றது வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள் வதற்கான தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதும், பிரதேசங்களின் அபிவிருத்தியுமாகும். இவை இரண்டும் சமாந்தரமாகவே மேற்கொள் ளப்பட வேண்டியவை நாம்இந்தஇரண்டையும் சமாந்தரமாகவே நோக்கிச் செயற்படுகிறோம். கடந்த காலத்தில் விடுதலைப்புலிகள் உட்பட அனைத்து விடுதலை அமைப்புகளும் இதையே வலியுறுத்திச்செயற்பட்டுவந்துள்ளன. அரசியற் பேச்சுக்கள் நடைபெறும் போதெல்லாம் மக்களின் இயல்பு வாழ்க்கை உருவாக்கத்தைப் பற்றி பேச்சுகளில் வலியுறுத்தப்பட்டதை இங்கே நாம் நினைவு கொள்ள வேண்டும். ஆகவே நாம் அந்த அடிப்படையிலேயே இரண்டு விடயங்களை யும் சமாந்தரமாகச் செயற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டு வருகிறோம்.

அரசியற் தீர்வைப் பற்றிச் சொல்லிக்கொண்டு, மக்களுடையநாளாந்த வாழ்க்கைப் பிரச்சினையைப் பற்றி அக்கறைப்படாமலிருக்க முடியாது. அல்லது மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளையும் அதற்கான அபிவிருத்தியையும் பற்றிப் பேசிக் கொண்டு அரசியல் தீர்வில் அக்கறையில்லாமல் இருக்க முடியாது. ஆனால், இங்கே பல அரசியல் தரப்புகளும் ஏதோ ஒன்றை மட்டுமே எடுத்துக் கொண்டு, அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றமையை நீங்கள் அறிவீர்கள். அப்படி ஏதோ ஒன்றுடன்மட்டும்நின்றுகதைத்தவர்கள், இப்பொழுதுவந்துள்ளஉள்ளூராட்சித் தேர்தலில் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக திடீரென அபிவிருத்திகளைப் பற்றியும் கதைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். வீதிகளை நிர்மாணிப்போம், வீடு களைக் கட்டித்தருவோம், பூங்காக் களை உருவாக்குவோம், நகரத்தை எழிலாக்குவோம், கிராமங்களைச் சொர்க்கபுரிகளாக்குவோம் என்றெல்லாம் வாக்குறுதிகளை அள்ளி வழங்குகிறார்கள். இது தேர்தலுக்கான வார்த்தைகள் என்பதை மக்களாகிய நீங்கள் நன்றாகவே அறிவீர்கள். நாங்கள் எப்போதும் சொல்வதையே செய்கிறோம். செய்வதையே சொல்கிறோம். ஆகையால் தான் மக்கள் மத்தியில் எமக்கான ஆதரவுத் தளம் பெருகி வருகிறது. மக்களின் நம்பிக்கைக்குரிய தரப்பினராக நாம் இன்று மாறியிருக்கின்றமைக்கு இதுவே காரணமாகும். உங்களுடைய இந்த நம்பிக்கையையும் இந்த மதிப்பையும் நாம் நிச்சயமாகத் தொடர்ந்தும் பேணுவோம். எங்களுடைய அர்ப்பணிப்பான உழைப்பின் மூலம் உங்களுடைய வாழ்க்கையையும் உங்களுடைய பிரதேசங்களையும் முன்னேற்றுவோம். அதற்கான சிறந்த அணி எங்களிடம் உள்ளது. நாங்கள் அரசியற் போராளிகளாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். சமூக மாற்றத்துக்கான போராளிகளாகவும், அரசியல் விடுதலைக்கான போராளிகளாகவும் செயற்பட்டு வருகிறோம். எங்களால்தான் உண்மையான மாற்றங்களை உருவாக்க முடியும் என்று மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

ஆகவேதான் மக்களின் ஆதரவுத்தளம் எமக்குப் பெருகிக் கொண்டிருக்கிறது. இந்த மாபெரும் ஆதரவின் மூலமாக நாம் போரிலே அழிவடைந்த கிளிநொச்சி மாவட்டத்தை எல்லோரும் ஆச்சரியப்படத் தக்க வகையில் கட்டியெழுப்புவோம். மக்களின் பங்கேற்புடன் இதைச் சாத்தியமாக்குவோம் – என்றார். (ஐ)

# ஐ.தே.கவின் ஆண்டு விழா இன்று காலை கொழும்பில்

கொழும்பு, ஜன.07

ஐக்கிய தேசியக் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு கெம்பல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கட்சித் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

கட்சியின் 70 வருட நிறைவு நிகழ்வுகளைக் கடந்த செப்ரெம்பர் மாதம் இரத்தினபுரியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும், சீரற்ற காலநிலையால் அந்த நிகழ்வு நடைபெறவில்லையெனத் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

# அசோக ரண்வல கைது; அறிக்கை கோரும் சாகல

கொழும்பு, ஜன.07

ஜே.வி.பியின் மாகாண சபை உறுப்பினர் அசோக ரண்வல கைது செய்யப்பட்டமை தொடர்பில் உடனடியாக விசாரித்து அறிக்கை சமர்பிக்குமாறு சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சப்புகஸ்கந்த பொலிஸ் நிலையத்தின் குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரியை அச்சுறுத்தினார் எனக் கூறி, அசோக ரண்வல கைது செய்யப்பட்டிருந்தார்.

பிரதேசத்தில் உள்ள இளைஞர் ஒருவரின் பிரச்சினை சம்பந்தமாக பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற தான் பொலிஸ் பொறுப்பதிகாரியால் தாக்கப்பட்டார் என மேல் மாகாண சபை உறுப்பினர் அசோக ரண்வல குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மொரகஹகந்தை நீர்த்தேக்க திறப்பு விழா நிகழ்வு நாளை

மொரகஹகந்தைநீர்த் தேக்கத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையில் நாளைதிங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டில் இடம்பெறவுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

மொரகஹகந்தை நீர் விநியோகத்திட்டம் வட மத்தி, வடமேல் மாகாணங்களின் விவசாய மேம்பாட்டுக்கு நேரடியாகப் பங்களிப்பு செய்வதுடன், 25 மெகாவோட்ஸ் மின்சாரத்தைத் தேசியமின்வலைப் பின்னலில்ஒன்றிணைக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் மஹாவலி அபிவிருத்தி திட்டத்திற் கூடாக நீரைப் பெற்றுவந்த ஒரு இலட்சம் ஹெக்ரேயர் நிலப்பரப்பு இன்னும் 82000 ஹெக்ரேயரால் அதிகரிக்கிறது.

மொரகஹகந்தைநீர்த் தேக்கத்திற்குள்நீரை உள்வாங்கும் நிகழ்வு, ஒரு தேசிய நிகழ்வாக நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சிரேஷ்ட சிங்கள நடிகையுடன் பிரதமர் ரணில் அசத்தல் நடனம்



இலங்கையின் சிரேஷ்ட நடிகையொருவருடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆடிய அசத்தல் நடனக் காட்சி சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற திருமண வைபமொன்றின்போதே, பிரதமர் இவ்வாறு நடனமாடியுள்ளார்.

சிங்களத் திரையுலகின் மூத்த நடிகையும், பிரதமரின் நெருங்கிய உறவினருமான ஐராங்கனி சேரசிங்கவுடனேயே அவர் அசத்தல் நடனமாடியுள்ளார். (ஐ)

# மேம்பாலம் திறப்பு நிகழ்வில் அரசியல்வாதிகள் வேண்டாம்

## டிரான்ஸ்பரன்ஸி இன்ரர்நஷனல் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.07

இராஜகிரிய மேம்பாலம் திறப்பு நிகழ்வு தேர்தல் ஆணைக்குழுத் தலைவரால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு அமைய இடம்பெறவேண்டும் என டிரான்ஸ்பரன்ஸி இன்ரர்நஷனல் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த நிறுவனத்தின் அரசியல் பிரிவினால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் இராஜகிரியவில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலம் திறக்கப்படுவதாயின், அதற்காக நடத்தப்படும் விழா அரசியல் கட்சிகளினதும், அரசியல்வாதிகளினதும் பங்குபற்றல் இன்றி இடம்பெறவேண்டும் எனவும் அது சுட்டிக் காட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir






# ட்ரம்ப் – கிம்மின் 'டுவிட்டர்' போர்!

2017 ஆம் ஆண்டின் 'ட்விட்டர் கிங்' விருது கொடுக்கவேண்டு மெனில், அதற்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப்தான் மிகப் பொருத்தமானவர்! அமெரிக்க அதிபரான முதல் தன்னிடம் சிக்கியவர்களோடு மோதிக் கொண்டிருக்கிறார். அவரது டுவிட்டர் பர பரப்புகள் இங்கே...!

ட்ரம்பின் டுவிட்டர் சண்டைகளில் மிகவும் ஹாஸ்யமான சண்டை, கடந்த ஆண்டு அமே சான் நிறுவனத்துடனான சண்டைதான். அமே சான் நிறுவனத்தின் ஒன்லைன் விற்பனை யால், ஒழுங்காக வரி செலுத்தும் அமெரிக்கச் சில்லறை விற்பனையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள் எனவும், வேலை வாய்ப்பை ஒழித்துக்கட்டுகின்றனர் எனவும் அமேசான் மீது கடுமையாகக் குற்றஞ்சாட்டி னார் ட்ரம்ப். அவரது ட்வீட் வந்த சில மணி நேரத்தில் அமேசானின் விற்பனை பெரும் சரிவைக் கண்டது. ட்ரம்புக்குக் கொஞ்சமும் சளைக்காத அமேசான் நிறுவனம், ட்ரம்பின் ட்வீட்களில் பிரச்சினைக்குரிய 10 டுவீட்களை டொய்லெட் பேப்பரில் பிரின்ட் செய்து, நூதனமுறையில் பதிலடி கொடுத்தது. இதன்மூலம் 'ட்ரம்பின் ட்வீட்டுகள் இதற் குத்தான் லாயக்கு' எனச் சொல்லாமல் சொன்னது. டொய்லெட் பேப்பர்கள் வெளியான சில மணி நேரத்தில் பரபரப்பாக விற்பனையானமையால், கூடுதலாகத் தயாரித்துத் தள்ளினார்கள்.

அமெரிக்காவில் நடைபெற்ற தேசியக் கால்பந்து லீக் ஆட்டத்தின்போது ஒலிக்கவிடப்பட்ட தேசியகீதத் துக்கு மரியாதை தரவில்லை எனக் கூறி, கால்பந்தாட்ட வீரர்களுக்கு எதிராகக் கடுமையான ட்வீட்டைப் பதிவு செய்தார். 'தேசியகீதத்துக்கு மரியாதை தராதவர்களைச் சுட்டுத்தள்ள உத்தரவிடுவேன்' என ஆக்ரோஷமாகக் குறிப்பிட்டார்.

கடந்த ஓகஸ்ட் மாதம், 'தீவிரவாத இயக்கங்களுக்கு பாகிஸ்தான் உதவி செய்வதை உடனடியாக நிறுத் திக்கொள்ள வேண்டும்' என ட்ரம்ப் குற்றஞ்சாட்டியிருந் தார்.

சமீபத்தில், 'கடந்த 15 ஆண்டுகளாக அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு 2.1 லட்சம் கோடி ரூபாய் வரை உதவி செய்துள்ளது. இதற்கு கைம்மாறாக பாகிஸ்தான் பொய், வஞ்சகத்தைத்தான் திருப்பித்தந்துள்ளது. பாகிஸ்தான், எப்போதுமே தீவிரவாதிகளுக்குச் சொர்க்கபூமியாகத் திகழ்கிறது. பாகிஸ்தானுக்கு எங் கள் நாட்டில் உள்ள தலைவர்களைப் பார்த்தால் முட் டாள்கள் போலத் தெரிகிறதா?' எனக் கடுமையாக ஒரு ட்வீட்டைப் பதிவுசெய்து, பாகிஸ்தானுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்தார்.

உடனே பாகிஸ்தான், தன் நாட்டின் அமெரிக்கத் தூதரிடம் கண்டனத்தைப் பதிவுசெய்தது. 'ட்ரம்பின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது' என பாகிஸ்தான் வெளி யுறவுத் துறைச் செயலாளர் தெரிவித்தார். அத்தோடு, இது குறித்து விளக்கம் அளிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். அதாவது திடீர் மோதல்தான். ஆனால், வடகொரியாவுடனான மோதல் தொடர்கதையாகி, தற்போது உச்சத்தைத் தொட்டிருப்பதுதான் வேதனை.


வடகொரிய அரசு, 'என் வழி... தனி வழி' என்பது போல், யார் குறித்தும் கவலைப்படாமல் தொடர்ச்சி யாக அணு ஆயுதச் சோதனைகளை நடத்திவந்தது. ட்ரம்ப் அமெரிக்க அதிபரானதும் வடகொரியா மீது தனிக் கவனம் செலுத்தினார். தென் கொரியாவின் ஆதரவோடு எல்லையில் தனது போர்க்கப்பல்களைக் கொண்டுவந்து நிறுத்தியது அமெரிக்கா. உடனே 'அமெரிக்க அரசின் ஆக்கிரமிப்புத் தொடர்ந்தால், அணு ஆயுதத் தாக்குதல் நடத்துவோம்' என்று வட கொரியா எச்சரித்தது.

இந்தச் சூழலில் கடந்த 2016, ஜூலை மாதத்தில் ட்ரம்ப் தனது ட்வீட்டில், வடகொரியாவுக்கு எதிராக அமெ ரிக்கா அணு ஆயுதப்போர் நடத்தப்போவதாக பதிலடி கொடுத்தார். இவரது திடீர் அறிவிப்புக்கு, அமெரிக்க இராணுவத்தின் தரப்பிலேயே எதிர்ப்புக் கிளம்பியது. தங்களிடம் எந்தவித ஆலோசனையும் நடத்தாமல் அறிவித்ததாக இராணுவத் தளபதி கோபித்துக்கொண் டார். ஆனால், அவரது ட்வீட்டை வடகொரியா ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

ட்ரம்ப் விடுவதாகயில்லை. ஓகஸ்ட் மாதத்தில் வடகொரியாவுக்கு மீண் டும் எச்சரிக்கைவிடுத்தார். யாருமே எதிர்பாராதவிதமாக ஜப்பானுக்கு அருகில் அமெரிக்காவுக்குச் சொந்த மான குவாம் தீவின் மீது வடகொரியா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. அந்த ஏவுகணை ஜப்பானின் வான் பகுதி வழியே திடீரென கடந்து சென் றதைப் பார்த்த ஜப்பானியர்கள், பீதி யிலும் போரப்பதற்றத்திலும் உறைந் தனர். உலக நாடுகள் அனைத்தும் அதைக் கண்டித்தன. ஐ.நா. சபையும் தன் பங்குக்கு வடகொரியாவைக் கண்டித்தது.

இப்படியே தொடர்ந்து முட்டிமோ திக் கொண்டிருந்த நிலையில், 'அமெ ரிக்காவை அழிக்கக்கூடிய அணு ஏவுகணையின் பட்டன், எந்த நேரமும் அழுத்துவதற்காக எனது மேசையில் தான் காத்திருக்கிறது' என வட கொரியாவின் கிம் பரபரப்பாக அறிக்கைவிட்டார். அதைப் பொருட்படுத்தாமல், 'என்னிடமும் ஒரு பட்டன் உள்ளது. அது அவரு டைய ஏவுகணையைவிட அள வில் பெரிதாகவும் சக்திவாய்ந்த தாகவும் இருக்கும் என்பதை அவரிடம் சொல்லுங்கள்' என ட்ரம்ப் பதிலடி கொடுத்தார். ஆக, இந்த இரண்டு கைப் பிள்ளை களின் சின்னப் பிள்ளைத்தன மான விளையாட்டை மொத்த உலகமும் வேடிக்கை பார்க்கும் சூழல் நிலவுகிறது. இவர்களின் 'டுவிட்டர்' போர் விளையாட்டு, வினையாகக் கூடாது என்பதே அனைவரின் எதிர்பார்ப்பும்!





## விபரீத ஆசை

தாய்லாந்தைச் சேர்ந்த பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை செய்துகொண்ட ஒரு பெண், சமீபத்தில் சில படங்களை வெளி யிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கி றார். மூக்கு சீர்திருத்தம் செய்வதற்காகக் குறைந்த கட்டணம் கேட்ட ஒரு மருத்துவமனையில் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை செய்துகொண்டார். மூக்கில் வைத்த அந்த சிலிக்கன் தகடு எப்படியோ நகர்ந்து இரு புருவங்களுக்கு இடையில் சென்றுவிட்டது. இது பார்வைக்கு நன்றாகப் புலப்படுகிறது.

தன் பெயரையோ, சத்திரசிகிச்சை செய்துகொண்ட மருத்துவமனையின் பெயரையோ வெளியிடாத இந் தப் பெண், இந்தப் படங்களை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை செய்வ தற்கு முன் யோசித்துக் கொள்ளுங்கள். குறைவான கட்டணத்துக்கு ஆசைப்பட்டு, என்னைப் போல சிக்கலில் மாட்டிக்கொள்ளாதீர்கள்.

மருத்துவமனைக்குச் சென்று என் நிலைமை யைச் சொல்லி, சரி செய்து தரும்படி கேட்டேன். ஆனால், மருத்துவமனை என்னை நிராகரித்துவிட்டது என்று சொல்லியிருக்கிறார். ஏதோ தவறு ஏற்பட்டு நோய்த்தொற்றால் இது நிகழ்ந்திருக்கலாம். அதனால் இவரது உடல் சிலிக்கானை ஏற்றுக்கொள்ளாமல் வெளியே அனுப்பியிருக்கிறது. அந்தப் பெண் விரும் பினால் நாங்கள் இதைச் சரி செய்துவிடுவோம். யாரோ செய்யும் ஒரு தவறால் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையே தவறு என்று நினைத்துவிடக் கூடாது. இலவசமாக அந்தப் பெண்ணுக்கு உதவத் தயாராக இருக்கிறோம் என்கிறார் ஓர் அறுவை சிகிச்சை மருத் துவர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சீரழிக்கும் சீதனம்

கணவனுடைய வீட்டில் வாழப் போகும் தமது மகள் அங்கு எந்த வித மான குறைகளுமற்று, பரிபூரணமாக தன் கணவனுடன் சந் தோஷமாக வாழவேண்டுமென் பதற்காக, பெண்ணின் பெற்றோரால் அன்பளிப்பாக வழங்கப்படும் பொருள் களே கால நகர்வில் 'சீதனம்' என்ற வடிவத்தைப் பெற்று, பல இளம் பெண்களின் வாழ்வை இன்னும் சீர ழித்துக் கொண்டிருக்கின்றது.

ஒருபெண்ணிடம்வரையறையற்ற விதத்தில் சீதனம் பெற்றுக்கொள்ளும் ஆண், அவளின் கழுத்தில் மங்கல நாண் பூட்டிய பின்பு, தனது 'ஆண்' என்ற ஆளு மைத் தகுதிகள் அனைத் தையும் அந்தப் பெண்ணின் பார்வை யில் இழந்தவனாகி விடுகிறான்.

பார்வைக்கு லட்சணமாக இருக்கும் ஒரு பெண், நல்லகுணவியல்புக ளோடு அமைந் திருந்தாலும் கூட, வசதியற்ற பொருளாதார சூழ்நிலை அந்தப் பெண்ணின் குடும்பத்துக் குள்ளே நிலவுமாக இருந்தால், அவள் அந்த ஊரின் கண்களுக்கு ஒரு பார் வைப் பொருளாகவும் காட்சிப்படுத் தப்பட்ட வளாகவும் வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற் படுகிறது.

அதேவேளை, இன்னொரு புறத் தில் பார்க்கும்போது - அழகற்று, குணம் நடைகளில் குற்றம் குறைக ளோடு இருப்பவர்களிடம் செல்வச் செழிப்பு மிதமிஞ்சியிருக்குமானால், அவர்களுக்கு ஏதோ வகையில் திரு மண வாழ்க்கை அமைந்துவிடுகிறது.

இங்கே - அவளுக்கான வாழ்க்கை யைத் தீர்மானிக்கிறது சீதனம் என்ற பெயரில் ஆண் கேட்கின்ற பெருந் தொகைப் பணம்!

பார்வைக்கு லட்சணமற்று, தங் களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத குடும்ப சூழ லில் வாழும் வயது வந்த ஒரு பெண் ணுக்கு, ஆண்கள் கேட்கும் சீதனத் தொகையை வழங்கி, வாழ்வை அமைத் துக் கொடுப்பது என்பது, அந்தப் பெண்ணின் பெற்றோருக்கு இய லாதது‌ம், கையை மீறிய காரியமாகவும் அமைந்து விடுகின்றது.

அதுவும் - ஒரு குடும்பத்தில் மூன்று அல்லது நான்கு பெண் சகோதரி களோடு கூடிய குடும்பமாக இருப்பின், அக் குடும்பத்தின் நாளாந்த வாழ் வாதாரத்தேடலுக்கு உழைக்கும் உழைப்பைவிட, அப்பெண்க ளின் எதிர்கால வாழ்வுக்காக, அதாவது ஆண்கள் கேட்க இருக்கும் சீதனப் பணத்துக்காக அக்குடும்பத்தின் தலை வனும் பெண்களின் தந்தையுமாகி யவன் மேலதிகமாகத் தனது ஓய்வு உறக்கத்தைத் துறந்து உழைக்க வேண் டிய நிலைக்கு ஆளாகின்றான்.

நாளடைவில் அவனது உடலும் உள்ளமும் பலவீனமடைந்து கொள்ள ஆரம்பிக்கும் போது அத்தந்தை குறு கிய வயதுக்குள்ளேயே இயலாதவ னாகிப் போகின்றான்.

சீதனம் என்பது, திருமணவயதில் வாழ்வுக்குள் உள் நுழையக் காத்திருக் கும் பெண்களை மட்டுமன்றி, அந்தப் பெண்களைப் பெற்ற வர்களையுமே பாதிக்கச் செய்து விடுகிறது.

பெண்களிடம் சீதனம் வாங்கும் நடை முறையானது ஒரு குடும்பத்தில் உள்ள பெண்களை மட்டுமல்ல, பொறுப்புணர்வு மிக்க அந்தப் பெண் களோடு கூடப் பிறந்த ஆண் சகோத ரர்களின் வாழ்வையுமே வலு விழக்கச் செய்து விடுகிறது.

வறுமைச் சூழலுக்குட்பட்ட குடும் பத்தில் மூத்தவர்கள் மூவரும் பெண் களாகப் பிறந்து, நான்காவதாக ஆண் சகோதரர்களாக இருப்பவர்கள் தமது மூத்த பெண் சகோதரிகள் மூவரும் திருமண பந்தத்திற்குள் இணையும் வரைக்கும், அவர்கள் தங்களுக்கான வாழ்வுக்குக் காத்திருக்க வேண்டிய வர்களாகிறார்கள். அல்லது அந்த மூன்று சகோதரிகளின் எதிர்கால வாழ்வுக்காக உழைத்துக் கொடுக்கவும் வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் ஆளாகிறார்கள்.

இதேவேளை, குடும்பத்தில் தலைப் பிள்ளை ஆணாகப் பிறந்து, அவருக் கடுத்த தாகப் பெண்கள் சகோதரிகளா கப் பிறப்பார்களேயானால், திருமண பந்தமென்று வரும்போது மூத்த ஆண் சகோதரன் ஊடாக இன் னொரு பெண்ணிடம் நிறையச்சீதனம் வாங்கி அந்த ஆண் சகோதரனின் தங்கை களுக்குச் சீதனமாகக் கொடுத்து எப் படியோ வாழ்க்கையை அமைத்துக் கொடுத்து விடுகிறார்கள் சில பெற் றோர்கள்.

இந்தச் செயற்பாடு, 'இறால் போட் டுச் சுறா பிடிப்பது' போன்று எவ் வகை யிலும் ஏற்றுக்கொள்ள முடியாத தொன்று.

காரணம் -

கூடப் பிறந்த தங்கைகளுக்குச் சீதனம் கொடுக்க வேண்டுமென் பதற்காக, அத்தங்கைகளின் அண்ணன் இன்னொரு பெண்ணிடம் பேரம்பேசி சீதனம் அறவிடு வது எந்த விதத்திலும் ஏற்கத்தக்கதல்ல. ஏனெனில், அண்ண னின் குடும்பத்துக் குள்ளான பொரு ளாதார நெருக்கடி போன்ற நிலைமை அண்ணனுக்கு மனைவியாக வரும் அந்தப் பெண்ணின் குடும்பத்திலும் இருக்கக்கூடும்.

அத்தோடு, நாளடைவில் அண்ண னின் குடும்பத்துக்குள் ஒரு சிறு பிரச் சினை தலைதூக்கும்போது, அண்ண னின் மனைவி - அதைக் குறிப்பிட்டுப் பேசுபவளாக இருந்தால், பிரச்சினை இன்னும் பெரிதாகி, உறவு முறைகளைச் சீர்குலைப்பதோடு, உளவியல் தாக் கங்களையும் ஏற்படுத்தி விடும்.

ஆணே பெண்ணுக்கும், பெண்ணே பெண்ணுக்கும் பகையாளியாகி விடு கின்றமை இந்தச் சீதனம் வழங்கும் நடைமுறைகளினால்தான் என்பது தெளிவாகி விடுகிறது.

உழைக்கக்கூடிய தேக வலுவுள்ள ஓர் ஆணுக்கு 'சீதனம்' என்ற பெயரில் பணம், நகைகள் மற்றும் வீடுவளவு என்பன கொடுக் கப்பட வேண்டுமா?

மணவறையில் பல மனிதர்கள் முன் பாக அக்கினியைச் சாட்சியாக வைத்து, ''இவளை என்றும் கைவிடேன்...'' என்று சத்திய வாக்குக் கொடுக்கும் ஆண், எதற்காக அந்தப் பெண்ணிடம் சீதனத்தை எதிர்பார்க்க வேண்டும்?

கூடப் பிறந்த பெண் சகோதரங் களுக்கு, சீதனம் கொடுக்க வசதி யில்லாவிட்டால், அதே சீதனத்தை ஓர் ஆண் எப்படி இன்னொரு பெண் ணிடம் எதிர்பார்க்க முடியும்?

பெண்ணின் பெற்றோர் - ''எங்க ளால் எங்கள் மகளுக்கு இவ்வளவு தான் தர முடிந்தது...'' எனக்கூறித் தருவதை ஏற்பதை விடுத்து இவ்வ ளவு தந்தால் தான் இந்தக் கல்யாணம் நடக்கும் ... எனக் கூறும் ஆண்களை யும், அந்த ஆண்களின் பெற்றோர்க ளையும் எந்த ரகத்துக்குள் அடக்கலாம்?

பெண் வீட்டாருடன் பேரம் பேசித் திரு மணம் செய்ய முயலும் இவர்கள் எல்லாம் ஆண்கள் தானா?

> **பார்வைக்கு லட்சண மற்று, தங்களது அடிப்படைத் தேவை களைப் பூர்த்தி செய்ய முடியாத குடும்ப சூழலில் வாழும் வயது வந்த ஒரு பெண்ணுக்கு, ஆண்கள் கேட்கும் சீதனத் தொகையை வழங்கி, வாழ்வை அமைத் துக் கொடுப்பது என்பது, அந்தப் பெண்ணின் பெற்றோருக்கு இய லாதது‌ம், கையை மீறிய காரியமாகவும் அமைந்து விடுகின்றது.**

இவ்வாறாக, பல வினாக்கள் பாதிக் கப்பட்ட பெண்களிடமிருந்து எழுந்தி ருக்கின்றன. தற்போதும் எழுந்த வண்ணமே உள்ளன.

சீதனம் என்பது இப்பத்தியின் முற்பகுதியில் கூறப்பட்டிருப்பது போன்று, கணவனுடைய வீட்டில் வாழப்போகும் தமது மகள் அங்கு எந்த விதமான குறைகளுமற்று, பரிபூரண மாகக் கணவனுடன் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதற்காகப் பெண் ணின் பெற்றோரால், அன்பளிப்பாக வழங்கப்படும் பொருள்களே கால நகர் வில் மனிதமற்ற மனிதர்களால் 'சீத னம்' என்ற சொல்லுக்குள் உள்ளடக்கி இன்று பல பெண்களின் வாழ்வை நிமிரவிடாமலும், சீரழித்தும் கொண் டிருக்கின்றது என்பது வெளிப்படை யான விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

2017ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மார்கழித் திங்கள் 23ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஷஷ்டித்திதி மாலை 4.04 மணி வரை பின்னர் ஸப்தமி. நட்சத்திரம்: உத்தரம் இரவு 1.09 மணி வரை பின்னர் அத்தம். அமிர்த சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 4.36 மணி முதல் 6.03மணி வரை

**சுபநேரம்** - காலை 9.35 மணி முதல் 11.05மணி வரை

**திவசம் செய்ய வேண்டியதிதி**- மார்கழி மாத தேய்பிறைஷஷ்டி

**பிறந்தநட்சத்திர வழிபாடு**- உத்தரம்.

**சந்திராஷ்டம நாள்** - அவிட்டம் 3ஆம்,4ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1ஆம்,2ஆம்,3ஆம் பாதங்களில் பிறந் தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

**07.01.2018**
**13.01.2018**

**கணிப்பு:** 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)

## மேஷம்:

ஆக்கபூர்வமான வாரம். கையில் பணம் சரளமாகப் புழங்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வியாபாரத் தில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் ஏற்படும்.

நண்பர்கள், உறவினர்களின் சகாயம் கிட்டும். தூரதேசத்திலிருந்து நற் செய்திகள் வரும். விவசாயத்தில் பயிர் கள் செழிப்படைந்து நல்ல வருமானத் தைத் தரும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள். இது வரை காலம் இருந்து வந்த தடை நீங்கித் திரு மணம் கைகூடும்.

## ரிஷபம்:

அனுகூலமான வாரம். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு மேம்படும். உறவினர்கள், நண்பர்களின் உதவி ஒத்தாசை கிடைக்கும். வேலையற் றோருக்கு திறமைக்குத் தகுந்த வேலை கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். மாணவர்களுக்கு வெளிநாடு சென்று உயர்கல்வி கற்கும் வாய்ப்பு அனுகூலமாகும். திருமணமாகா தோருக்கு அதற்கான வாய்ப்பு வந்து சேரும். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கௌரவப்பதவிகள் வந்து சேரும். கொடுக் கல், வாங்கலில் திருப்தி உண்டாகும்.

## மிதுனம்:

யோசனையான வாரம். பணவரவு குறையும். குடும் பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். எதிர்பாராத பணவிரயங்கள் ஏற்படும். செலவுகளைச் சமாளிக்க முடியாமல்திணற வேண்டிய நிலை ஏற்பட லாம். வியாபாரிகள் சில சிரமங்களை எதிர் நோக்க வேண்டி வரும். உத்தியோகத்தர் களுக்கு பொறுப்புக்கள் அதிகரிக்கும். உறவினர்களின் வருகையால் செலவு அதிகமாவது கவலை தரும். முக்கியமான முடிவுகளை நிதானித்து எடுப்பது நல்லது. கொடுக்கல்,வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும்.

## கடகம்:

சமபலன்கள் காணப்படு கின்றன. பொருளாதாரம் சமமாக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டா கும். வியாபாரத்தில் சமலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் பொறுப்புக்களும், அலைச்சலும் அதிகரிக்கும்.

சக உத்தியோகத்தர்களின் உதவிகள் குறையும். வெளிநாட்டு உறவினர் வரவால் களிப்பும், செலவுகளும் அதிகரிக்கும். வீட்டைத் திருத்தி அமைக்கவும், வாகனச் செலவுகளும் காணப்படும் கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தூரப்பயணங் களைத் தள்ளிப் போடுவது நல்லது.

## சிம்மம்:

இனிமையான வாரம். பணம் தாராளமாகப் புழங் கும். குடும்பத்தில் இனிய சூழல் நிலவும். உறவினர்கள் நண்பர்கள் ஒத்து நடப்பார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். நீண்ட கால நண்பர் ஒருவரைச் சந்தித்து மகிழும் பாக்கியம் கிட்டும்.

பெண்களுக்கு திருமண காரியங்கள் கனிந்து வரும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்றுசேரும் வாய்ப்பு உண் டாகும்.சகோதர வழியால் எதிர்பாராத நன்மை கிட்டும். புதிய வேலை வாய்ப் புகள் சிலருக்குக் கிடைக்கும்.

## கன்னி:

மேன்மையான வாரம். பொருளாதாரம் ஏற்றமடை யும்.குடும்ப உறவு மேம் படும். குடும்பத்தில் பெண் களுக்கு புதிய வஸ்திரங்கள் ஆடை, ஆபர ணங்கள் சேர்க்கையால் மகிழ்ச்சியும் உற் சாகமும் ஏற்படும். செய்யும் தொழில் மேன்மை உண்டாகும்.

உத்தியோக உயர்வுகள் தடையின்றிக் கிடைக்கும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். மாணவர்களின் திறமைகள் பளிச்சிடும். தொழிலாளருக்கு தொடர்ந்து தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். அரச வழியால் ஆதாயம் பெற வாய்ப்பு உண் டாகும்.

## துலாம்:

அலைச்சல் மிகுந்த வாரம். தொழில் விஷயமாய் நிறைய அலைய வேண்டி வரும். சிலர் படித்ததகையோடு வேலை தேடி அலைவார்கள். இடமாற்றத் தால் குடியிருக்க வாடகை வீடு தேடித் திரிவார்கள்.

மாணவர்கள் தம் வகுப்புநேர ஆசிரி யரைத் தேடித் திரிவார்கள். சிலர் வெளி நாடு செல்லும் எண்ணத்தில் முகவர்களின் உதவியை நாடுவார்கள். சிலர் கொடுத்த கடனை மீளப் பெறுவதற்கு அலைந்து திரிவார்கள். சிலர் உடல்நலக் கோளாறி னால் மருத்துவ உதவியை நாடுவார் கள்.

## விருச்சிகம்:

நன்மையான வாரம். பொருளாதாரம் மேன்மை அடையும். குடும்பஒற்றுமை மகிழ்ச்சி தரும். உத்தி யோகத்தர்களுக்கு எதிர்பாராத பதவி உயர்வு ஏற்படும். தொழிற்பிரிவினர் முன் னேற்றம் அடைவார்கள்.

குடும்பத்துடன் சிலர் சுற்றுலாப் பய ணத்தை மேற்கொள்வார்கள். அரச வழி யால் நன்மை உண்டாகும். மாணவர் கல்வியில் உயர்வடைவார்கள். வியாபா ரத்தில் வளர்ச்சி நிலை காணப்படும். கொடுக்கல்,வாங்கலில் இணக்கம் காணப் படும்.

## தனுசு:

சமபலன்கள் உள்ள வாரம். பொருளாதாரம் ஏற்றமும்,இறக்கமுமாக இருக் கும். குடும்பத்தில் ஓரளவு நல்லிணக்கம் காணப்படும். கடன் கொடுப் பதில், வாங்குவதில் தொல்லைகள் ஏற்பட லாம். பணவிஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது.

உத்தியோகத்தர் சிலருக்கு விருப்ப மில்லாத இடமாற்றம் கிடைக்கும். சிலருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு சீரடையும். பதவி உயர்வு கிடைக்கத் தாமதமாகும். தொழிற் பிரிவினரின் வளர்ச்சி தடைப்படக் கூடும். தூரப்பிரயாணங்களைத் தவிர்ப்பது நல்லது.

## மகரம்:

உயர்வான வாரம். பணப் புழக்கம் தாராளமாக இருக் கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் நல்லமுன்னேற் றத்தைத் தரும். விவசாயிகள் வங்கிகளின் உதவியால் கமச்செய்கையை விரிவு படுத்துவார்கள்.சகோதரஉறவு வலுப்படும்.

பிரிந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார் கள். வெளியூர்களுக்குச் சென்றவர்கள் மீண்டும் சொந்த ஊர் திரும்புவார்கள். நீண்டகாலக் கனவுகள் நனவாகும். திரு மணத் தடை விலகும். விரோதிகள் ஓடி ஒளிவார்கள். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும்.

## கும்பம்:

கவலையான வாரம். தன வரவுகுறையும். உடல்நிலை பாதிப்புற்று மருத்துவச் செலவுகள் உண்டாகும். புதியமுதலீடு செய்வதில் முன்னெச்சரிக்கை தேவை. செய்தொழிலில் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.

சிலருக்கு செய்யும் தொழில் இழக்க வேண்டி வரலாம். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். மாணவர்களின் கல்வியில் தடை உண் டாகும். நண்பர்கள்,உறவினர்களால் வீண்தொல்லைகள் உண்டாகும்.

## மீனம்:

விருத்தியான வாரம். பொருளாதாரம் விருத்தி அடையும். குடும்பத்தில் இணக்கமான போக்கு காணப்படும். இது நாள்வரை தீராத நோயால் அவதிப்பட்ட வர்கள் நோய் நீங்கி ஆரோக்கியமடை வார்கள்.

வியாபாரம் நன்கு அபிவிருத்தி அடை யும். செய்தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் அதி காரிகளின் அனுசரணையால் உயர்வு களைப் பெறுவார்கள். கடன்கள் தீரும். வரவேண்டிய பணம் வசூலாகும்.திரு மணத் தடை நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்கள் மட்டுமன்றி உயிரினங்களுக்கும் பயம் அவசியமானதே!

- ர.சீனிவாசன் -



பயப்படாத மனிதர்கள் இருக்க முடியுமா? பேய், பிசாசு குறித்த கற்பனைகளை மட்டும் இங்கே பயமாக குறிப்பிடவில்லை. உயரமான இடத்தில் நிற்கப் பயம், பாம்பைப் பார்த்தால் பயம், பூச்சிகளைப் பார்த்தால் பயம், இருள் என்றால் பயம் என்று பயம் என்பது நம் அன்றாட வாழ்வில் எப்போதும் இருக்கும் உணர்வுதான் இது.

திடீரென மின்சாரம் தடைப்பட்டால் கூட, ஏதோ ஓர் உருவம் வீட்டுக்குள் உலவுவது போன்ற பீதி ஏற்பட்டுவிடும். பலர் பயம் என்பதை ஒரு மனநோய் போன்று கணக்கிட்டாலும், இது எல்லோருக்கும் இருக்கும் ஒரு சாதாரண பிரச்சினைதான். பயத்தை ஒரு பிரச்சினை என்று சொல்வதே தவறுதான் என்றாலும், பலர் இதிலிருந்து விடுபட முயற்சிப்பதால் இதை அப்படியே அணுகுவோம்.

**பயம் ஏற்படக் காரணம் என்ன?**

பயத்தின் முக்கியக் காரணி அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று தெரியாத, புரியாத நிலையே! சுருக்கமா கச் சொன்னால், பயம் என்பது எதிர் காலத்தை நினைத்துத்தான். எதிர்காலம் என்பது இங்கே அடுத்த நொடி, அடுத்த நிமிடம், அடுத்த நாள், அடுத்தடுத்த வருடங்கள் என அனைத்துக்குமே பொருத்தும். நீங்கள் நிகழ்காலத்தில் இருக்க, உங்கள் எண்ணங்களோ எதிர் காலத்தில் இருக்கின்றது, அவ்வளவே!

ஓர் ஆபத்து ஏற்படப்போகிறது என்ற எண்ணம் உதித்துவிட்டாலே, பயம் என்பது இயல்பாகவே வந்துவிடுகிறது. இந்த உணர்வு பயம் என்று பொதுமைப்படுத்தப்பட்டாலும் கவலை, அச்சம், பதற்றம், மன அழுத்தம், படபடப்பு என்று வெவ்வேறு வகைகளாக இது வெளிப்படுகிறது. மொத்தத்தில், பயம் என்பது முழுக்க முழுக்க நம் மன ஓட்டம் மட்டுமே. அது வெறும் விபரீதக் கற்பனையால் விளைவது. ஆபத்து என்பது கட்டாயமாக இருப்பது என்று எடுத்துக்கொண்டாலும், அங்கே பயம் என்பது, எப்போதும் தவிர்க்கக்கூடிய ஓர் உணர்வு மட்டுமே.

மருத்துவ அறிவியல் ரீதியாகப் பயம் குறித்து ஆராய்ந்தால், ஸ்டாத்மின் (Stathmin) என்ற மரபணுதான் பயம் உருவாகக் காரணம் என்கின்றனர் விஞ்ஞானிகள். இதைக் கண்டறிய உதவியது வழக்கம் போல எலி ஒன்றை வைத்து நடத்திய சோதனைதான். எலிகள் பொதுவாக மிகவும் பயந்த சுபாவம் உடையவை. ஆபத்து பல கிலோமீற்றர்கள் தொலைவில் இருக்கிறது என்றாலே இங்கே பதற்றமாகி விடும். இந்த ஸ்டாத்மின் மரபணு நீக்கப்பட்ட எலிகள் மிகவும் வித்தியாசமாக செயல்படத் தொடங்கின.


எலிகளைப் பொதுவாக பயப்பட வைக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திய போது, அதற்கு இந்த எலிகள் அஞ்சவேயில்லை. அதேசமயம், எலியின் மற்ற செயல்பாடுகள், உடலியல் மாற்றங்கள், இவற்றிற்கெல்லாம் எந்த மாற்றமும் நிகழவில்லை. இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் அவ்வப்போது உருவாகும் மன அழுத்தம், ஆளுமைக் கோளாறு, கவலை மற்றும் அனைத்து வகை ஃபோபியாக்கள் குறித்துப் பல விஷயங்களைத் தெளிவுபடுத்தியது.

இந்த ஆராய்ச்சியில் பங்கெடுத்த ஆராய்ச்சியா ளர்களில் முக்கியமானவர், 2000 – மா வது ஆண்டில், மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு பெற்ற கொலம்பியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர். எரிக் கண்டெல்.



பயம் என்ற அந்த ஒற்றை உணர்வைத் தலைதூக்க வைக்க, நம் உடல் என்ன செய்கிறது? அது உருவாகும்போது, நம் உடலில் என்னென்ன மாற்றங்கள் நடக்கின்றன?

ஓடி ஒளிதல் (hiding), செயல் முடக்கம் (freezing), நடுக்கம் (shivering), அழுகை (crying) எனப் பயம் பல வகைகளில் வெளிப்பட்டாலும், செயல் முடக்கம் என்பது மட்டுமே பெரும்பாலும் நடக்கும். பயம் ஏற்படுத்தும் ஒரு



## ஆபத்தில் இருந்து எம்மை பாதுகாக்கின்றது அது!



காட்சியோ, கற்பனையோ, தோன்றிவிட்டால், செயல் முடக்கம் இயல்பாக வந்துவிடு கிறது. இதற்குக் காரணம், நம் பெரு மூளை புறணி (Cerebral Cortex). சிந்தனை மற்றும் செயலுக்குக்காரணமான மூளையின் இந்தப் பாகம், எப்போதும் நம் பாதுகாப்பு குறித்த கேள்விகளை எழுப்பிக் கொண்டே இருக்கும். ஒரு சிறிய பள் ளத்தைத் தாண்டுவதற்கு கூட, அதனிடம் அனுமதி பெற வேண்டும். தாண்டி விட முடியுமா என்று நீங்கள் மனதுக்குள் கேட்டுக்கொள்ளும் கேள்வி, இந்தப் புறணி கேட்கும் கேள்விதான். இதற்கு ஆதரவாகச் செயல்படுவது மூளையின் மற்றொரு பகுதியான அமிக்டாலா (amygdala). இதுதான் நம் உணர்ச்சிகளின் ஒருங்கிணைப்பு மையம்.

**பயம்**

ஓர் இருட்டான ஒற்றையடிப் பாதையை நீங்கள் தனியாக கடக்கும்போது, இது பாதுகாப்பான வழி தானா?, எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இதைக் கடந்துவிட முடியுமா?, இருட்டில் கண் ஒழுங்காகத் தெரியுமா? என்று நமக்குள் பல கேள்விகளை இந்தப் புறணி எழுப்பும். அந்தக் கேள்விகளில் ஏதோ ஒன்றுக்கு விடை இல்லையென்றாலும், உங்கள் இதயம் வழக்கத்துக்கு மாறாக வேகமாக துடிக்கத் தொடங்கும். அண்ணீர் எனப்படும் அட்ரினலின் (Adrenaline) உடலில் வேகமாக சுரக்கத் தொடங்கும். இது எல்லாம் உங்களை அந்தப் பாதையில் செல்ல விடாமல் தடுக்க உங்கள் மூளை நடத்தும் நாடகங்கள்.

அதையும் மீறி நீங்கள் அந்த இருட்டான பாதையில் மெதுவாக நடக்கத் தொடங்கினால், கை, கால்களில் நடுக்கம் ஏற்படத் தொடங்கும். அதையும் பொருட்படுத்தாமல் நீங்கள் தொடர்ந்தால், இப்போது மூச்சு விடுவதுகூட சிரமமாகத் தோன்றும். இருட்டில் ஏதோ ஓர் உருவம், வித்தியாசமான ஒலி, அல்லது ஒரு வித சலசலப்பு ஏற்படுவது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தும். நீங்கள் ஓடி விடலாமா என்று எத்தனிக்க, உங்கள் தோலிலுள்ள "pores' எனப்படும் சிறு துளைகள் திறந்து பயம் என்ற உணர்வை உடல் முழுவதும் பரப்பி, நடுக்கத்தை ஏற்படுத்துகிறது.

பேய், பிசாசு என்று பயம் ஏற்படுவதும் இதுபோன்ற ஒரு சமயத்தில் தான். இந்தப் பேய் பயம் தான் நம் பெருமூளை புறணியின் டிரம்ப் கார்ட்! அந்த எண்ணம் உதித்தவுடன் அந்த இருட்டில் நடந்து போக முடியாமல் பின்வாங்க வேண்டியதுதான்.

**பயமில்லாத மனிதர்கள் இருக்கின்றார்களா...?**

பெரும்பாலான மனிதர்களுக்கு இருக்கும் பயம் என்ற இந்த உணர்வு, உலகிலேயே அரிதிலும் அரிதாக வெறும் 400 பேர்களுக்கு இல்லையெனக் கூறுகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இதற்குக் காரணம் ஒருவித அரிதான மரபணுக் கோளாறு. அதன் பெயர் Urbach‡ Wiethe Disease. சமீபத்தில், அமெரிக்காவில் ரீனி என்ற குறியீடுடன் அழைக்கப்படும் ஒரு பெண்ணை குறித்து ஒரு செய்தி வந்தது. இவரின் அமிக்டாலா (amygdala) சேதமடைந்துவிட்டதால், இவரால் பயம் என்ற ஓர் உணர்வை உடல் முழுவதும் கடத்தவே முடியவில்லை.

துப்பாக்கி, கத்தி என எந்த ஆயுதத்தை வைத்து மிரட்டிய போதும், உயிருக்கு ஆபத்தான பல சம்பவங்கள் அரங்கேறிய போதும், இவருக்குப் பயம் என்பதே ஏற்படவில்லை. அவரின் கணவர், அவரைக் கொடுமைப்படுத்தி சாவின் விளிம்பு வரை சென்றபோது கூட, இவர் அசைந்து கொடுக்கவேயில்லை. சில சமயம், மூளையிலுள்ள திசுக்கள் அதிக வலுவடைவதால் கூட இந்தக் கோளாறு ஏற்படலாம் என்கின்றனர் மருத்துவர்கள்.

சரி, இப்படி பயமில்லாமல் இருப்பவர்கள் சூப்பர்ஹீரோக்கள் போன்று கொண்டாடப்பட வேண்டியவர்கள் தானே? பின்பு ஏன், இதை ஒரு நோயாக, ஒரு குறைபாடாக பார்க்கிறோம்? காரணம், பயம் என்ற உணர்வு, மனிதனுக்கு மட்டுமல்ல, எல்லா வகை உயிரினங்களுக்கும் மிகவும் அவசியமானது. அதுதான் நம்மை ஆபத்தை நோக்கி நகரவிடாமல் காக்கிறது. தொடர்ந்து வாழவைக்கிறது. எனவே, பயம் மிகவும் அவசியமானது. அதீத பயமும், ஃபோபியாக்களும் தான் பிரச்சினையே! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்





# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"

393

தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா

**ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டது எனக் கூறி, இஸ்ரேலிய விமானப்படை அண்மையில் காஸா பகுதியில் விமானத் தாக்குதல்கள் நடத்தியது, அதில் ஆறு குழந்தைகள் உட்பட 25 பலஸ்தீனர்கள் காயமடைந் தனர். ரொக்கெட் ஒன்று இஸ்ரேலிய நகரமான Sderot இல் வெடித்தது, அதில் யாரும் காயமடையவில்லை என்று Haaretz குறிப்பிட்டது.**

ஜெருசலேமை இஸ்ரேலின் தலை நகராக ட்ரம்ப் நிர்வாகம் அங்கீகரித் திருப்பது ஒரு திட்டமிட்ட ஆத்திரமூட் டலாகும். அதுவொரு சர்வதேச சட்ட மீறல், இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனர் களுக்கு இடையிலான சமாதானப் பேச் சுகளின் மூலமாக மட்டுமே அந்நகரின் அந்தஸ்து தீர்மானிக்கப்பட வேண்டு மென நீண்டகாலமாக பேணி வந்த சர்வதேச சட்டம், கிழக்கு ஜெருச லேமை இஸ்ரேல் சட்டவிரோதமாக இணைத்துக் கொண்டதையும் ஒரு போதும் அங்கீகரித்திருக்கவில்லை. இந்நகர்வானது, அமெரிக்காவும் அதன் ஏகாதிபத்திய கூட்டாளிகளும் பல தசாப்த காலமாக ஊக்குவித்து வந்த 'சமாதான நடைமுறை' மற்றும் 'இரு-அரசு தீர்வு' என்ற பாசாங்குத் தனமான நாடகம் முழுமையாக முடி வுக்கு வந்திருப்பதைப் பிரதிநிதித்து வம் செய்கிறது.

ஈரானின் அணுஆயுத நடவடிக்கை, 2015 உடன்படிக்கைக்கு இணங்கி உள்ளது என்று ட்ரம்ப் சான்றிதழ் அளிக்க மறுத்து இரண்டு மாதங்க ளுக்கும் குறைவான நாள்களில் வந் துள்ள, இந்த ஜெருசலேமின் அங்கீ கரிப்பு, மத்திய கிழக்கு எங்கிலுமான மோதல்களை பரந்தளவில் தூண்டி விடுகின்றதும் மற்றும் தெஹ்ரானு டன் ஒரு பிராந்திய போருக்குத் தயா ரிப்புச் செய்வதற்கும் அமெரிக்க ஏகாதி பத்திய தூண்டுதலின் பாகமாக உள் ளது. இந்த அறிவிப்பு, முன்னர் ஒப்புக் கொண்ட எண்ணிக்கையை விட நான்கு மடங்கு அதிகமாக, சிரியா வில் 2,000 அமெரிக்க துருப்புகள் உள்ளன என்றும், அமெரிக்க படைகள் கால வரம்பின்றி அங்கே நீடிக்குமென் றும் பென்டகன் ஒப்புக் கொண்ட அதே நாளில் வந்தது. இது, சிரிய மோதல் ISIS பயங்கரவாதிகளை இலக்கில் கொண்டிருக்கின்றனது எனக் கூறப்படும் வாதங்களின் போலித்தனத்தை எடுத்துக்காட்டு கிறது, ISIS பயங்கரவாதிகளோ இராணுவரீதியில் அந்நாட்டில் தோல்வி அடைந்துள்ளனர். உண்மையில், எரி சக்தி வளம் மிகுந்த மத்திய கிழக்கின் மீது சவாலுக்கிடமற்ற அமெரிக்க மேலாதிக்கத்தை ஒன்றுதிரட்டுவதற் காக, வொஷிங்டன், ஈரானிய மற்றும் ரஷ்ய செல்வாக்கைப் பின்னுக்கு இழுக்கத் தீர்மான மாக உள்ளது.

இஸ்ரேல் மற்றும் சன்னி வளைகுடா முடியாட்சிகளுடன், அனைத்திற்கும் மேலாக சவூதி அரேபியாவுடன் ஒரு கூட்டணி ஏற்படுத்துவதை வொஷிங் டனின் மூலோபாயம் உள்ளடக்கி உள்ளது.



ட்ரம்பின் நகர்வு பெஞ்ஜமின் நெத் தன்யாஹூவின் அதிவலது இஸ்ரேலிய ஆட்சிக்கு போராட்டங்களை ஒடுக்கு வதற்கும் மற்றும் மேற்கு படுகையில் அதன் விரிவாக்கவாத குடியமர்வு கொள்கையைத் தொடர்வதற்கும் மட்டு மல்ல, மாறாக அதன் அப்பிராந் திய எதிரிகளான லெபனானின் ஹெஸ் புல்லா மற்றும் ஈரானிய ஆட்சியுடன் அதன் மோதலைத் தீவிரப்படுத்து வதற்கும் வரம்பில்லா அதிகாரங்களை வழங்குகிறது. செப்ரெம்பரில், இஸ் ரேலிய ஆயுதப்படைகள், ஹெஸ் புல்லா படையெடுப்புக்கு எதிராக இஸ்ரேலைப் பாதுகாக்கும் ஒத்திகை மேற்கொண்டு, 20 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு அவற்றின் மிகப் பெரிய போர் பயிற்சிகளை நடத்தின. டெல்அவிவ், ஈரானிய விரிவாக்கத் தைத் தடுக்கும் நோக்கில் சிரியாவில் உள்ள இலக்குகளையும் ஆயுத நகர்வு களையும் வழமையாகத் தாக்கி உள்ள துடன், ஈரானிய-சார்பு படைகள் இஸ்ரேலிய எல்லைகளுக்கு நெருக்கத் தில் தங்களை ஸ்தாபித்தால் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கவும் சூளுரைத்துள்ளது.

**லெபனானில் ஸ்திரமின்மை ஏற்படுத்தும் ரியாத்தின் பிர சாரத்தை ஆமோதிருப்பது உட்பட, இஸ்ரேல் சவூதி அரேபியாவின் ஈரான்-விரோத கடுமையான நிலைப்பாட்டை யும் ஊக்குவிக்கிறது. சவூதி முடியாட்சி பலஸ்தீனர்களின் தலைவிதி குறித்து கவலை கொள்ளவில்லை, மாறாக இஸ்ரேல் ஆதரவுடனும் ட்ரம்ப் நிர்வாகத்தின் ஆசிர்வாதத்து டனும் தெஹ்ரானை எதிர்கொள் வது குறித்து கவலை கொண்டுள்ளது.**



ட்ரம்பின் கொள்கை மாற்றம் ஏற்கனவே நிலவும் அப்பிராந்தியத் தின் பதற்றங்களை கொதிநிலைக்குக் கொண்டு வந்துள்ளது. ஹெஸ்புல்லா மற்றும் காஸாவை மையமாகக் கொண்ட ஹமாஸ் இரண்டுமே மூன்றா வது பலஸ்தீன எழுச்சியை (intifada) தொடங்குமாறு பலஸ்தீனர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

பஸ்தீன ஆணையத்தின் (PA) தலைவர் மஹ்மத் அப்பாஸ் அம்முடிவை 'வருந்தத்தக்கதாக' கண்டித்தார், மற் றும் பலஸ்தீன ஆணையத்தின் ஒரு மூத்த அதிகாரியான ஜிப்ரில் ரஜோப் குறிப்பிடுகையில் அமெரிக்கத் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் இம்மாத இறுதியில் திட்டமிட்டுள்ள இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்திற்கான விஜயத் தின் போது அவர் பலஸ்தீன பகுதியில் வரவேற்கப்படமாட்டார் என்று தெரி வித்தார். பென்ஸ் உடன் திட்டமிடப் பட்டிருந்த ஒரு சந்திப்பு இரத்துச் செய்யப்படும் என்பதையும் ரஜோப் சேர்த்துக் கொண்டார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான பலஸ்தீன தூதர் ரியாத் மன்சூர் குறிப்பிடுகையில், ட்ரம்பின் அறிவிப் பால் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான சமாதானப் பேச்சுகளில் அமெரிக்கா எந்தவொரு தலைமை பாத்திரம் வகிப் பதற்கும் தகுதி இழக்கிறது என்று அறிவித்தார்.

உண்மையில், பலஸ்தீன ஆணை யமும் சரி ஹமாஸ் தலைமையும் சரி இரண்டுமே பலஸ்தீன மற்றும் அரபு மக்களின் பார்வையில் அதிகரித்தள வில் மதிப்பிழந்துள்ளன. அப்பாஸூம் பலஸ்தீன ஆணையமும், பெரிதும் சி.ஐ.ஏ. இல் இருந்து கிடைக்கும் நன் கொடைகளில் உயிர்வாழும் ஒரு செல்வந்த உயரடுக்கைப் பிரதிநிதித் துவம் செய்து, பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா விற்கான ஒரு பாதுகாப்பு சக்தியாக சேவையாற்றுகின்றனர். பல்வேறு வல்லரசுகளுக்கு இடையே தந்திர மாக செயல்பட்டு, மத்திய கிழக்கின் ஏகாதிபத்திய மற்றும் யூதவாத மேலா திக்கம் கொண்ட கட்டமைப்பிற்குள் ஒரு பலஸ்தீன அரசை உருவாக்குவ தற்கு அழுத்தமளிக்கலாம் என்ற அவர்களின் ஒட்டுமொத்த முன்னோக் கும், திவாலாக அம்பலமாகி உள்ளது.

**ஜெருசலேம் குறித்து விவாதிக்க டிசெம்பர் 13 இல் இஸ்லாமிய நாடுகளின் அமைப்பினது ஓர் அவசர கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ள துருக்கிய ஜனாதி பதி ரெசிப் தயிப் எர்டோகன், இந்த ஒட்டுமொத்த பிராந்தியத் தையும் ட்ரம்பின் உரை 'நெருப்பு வலையத்திற்குள்' மூழ்கடித்துள்ளது என எச்சரித் தார். ஆனால், துருக்கி உட்பட அப் பிராந்தியத்தில் உள்ள அனைத்து முதலாளித்துவ ஆட்சிகளுமே பல தசாப் தங்களாக பலஸ்தீனர்களை ஒடுக்குவதற்கு உடந்தையாய் இருந்துள்ளன.**

'சமாதான நடைமுறை' மற்றும் 'இரு-அரசு தீர்வு' எனப்படும் மோச டியை ட்ரம்ப் திடீரென கைவிட்டிருப் பது, அடிப்படையிலேயே முதலாளித் துவ தேசியவாதத்தின் பிற்போக்குத் தனமான குணாம்சத்தை எடுத்துக்காட்டு வதுடன், ஒரு சோசலிச மத்திய கிழக்



கிற்கான ஒரு பொதுவான போராட்டத் தில் அரபு மற்றும் யூத தொழிலாள வர்க்கத்தை ஐக்கியப்படுத்துவதற் கான ஒரு சோசலிச சர்வதேசவாத மாற்றீட்டுக்கான அவசியத்தை முன் நிறுத்துகிறது.

(கேள்வி தொடரும்...)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 59

## ஊரெழுக் கம்பன் கழகம்

### கழகத்துடனான இசை வேளாளர்களின் தொடர்பு

ஆரம்ப காலம் தொட்டே, இசை வேளாளர்களுடனான,எமது தொடர்பு மிக நெருக்கமாய் இருந்தது. எங்களது விழாக்களைச் சிறப்பிக்க, அவர்கள் தந்த ஆதரவினை நாம் என்றும் மறக்க முடியாது. தமது இசையாற்றலை மட்டுமன்றி, புகழையும்,பொருளையும் கூட, எமது கழக வளர்ச்சிக்காய் அவர்கள் பயன்படுத்தப் பின்னின்றதில்லை. ஆரம்ப காலத்தில் யாழ். இந்துக் கல்லூரியில் நான் நடத்திய கதம்ப விழாவிற்கு, அந்நாளில் புகழ்பெற்றிருந்த நாதஸ்வர வித்துவானான, என். ஆர். கோவிந்தசாமி அவர்கள், இனாமாக வந்து மங்கள இசை வாசித்தார். இவர் தவில் வித்துவான் என்.ஆர்.சின்னராசாவினுடைய தமையனாவார். இவரது வாசிப்பு தனித்தன்மையானது. நாதஸ்வரத்தை அதிகம் அசைக்காமல், சங்கதிகளில் சற்றும் பிசகின்றி, துரித கதியில் மிக இனிமையாக வாசிப்பார். அக்காலத்தில் பல இடங்களில், என்னைச் சிபாரிசு செய்து பேச வைத்தவர் அவர். இவரது தம்பியாரான சின்னராசாவைப் பற்றி முன்னரே சொல்லிவிட்டேன்.

பின்னாளில், ஆண்டுதோறும் எங்கள் முதல்நாள் கம்பன் விழாக்களில், நாதஸ்வரம் இசைத்துத் தொடங்கி வைத்தவர், நாதஸ்வர வித்துவான் கே.ஆர்.சுந்தரமூர்த்தி அவர்கள் நாம் யாழில் இருக்கும் வரையும் விழாவின் முதல்நாளில் அவர் வாசிப்பதென்பது, கழகத்தில் ஒரு மரபாகவே பேணப்பட்டது. அவரது தம்பியாரான தவில் வித்துவான் புண்ணியமூர்த்தி, ஆரம்பகாலம்தொட்டே எங்களுக்குப் பேருதவி புரிந்து வந்தார். கழக விழாக்கள் என்று வந்துவிட்டால், தனது விழாவைப்போல் எமக்கு இவர் துணைசெய்து பாடுபடுவார். அக்காலத்தில், பிரபலமாக இருந்த நாதஸ்வர வித்துவான்களுள், முதன்மையானவராகக் கருதப்பட்டவர் என்.கே. பத்மநாதன் அவர்கள். இவரும் எங்கள் கழகத்தில் மிகுந்த அன்பு பாராட்டினார். எங்கள் கழக விழாக்கள் அனைத்திலும் கலந்துகொண்டு, எந்த உபகாரமும் எதிர்பார்க்காமல் வாசித்துச் சிறப்பிப்பார். பின்னாட்களில் பொன்.சுந்தரலிங்கம் அவர்களின் சூழ்ச்சியால், எம்மோடு பகைத்து எமது விழாக்களை நிராகரித்து நின்றார்.

நான் கொழும்பு வந்த பிறகு, கடும் நோயுற்று, தனியார் வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டிருந்த போது, அவரைச் சென்று பார்த்தேன். பேச முடியாத நிலையில், என் கை பிடித்துக் கண்ணீர் வடித்தார். அது தான் நான் அவரைக் கடைசியாகப் பார்த்த சந்தர்ப்பம். சாந்தமும் அமைதியும் அடக்கமும் நிறைந்தவரான, நாதஸ்வர வித்துவான் கே.எம்.பஞ்சாபிகேசன் அவர்களும், அவர் புதல்வர்களான நாகேந்திரன், விக்னேஸ்வரன் ஆகியோரும், எங்கள் கழகத்தில் பேரன்பும் மரியாதையும் வைத்துத் துணை புரிந்தனர். எமது கழகத்தின் இசை விழா ஒன்றில் திரு.நாகேந்திரம் அவர்கள், தனது குருநாதரான அளவெட்டி எம்.பி.பாலகிருஷ்ணன் அவர்களுடன் இணைந்து, சிறந்ததொரு வாய்ப்பாட்டு நிகழ்ச்சியையும் நடத்தித் தந்தார். பின்னாளில், நாங்கள் இசை விழாக்களை நடத்தத் தொடங்கிய போது, எமது இசைப் பேரறிஞர் விருதினை, முதன்முதலாக கே.எம். பஞ்சாபிகேசனுக்குத் தான் வழங்கினோம். இதேபோல, நாதஸ்வர வித்துவான் எஸ்.சிதம்பரநாதன் அவர்களும், என்மேலும், கழகத்தின் மேலும் தனிப்பிரியம் காட்டி நின்றவராவார். அடிக்கடி உறவாய் என்னை வந்து பார்த்துச் செல்லும் மனிதர் இவர். நான் முன்னரே சொன்ன, நாதஸ்வர வித்துவான்களான கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்களும், எமக்கு நிறைய துணை புரிந்திருக்கின்றனர். ஈர்ப்பு



சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

மிக்க இவர்களது இசையால், எமது கழக விழாக்கள் சிறப்புற்றிருக்கின்றன. பின்னாளில், பஞ்சமூர்த்தியின் மைந்தனான குமரேஸ், எங்கள் இசை விழாவில் வாய்ப்பாட்டுக் கச்சேரி நிகழ்த்தினான். வளர்ந்து வரும் இளம் வித்துவான்களில் ஒருவனான அவன், இன்றும் எமது கழகத்தின் மேல் அன்பும் மரியாதையும் கொண்டு, எம்மோடு இணைந்து செயற்படுகிறான்.

நாதஸ்வர வித்துவான் அளவெட்டி எம்.பி.பாலகிருஷ்ணன் அவர்கள், சாகித்திய ஞானம் மிக்க சிறந்த கலைஞர். தன்னடக்கம் மிக்கவர். அதுபோலவே, என்.கே.பத்மநாதனுடன் நீண்டகாலம் இணைந்து வாசித்த, நாதஸ்வர வித்துவான் கேதீஸ்வரன் அவர்கள் சிறந்த பண்பாளர். இசை ஞானம் மிக்கவர். தனித்து உயர்ந்திருக்க வேண்டியவர். ஆனாலும் தன் ஆயுளின் பெரும் பகுதியை, தனது குருநாதரான, என்.கே.பத்மநாதன் அவர்களுடன் இணைந்து வாசிப்பதிலேயே செலவிட்டார். தன் குருவைச் சிறப்பிக்க, தன் ஆற்றலைத் தியாகம் செய்தவர். இவரும் எங்கள் மேல் பேரன்புகொண்டு துணைபுரிந்து வந்தார். எங்களது நல்லூரிலேயே வாழ்ந்து வந்த நாதஸ்வர வித்துவானான பிச்சையப்பா அவர்கள், எங்கள் கழகத்தை இசையால் வளர்த்துப் பெருந்துணை புரிந்தவர். இன்றும் இவரது புதல்வர்களான ரவி, ரஜி சகோதரர்கள், தந்தையின் இடத்தை செம்மையுற நிரப்பி வருகின்றனர். இவர்களைத் தவிர, புகழ்பெற்ற வித்துவான்களான மறைந்த பி.எஸ். ஆறுமுகம்பிள்ளை, கணேசபிள்ளை, கைதடி பழனி, குமரகுரு, நடராஜசுந்தரம், நித்தியானந்தன், காரை கணேசன் ஆகியோரும் எம்மோடு நெருக்கமாய் இருந்தனர். இளைய தலைமுறையைச் சேர்ந்த சுதந்திரன், வாகீசன், மாத்தையா, ராமதாஸ், சித்தார்த்தன், பிரதித்தன் போன்ற வேறு பலரும், எமது விழாக்களை அன்று தொட்டு இன்றுவரை சிறப்பித்து வருகின்றனர். இவர்கள் எமது கழகத்தைத் தமது கழகமாகவே கருதி செய்து வரும் ஆதரவை எம்மால் மறக்க முடியாது. 1995 இல் நாம் கொழும்பு வந்த பிறகு கொழும்பில் வாழ்ந்து வந்த, ஆர்.வி.செல்வராஜா, ஆர்.ரவிசங்கர், எஸ்.கபிலதாஸ், ஆர்.வி.எஸ்.கமலஹாசன், ஆர்.வி.எஸ்.சூரியபிரசாத், ஆர்.வி.எஸ். ஸ்ரீகாந், பா.சரண்ராஜ் போன்ற வித்துவான்கள் எமக்குச் செய்து வரும் உதவிகளையும் நம்மால் மறக்க முடியாது.

★ ★ ★

### இரண்டாந்தரம் பாண்டிச்சேரி கம்பன் விழா (14.05.1989)

இக்காலகட்டத்தில் பாண்டிச்சேரி விழாவிற்கு மீண்டும் அழைப்பு வர, கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு குழுவாக, மறுபடியும் அவ்விழாவில் கலந்துகொண்டோம். இம்முறை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும், நண்பன் மகாராஜா, முரசொலி சிவராஜா தம்பதியர் போன்றோரும் புதிதாய் எம்மோடு இணைந்து கொண்டனர். விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் உரை, பலரும் பாராட்டும் படி அமைந்தது. விழா முடிந்து திருச்சி வந்து சேலைக் கடையில், அம்மையாரும் மற்றைப் பெண்களுமாக சேலைகள் வாங்கிக் குவித்தனர். திரும்பி வரும் போது விமானம் கடுமையாய் ஆடத் தொடங்க, அம்மையார் கண் மூடித் தேவாரம் படித்ததும், எனது நண்பன் மகாராஜா என் கையை இறுகப் பற்றிக் கொண்டதும், இப்போதும் ஞாபகத்தில் இருக்கிறது. சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாருடன், நெருங்கிப் பழகக் கிடைத்த வாய்ப்பாய் இப்பயணம் அமைந்தது.

★ ★ ★

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir



# ரஜினி

## தமிழருக்கு என்னதான் செய்தார்?



ரஜனி அரசியலுக்கு எப்போது வருவார் என்று அவரது ரசிகர்களும், மீடியாக்களும் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த காலகட்டம் மாறி, இன்று, ஏன் அவர் அரசியலுக்கு வந்தார் என்பதுதான் தற்போதைய பேச்சாக இருக்கிறது. பொதுவாக அரசியல் களத்தில் உள்ளவர்கள் எந்தவொரு பிரச்சினைக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பது என்பது இயல்பானது. அதேநேரத்தில், அரசியலைப் பற்றி அரசியலாளர்கள் சொல்வதைக் கேட்கவே வேண்டாம். ஆனால், சாமான்ய மக்களும், ரஜனி ரசிகர்களுமே அவருடைய அரசியல் பற்றி விமர்சிக்கத் தொடங்கியிருப்பதுதான் ஆச்சர்யமாக இருக்கிறது.

'இப்போது ரஜனிக்கு எதற்கு அரசியல்' என்று கேட்கும் அவரது ரசிகர்களும், சாமான்யர்களும் 'அவர் அரசியலுக்கு வரவே வேண்டாம்' என்றுதான் திட்டவட்டமாகச் சொல்கின்றனர். அவர்கள் சொல்வது ரஜனிக்கு கவலையைத் தரக்கூடிய விடயமாக இருந்தாலும், அதைரஜனிஅவ்வளவு எளிதில் புறம் தள்ளிவிட முடியாது. அந்த அளவுக்கு அவர்களுடைய கருத்துகள் அனைத்தும் வலிமையுடன் வாய் பொத்தி சிரிக்கின்றன.

சாமான்யர்களும், ரஜனி ரசிகர்களும் சொல்லும் விமர்சனங்கள் குறித்து சட்டப்பஞ்சாயத்து இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் செந்தில் ஆறுமுகம் கூறுகிறார். நடிகராக இருக்கும் ரஜனி அரசியலுக்குத் தேவையில்லை என்ற கண்ணோட்டமோ எங்கும் பரவலாக இருக்கிறது. அனைவரும்அரசியலுக்கு வருவதற்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வழிவகை உள்ளது. அப்படியிருக்கும்போது அவரை அரசியலுக்கு வரக்கூடாது எனச் சொல்வது அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது.

அதேநேரத்தில் அவர் அரசியலுக்கு வருவதைப் பச்சைக் கம்பளம் விரித்து வரவேற்கவும் முடியாது. காரணம்... 'அரசியலுக்கு வாருங்கள்' என உச்சி முகர்ந்து வரவேற்கும் அளவுக்கு அவர் சமூக, அரசியல் விவகாரங்களில் ஈடுபடவில்லை. சமகாலப் பிரச்சினைகள் குறித்துப் பேசவில்லை... ஏன், தமிழகத்தின் எந்தப் பிரச்சினைகளுக்காவது மக்களோடு மக்களாக நின்று போராடி இருக்கிறாரா... சமூகப் பிரச்சினைகள் குறித்து அவருடைய நிலைப்பாடு என்னவென்று அவருக்கே தெரியுமா என்பது சந்தேகம்தான். எனவே நடிப்பு, பட பூஜை, பட ரிலீஸ் என்ற வட்டத்தைத் தாண்டி வெளியில் வராதவரை எப்படி இருகரம் கூப்பி வரவேற்க முடியும்" என்று சொல்லும் அவர், சமூகப் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்காதவரை அரசியலுக்கு வாருங்கள் என அழைக்க முடியாது என்கிறார் மிகத் தெளிவாக.

**சமூகப் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்காத அவர் ஏன் அரசியலுக்கு வருகிறார்?**

தமிழர் முன்னேற்றப் படையின் நிறுவுநரான வீரலட்மி கூறும் போது –

ரஜனி அரசியலுக்கு வருகிறார் என கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரே தகவல் வெளியானது. அப்போதே அவருடைய நடவடிக்கையை எதிர்த்து நாங்கள் போராட்டம் நடத்தினோம். அதை உறுதிப்படுத்தும் விதமாக ரஜனியும், தன்னுடைய ரசிகர்கள் சந்திப்பை நடத்தி... அதில் தமது அரசியல் ஆசையை வெளிப்படுத்தி இருந்தார். அப்போது, 'போர் வரும்போது பார்த்துக்கொள்ளலாம்' என்று அறைகூவல் விடுத்த ரஜனி, இலங்கையில் தமிழர்கள் கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்டபோது ஏன் சிங்களவர்களுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்யவில்லை என்பதுதான் அவரிடம் நான் கேட்கும் கேள்வி?

அப்போதெல்லாம் சிங்களவர்களின் திரைப்பட நிறுவனங்களில் படத்தை நடித்துக் கொடுத்து பணம் பார்த்தவர் தற்போது அரசியல் ஆதாயத்துக்காக, 'நான் பச்சைத் தமிழன்' என்று சொல்கிறார். அவருடைய இந்தப் பேச்சு, அரசியல் ஆதாயத்துக்காக என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அதுமட்டுமல்லாது, கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது வாயைத் திறக்காத ரஜனி, இப்போது தமிழகத்தை ஆட்சி செய்ய வேண்டும் என நினைக்கின்றமை மக்களின் நலனுக்காகவா?

48 வருடங்களாகத் தமிழகத்தில் இருந்து பணம் சம்பாதித்தவர், இங்குள்ள மக்களுக்கு என்ன செய்துள்ளார்? தமிழகத்தில் சம்பாதித்த பணத்தைக் கர்நாடகத்தில் சொத்துக்களாகவும், வணிக நிறுவனங்களாகவும் மாற்றி அங்குள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அப்படித் தமிழகத்தில் எந்த ஒரு நல்ல காரியத்தையும் செய்யாதவர் அரசியலுக்கு வருவதாகச் சொல்வது லாப நோக்கத்துக்காக மட்டுமே. அவரை, அரசியலுக்கு வர வேண்டாம் எனச் சொல்லவில்லை... அவர், அரசியல் செய்ய வேண்டும் என்றால் கர்நாடகம் மற்றும் மகாராஷ்ரா மாநிலங்களில் போய் அரசியல் செய்யட்டும்" என்றார் காட்டமாக.

■ கா . புவனேஸ்வரி

# சூரியனில் ஆய்வு நடத்த நாசா திட்டம்

## செயற்கைக்கோள் அனுப்பவும் தயார்



'நாசா' விண்வெளி ஆராய்ச்சி மையம் இந்த ஆண்டு சூரியனில் ஆய்வு நடத்தப் போகிறோம் என அறிவித்துள்ளது. அதற்காக 'பார்க்கர் சோலார் புரோப்' என்ற செயற்கைக்கோளை அனுப்ப உள்ளது.

ஒவ்வொரு வருடமும் புதிய ஆண்டில் செய்யப்போகும் சாதனை இலக்குத் தொடர்பாக 'நாசா' அறிவிப்பு வெளியிடுவது வழக்கம். இந்த நிலையில் 60 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் 'நாசா' விண்வெளியில் இதுவரை உலக நாடுகள் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதில் இந்த ஆண்டு சூரியனில் ஆராய்ச்சி செய்வது என முடிவு செய்துள்ளது. அதற்காக 'பார்க்கர் சோலார் புரோப்' என்ற செயற்கைக்கோளை அனுப்பவுள்ளது.


இது சூரியனின் அதீத வெப்பம் மற்றும் சோலார் கதிர்வீச்சுத் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளும். சூரியனின் மேலடுக்கு 10 ஆயிரம் டிகிரி வெப்ப நிலையில் உள்ளது. அதன் வளிமண்டலமோ அதைவிட 3 மடங்கு அதிக வெப்பத்தில் இருக்கிறது.

இதன்மூலம் சூரியனைத் தொட்டுவிட வேண்டும் என்ற முடிவில் அமெரிக்காவின் நாசா மையம் உள்ளது. மேலும் செவ்வாய்க் கிரகத்தின் உட்புற ஆய்வு மற்றும் வெளிப்புறத் தோற்றத்தை தொடர்ந்து ஆராயத் திட்டமிட்டுள்ளது. தற்போது அங்கு முகாமிட்டிருக்கும் விண்கலத்தின் ஆயுட்காலத்தை நீடிக்கவும் திட்டமிட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


34. 1) முதிரை ஒரு மரம், அது தளபாடம் செய்ய உதவும்.
2) ரோசா ஒரு கொடி. அது பூத்து மணம் பரப்பும்.
3) மா ஒரு கனி. அது வருடத்தின் சில காலங்களில் மாத்திரம் கிடைக்கும்.


35. மதுமன் ரூபாய் 2 முத்திரைகளையும், ரூபாய் 5 முத்திரைகளையும் சம எண்ணிக்கையில் வாங்கினான். இவற்றுக்காக அவன் ரூபாய் 35 ஐச் செலவிட்டிருப்பின் அவன் வாங்கிய முத்திரைகளின் மொத்தம் யாது?
1) 10  2) 8  3) 6

36.  உருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
1) 14  2) 11  3) 16


37. A யிற்கு வடமேற்குத் திசையில் B உம், C இற்குக் கிழக்குத் திசையில் A உம் காணப்படுகின்றன. இந்த அமைவிடங்களைச் சரியாகக் காட்டும் விடை எது?

1) 

2) 

3) 


38. 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்டுள்ள ஒரு சதுரமுகியின் பல்வேறு நிலைகள் கீழே தரப்பட்டுள்ளன.




இதன்படி இலக்கம் 1, 4, 6 ஆகிய இலக்கங்கள் எழுதப்பட்ட ஒவ்வொரு முகத்திற்குமுரிய எதிர்ப்பக்கங்களில் உள்ள இலக்கங்கள் முறையே காட்டும் விடை எது?
1) 2 3 5  2) 5 3 2  3) 3 5 2

39. தரப்பட்ட கவிதையின் நான்கு வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கு வரிசையைத் தெரிவு செய்க.
A - நல்லறிவூட்டும் பாடசாலை
B - நன்கொடையாக நம்மரசளித்த
C - நன்றாய் நாமும் கற்றிடவே
D - நன்கே பேணல் நம் கடனாம்

1) A, B, C, D  2) C, A, D, B  3) C, B, A, D

40. கமலாவின் மகனின் மகன் நிருத்தன், இதற்கேற்ப சரியான கூற்று
1) நிருத்தனின் மகன் கமலாவின் தந்தையாவார்
2) நிருத்தனின் தந்தை கமலாவின் மகன் ஆவார்
3) கமலாவின் தந்தை நிருத்தனின் தந்தை ஆவார்.

"கடின பயிற்சி இலகு பரீட்சை
இலகு பயிற்சி கடின பரீட்சை"



# கல்விக் கதிர் வெளியீடு
## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்







தரம்-5 ....... பகுதி I  நேரம்- 45 நிமிடங்கள்  வினாத்தாள் 1


❖ ஒவ்வொரு வினாக்களிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

01. கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




1)   2)   3) 


02. 

1)   2)   3) 

❖ தரப்பட்ட உருக்களில் இரண்டு ஒத்தவை. அந்த இரண்டு உருக்களும் யாவை?

03. 

1) A உம் B உம்
2) A உம் C உம்
3) B உம் C உம்

04. 


1) X உம் Y உம்
2) X உம் Z உம்
3) Y உம் Z உம்

❖ எண்கள் எழுதப்பட்டுள்ள கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.


05.

| | | |
|---|---|---|
| 7 | 8 | 9 |
| ... | 1 | 2 |
| 5 | 4 | 3 |

1) 6  2) 12  3) 4

06. 

1) 10  2) 12  3) 14

07. 

உருவிலுள்ள மூன்று வட்டங்களும் ஒன்றை ஒன்று ஒத்தவை. இதில் Q இலிருந்து R வரையான நீளம் 7cm எனில், P இலிருந்து S வரைக்குமான நீளம் யாது?
1) 14cm  2) 21 cm  3) 28cm

❖ பிரசினங்களை விளங்கிக் கொண்டு 8ம், 9ம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

08.
```
  M          H M K
– M        + T K T
  4          5 5 7
———        ———————
```


08. H+K=...... வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடை யாது? 1) 6  2) 5  3) 4

09. TKH எனக் காட்டப்படும் எண் யாது?  1) 134  2) 31  3) 431



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. உரு A இன் பரப்பளவு உரு B யின் பரப்பளவின் எத்தனை மடங்காகும்?




1) 2  2) 3  3) 4

11. $\frac{1}{2}$ இற்குச் சமனாக அமையாதது?  1) $\frac{1}{4}+\frac{1}{4}$  2) $\frac{1}{3}+\frac{2}{3}$  3) $\frac{2}{6}-\frac{1}{6}$

❖ **12ம், 13ம் வினாக்களுக்கு அடைப்புக்குள் தரப்பட்ட தகவல்களை விளங்கி வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

12. □□□○ = 30kg  □□○ = 25kg  ○○□ = .......

1) 25kg  2) 30kg  3) 35kg

13. ⊠+△=9  ⊠-△=5  △-△=...  1) 8  2) 6  3) 4

14. இன்னும் 8 வருடங்களின் பின் மகனின் வயது அப்பாவின் வயதின் அரைவாசியாக இருக்கும். இப்போது அப்பாவின் வயது 52 எனின் மகனுக்கு இப்போது வயது யாது?
1) 35 வருடங்கள்  2) 30 வருடங்கள்  3) 22 வருடங்கள்

15. ஒரு நிரையில் குமார் தொடக்கத்திலிருந்து 9 ஆவதாக நிற்கிறான். அவன் கடைசியில் இருந்து 10 ஆவதாக நிற்கிறான். இதன்படி நிரையில் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?
1) 18  2) 19  3) 20

16. மரக்கிளை ஒன்றில் ஒரு குறித்த தொகைப் புறாக்கள் நின்றன. அவற்றின் தலைகளினதும், கால்களினதும் மொத்த எண்ணிக்கை 36 ஆகும். மரக்கிளையில் நின்ற புறாக்கள் எத்தனை?
1) 8  2) 10  3) 12

17. தரப்பட்டுள்ளவற்றிடையே மூன்றை ஒரு கூட்டமாகவும், இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் இரண்டு இருக்கும் கூட்டத்திற்கு உரியவை யாவை?
இலை, பூ, செடி, காய், மரம்
1) இலையும் பூவும்  2) மரமும் காயும்  3) செடியும் மரமும்

18. ரதி 5 நிமிடங்களில் 10 பக்கங்களையும், சுமதி 10 நிமிடங்களில் 5 பக்கங்களையும் வாசித்து முடிப்பர். இவர்கள் இருவரும் 30 நிமிடங்களில் எத்தனை பக்கங்களை வாசித்து முடிப்பர்?
1) 25  2) 65  3) 75

19. ஒரு காரியத்தை மன விருப்பமின்றிக் கடமைக்காகச் செய்தல் என்பதைக் குறிக்கும் தொடர் எது?
1) ஆறப் போடுதல்  2) தட்டிக் கழித்தல்  3) கடன் கழித்தல்

20. "அதிகம் பயிற்சி செய்தால், பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற முடியும்" என ஆசிரியர் கூறுகிறார்.
ஆசிரியர் இவ்வாறு கூறுவதற்குக் காரணம்
1) பயிற்சி செய்பவர்கள் மாத்திரமே கூடிய புள்ளிகளைப் பெறமுடியும் என்பது
2) இடைவிடாத பயிற்சி எதிலும் தேர்ச்சியை ஏற்படுத்தும் என்பது
3) பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறாதவர் எவரும் பயிற்சிகளில் ஈடுபடாதோர் என்பது

21. நிரு 15m சீத்தைத் துணியை 1m அளவுடைய துண்டுகளாக வெட்டினாள். ஒரு துண்டை வெட்டுவதற்கு அவளுக்கு 30 செக்கன் நேரம் எடுத்தது எனின் முழுத்துணியையும் வெட்டி வெட்டி முடிக்க அவள் எடுத்துக்கொண்ட மொத்த நேரம் யாது? (60 செக்கன் = 1 நிமிடம்)
1) 6 நிமிடம்  2) 7 ½ நிமிடம்  3) 7 நிமிடம்



**ஆசிரியர் வே. அன்பழகன் தயாரித்து வழங்கியிருந்த மாதிரி வினாத்தாள்களின் விடைகள் 2 ஆம் பக்கத்தில்...**




22. குறிப்பிட்ட ஒரு மாதத்தின் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை எனின், அம் மாதத்தில் இரண்டாவதாக வரும் திங்கட்கிழமை எத்தனையாம் திகதியாகும்?
1) 11  2) 12  3) 13

❖ **எனது பெயர் மாலா. என்னுடைய அன்னைக்கு சகோதரர்கள் இருவரும், சகோதரிகள் இருவரும் உள்ளனர். இக்கூற்றுக்கு அமைய பின்வரும் வினாக்களிற்கு விடை தருக?**

23. மாலாவுக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?
1) 3  2) 2  3) 1

24. மாலாவுக்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனர்?
1) 1  2) 2  3) 3

25. 



நான்கு வரிசைகளில் தகரப் பேணிகள் அடுக்கப்பட்டுள்ள முறை தரப்பட்டுள்ளது. இதே ஒழுங்கில் ஆறு வரிசைகளை அமைப்பதற்குத் தேவையான தகரப் பேணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 18  2) 20  3) 21

❖ **26ம், 27ம் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**

26. கட்டத்தில் உள்ள எண்கள்

| | | |
|---|---|---|
| 12 | | 30 |
| | 18 | |
| 6 | | 24 |


1) 3 இனதும் 4 இனதும் பெருக்கங்களாகும்
2) 2 இனதும் 3 இனதும் பெருக்கங்களாகும்
3) 2 இனதும் 4 இனதும் பெருக்கங்களாகும்

27. 



வட்டத்திலுள்ள ஒற்றை இலக்கங்களின் கூட்டுத்தொகை
1) 24  2) 25  3) 26

28. நாமகள் வித்தியாலய கண்காட்சி நிகழ்ச்சி நான்கு வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும். 12 ஆவது கண்காட்சி நிகழ்வு 2012 ஆம் வருடம் இடம்பெற்றது எனின், 2024 ஆம் வருடம் எத்தனையாவது கண்காட்சி நிகழ்வு நடைபெறும்?
1) 14 வது  2) 15வது  3) 13வது

29. பக்கமொன்று 10 மீற்றர் நீளமுள்ள சதுர வடிவக் காணித்துண்டு ஒன்றைச் சுற்றி 2 மீற்றர் இடைவெளிக்கு ஒரு தூண் வீதம் நடப்பட வேண்டும். காணியைச் சுற்றி நடுவதற்கு எத்தனை தூண்கள் தேவை?
1) 20  2) 16  3) 24

30. 

முழு உருவத்தினதும் பரப்பு அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின் எத்தனை மடங்காகும்?
1) 8  2) 6  3) 4

31. 

உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பின்னம் ஆகும்.
1) $\frac{1}{4}$  2) $\frac{2}{3}$  3) $\frac{1}{2}$

32. ஒரு குழுவில் உள்ள 6 பேர்களிடையே ஆண் தரப்பில் ஒவ்வொருவருடைய கையிலும் 2 பேனைகளும், பெண் தரப்பில் ஒவ்வொருவருடைய கையிலும் 3 பேனைகளும் இருந்தன. பேனைகளின் மொத்த எண்ணிக்கை 16 எனின், குழுவில் உள்ள ஆண்களின் எண்ணிக்கை யாது?
1) 2  2) 3  3) 4

❖ **33ம், 34ம் வினாக்களிற்கு பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.**

33. 1) பசு சாதுவான மிருகம் அது பால் தரும்.
2) புலி காட்டு மிருகம், அது புல் உண்பதில்லை.
3) குதிரை சவாரி செய்ய உதவும். அது கொம்புகளால் எதிரியைத் தாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




–குருவிக்குஞ்சு

# காலன் பாவம்

சமீபத்தில் ஒரு பத்திரிகையின் உள் பக்கத்தில் சாவடைந்த ஒருவரின் 31 ஆவது நாள் நினைவஞ்சலிக்காக விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதில் சாவடைந்த விதம் குறித்து அவருக்கான கவிதை வரியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. சாவடைந்தவர் ஒரு வாகன விபத்தில் அகாலச் சாவாக இறந்தவர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

நிலைமை இப்படியிருக்க -

அவருக்கான கவிதை வரியில் - “காலன் (இயமன்) வந்து உன்னைக் கரம் பிடித்துச் சென்றானே...” என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

உண்மையில், அந்தக் கவி வரிகளை எழுதியவர் தற்கால அதிவேக வாகன சாரதிகளை மனதில் வைத்துக் கொண்டு கவிதையை யாத்திருக்க முடியும். ஆயினும், இந்த அதிவேக வாகன சாரதிகளை காலனுக்கு ஒப்பிட்டிருந்தால், அது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயம் அல்ல.

காரணம்- இந்த அதிவேக சாரதிகள் தான், காலன் என்றால், உண்மையான காலன் யார்? அவனுக்கான தொழில் யாது? என்ற வினாக்கள் எழுகின்றமை தவிர்க்க முடியாததாகிறது.

சமீபகாலமாக, குறிப்பாக யாழ். குடாநாட்டுக்குள்ளும், அதனை அண்டிய வெளிப்பிரதேசங்களிலும் நாளாந்தம் வாகன விபத்துக்கள் ஏற்பட்டு வருவதும், இதன் நிமித்தம் குறைந்தது ஒருவராவது கொல்லப்படுவதும் சர்வசாதாரண நிகழ்வாக மாறி வருகிறது.

இந்த விபத்துக்கான காரணங்களை உன்னிப்பாக ஆராயுமிடத்து, வாகன சாரதிகளின் பொறுப்பற்ற தன்மையும் பாதசாரிகளின் கவனக் குறைவுமே காரணமாக அமைவதைக் காணமுடியும்.

குறிப்பாக- அரச மற்றும் தனியார் பேருந்துகளின் தொழில் ரீதியான பணமீட்டும் செயற்பாட்டின் நிமித்தம் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டு ஓடுவதால், அவைகள் தெருக்களில் செல்லும் பாதசாரிகளைக் கவனத்தில் கொள்வதில்லை. அவைகளின் இலக்கு முந்திச் சென்று பயணிகளை அளவுக்கதிகமாக ஏற்றி இலாபமீட்டுவதேயாகும்.

இதேவேளை, தெருவில் ஒரு வாகனம் வேகமாக வருவதை அவதானித்த பின்பும், தெருவைக் கடக்க முயற்சிக்கும் பாதசாரியும், வாகன நெரிசல்களின் போது, அந்த வாகனங்களூடாக நடந்து செல்பவர்களும் விபத்துக்களைத் தாமாகவே வலிந்து ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

வீதி விபத்துக்களுக்கான இன்னொரு முக்கிய காரணம், வீதி ஒழுங்கு முறைகள் குறித்து மக்களுக்கு இன்னமும் தெளிவின்மை இருப்பதாகும். தற்கால விபத்துகளுக்கு முக்கிய காரணம் இந்தத் தெளிவின்மையே என்பது ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

சில வாகன சாரதிகளுக்கு ‘அக்சிலேட்டரை’ காலால் அமத்தவும், ‘ஸ்ரியறிங்கை’ ஒரு கையால் பிடிக்கவும், இன்னொரு கையால் ‘கியரைப்’ போடவும் தெரிந்தால் போதும், வாகனம் ஓட்டலாம்... என்ற மனப்பான்மை பதிவாகியிருப்பதால் தான் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன... என்ற புத்திஜீவிகளின் கருத்துக்களைப் புறந்தள்ளி விட முடியாது.

ஏனெனில் - யதார்த்தமே அதுதான்!

வீதிகளில் மஞ்சள் கடவையூடாக மக்கள் கடந்து செல்ல முயற்சிக்கும் போது கூட, சில வாகன சாரதிகள் தங்கள் வாகனத்தை அதிவேகமாகச் செலுத்திச் செல்வதை இன்றும் கூட யாழ். மத்திய நகரத்துக்குள் காண முடியும்!

அத்தோடு, ஒரு வழிப்பாதையூடாகப் பயணிக்க வேண்டிய மோட்டார் சைக்கிள்கள் அதிவேகமாகச் செல்வதும், அதேபாதையில் எதிராக (கண்காணிப்பு பொலிஸ்காரர் இல்லாத சமயத்தில்), பயணம் செய்ய எத்தனிப்பதும் அவரவர்க்கான பொறுப்பற்ற தன்மையே ஒழியே, இது காலன் வந்து செய்கிற வேலையல்ல.

ஒரு ஜனனமானது இப்புவியில் நிகழ்ந்து, அது தனக்கான வாழ்வின் கணக்கை முடிக்கும் தருவாயில், காலன் வந்து அழைத்துச் செல்வதாக ஆகம நூல்கள் வெளிப்படுத்தி நிற்கும்போது, அநாவசியமாக, பொறுப்பற்ற விதமாக ஒவ்வொருவரும் நடந்து கொண்டு வீதி விபத்துக்களை ஏற்படுத்தி விட்டு, ‘உன்னைக் காலன் வந்து கரம் பிடித்துச் சென்றானோ...?’ என்று கவிதைக்குள் ஒரு வரியைச் செருகுவது ஏற்புடையதல்ல!

ஏனெனில் - காலன் என்பவன் பாவமல்லவா!



“19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரை விடவும், இந்த நூற்றாண்டில் வாழ்பவரின் வாழ்நாள் அதிகம். அதற்கு காரணமான அம்சங்கள் உணவு, சுற்றுச்சூழல், பொது சுகாதாரம் போன்றவையே.”

சே.அபினேஷ், இ.நிவேதா

# மனிதனின் ஆயுட்காலத்தை நீடிக்க முடியுமா?

பூமியில் வாழும் பலருக்கும் மரணமின்றி சிரஞ்சீவியாக இருக்க ஆசை தான். ஆனால், பூமியில் இருக்கும் எல்லா உயிரினங்களும் மரணத்தை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அறிவியலும், மருத்துவமும் பன்மடங்கு வளர்ந்துவிட்ட இந்தக் காலத்திலும்கூட, யாராலும் மரணத்தைத் தடுக்கமுடியாது. தள்ளிப்போட வேண்டுமானால் முடியும். அதேபோல யாருடைய ஆயுட்காலமும் இவ்வளவுதான் என நம்மால் வரையறுக்க முடியாது. ஒருவர் அதிகபட்சம் எத்தனை ஆண்டுகள் வாழ்வார் என்று வேண்டுமானால் நம்மால் கணிக்க முடியுமே தவிர, எப்போது மரணமடைவார் என்பதை முன்கூட்டியே கணிக்கமுடியாது.

சரி... ஒரு மனிதனின் சராசரி ஆயுட்காலம் என்பது எவ்வளவு? 'நூறு ஆயுசு' என இன்றும் வாழ்த்துகிறார்களே... அதெல்லாம் நிஜத்தில் சாத்தியம்தானா? இந்தக் கேள்விகளுக்குத் தங்களின் ஆராய்ச்சியின் மூலம் பதில் சொல்லியிருக்கிறார்கள் அல்பிரட் ஐன்ஸ்டீன் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த விஞ்ஞானிகள்.

மனிதர்களின் ஆயுட்காலம் பற்றி ஆய்வு மேற்கொண்ட இவர்கள், அதன் முடிவுகளை பத்திரிகை ஒன்றில் வெளியிட்டனர். அதில் அவர்கள் குறிப்பிட்டிருக்கும் சில முக்கியமான கருத்துகள் இதோ...



மனிதர்கள் அதிகபட்சம் எத்தனை ஆண்டுகள் வரை வாழமுடியுமோ, அத்தனை ஆண்டுகள் வரைக்கும் பழங்கால மனிதர்கள் வாழ்ந்து விட்டார்கள். அதைவிடவும் அதிக வருடங்களுக்கு மனிதர்களால் வாழமுடியாது. வாழ்நாளை அதற்கு மேல் நீடிக்கவும் முடியாது. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரை விடவும், இந்த நூற்றாண்டில் வாழ்பவரின் வாழ்நாள் அதிகம். அதற்குக் காரணமான அம்சங்கள் உணவு, சுற்றுச்சூழல், பொது சுகாதாரம் போன்றவையே.

**வாழ்நாளை கூட்டலாம்; ஆனால் மனிதனின் மரணத்தை தடுக்க முடியாது...!**

1990 இல் பிறந்த அமெரிக்கர்களின் சராசரி



ஆயுட்காலம் 47 வருடங்கள். இத்துடன் ஒப்பிட்டால் இன்று அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளின் சராசரி ஆயுட்காலம் அதிகம். தற்போது பிறக்கும் குழந்தைகளின் சராசரி வயது 79. இதற்காக அறிவியல் மற்றும் மருத்துவத்துக்கே நாம் நன்றி சொல்லவேண்டும். இந்தியாவில் 1960 ஆம் ஆண்டு பிறந்தவர்களின் சராசரி ஆயுட்காலம் 40 வயது. இது இன்று 68 ஆக உயர்ந்துள்ளது என்று விஞ்ஞானிகள் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதற்காக 40 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து இறப்பு மற்றும் மக்கள்தொகை சார்ந்த தகவல்கள் தொகுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. 1900 ஆம் வருடத்தில் இருந்து தற்போது வரைக்கும், இந்த 40 நாடுகளிலும் இறப்பு விகிதம் வெகுவாகக் குறைந்துள்ளது. இறப்பவர்களின் சராசரி வயது 70 இற்கு மேல் இருக்கிறது. ஆய்வு நடத்தப்பட்ட இந்தக் காலகட்டத்தில் சராசரி வயதை அடையாமல் மரணடைந்தவர்களின் எண்ணிக்கையும் குறைந்திருக்கிறது எனவும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

இந்த ஆய்வின் மற்றொரு சுவாரஸ்யமான அம்சம், Supercenten- arians பற்றிய தகவல்கள். 110 வயதுக்கும் மேல் வாழ்பவர்களைத் தான் Supercentenarians என அழைப்பார்கள். இவர்கள்குறித்தும் அல்பர்ட் ஐன்ஸ்டீன் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான் மற்றும் UK ஆகிய நான்கு நாடுகளின் தகவல்களை இதற்காக எடுத்துக் கொண்டனர். 1968 முதல் 2006 ஆம் ஆண்டுக்கு இடையே வாழ்ந்த Supercentenarian களை பட்டியலிட்டனர். இதிலிருந்து தெரியவந்த விஷயம் என்னவென்றால் 1970 இல் இருந்து 1990 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் Super centenarian களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பதுதான்.

1997 ஆம் ஆண்டில் 122 ஆண்டுகள் வரை வாழ்ந்த பிரெஞ்ச் பெண்ணான ஜீன் கால்மென்ட் என்பவர்தான் அதிக ஆண்டுகள் உயிர்வாழ்ந்தவர் எனக் கருதப்படுகிறார். நோய்த்தொற்றுகள் மற்றும் உடல்நலக்குறைபாடுகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளே இதற்குக் காரணம் என்கின்றனர் விஞ்ஞானிகள். இதன்மூலம் முதியவர்களின் வாழ்நாளும் சராசரி வாழ்நாளை விடவும் அதிகமாகும். குறிப்பாக, வயதாகும் காலத்தில் ஏற்படும் நோய்களைத் தீர்க்க, தீர்வுகளைக் கண்டுபிடித்தால் முதியவர்களின் ஆயுட்காலம் இன்னும் அதிகரிக்கும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

மனிதர்களின் ஆயுட்காலத்தை சில ஆண்டுகள் வரைக்கும் மருத்துவத்தின்மூலம் நீடிக்கமுடியும். அதாவது, 100 வயதில் இருக்கும் ஒருவருக்கு தகுந்த சிகிச்சைகள் அளிப்பதன்மூலம் மேலும் சில ஆண்டுகளுக்கு அவரை வாழவைக்கமுடியும். ஆனால், அவருடைய உடலின் அதிகபட்ச ஆயுட்காலம் முடிந்து விட்டால், அதற்குமேல் ஒன்றும் செய்யமுடியாது. மனிதர்களின் அதிகபட்ச ஆயுட்காலத்தை மருத்துவத்தின் மூலமும் நீடிக்கமுடியாது. இதுதான் அந்த அறிக்கையின் ஒட்டுமொத்த சாராம்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனின் தாயுடன் ஆண்டை தொடக்குவோம்

அன்னை மரியாவின் மிக உயரிய சிறப்புப் பட்டமான இறைவனின் தாய் என்ற பெயருடன் புதிய ஆண்டைத் தொடக்குவோம். அன்னை மரியாவில் மனு உருவெடுத்த இறைமகன் நம்மைப்போல் மனித நிலைகளை எடுத்துக் கொண்டார். அன்னை மரியாவை இறைவனின் தாய் என நாம் அழைக்கும்போது கடவுள் மனித குலத்திற்கு அருகில் உள்ளார் என்பது நமக்கு நினைவூட்டப்படுகிறது.

காலைக்கதிர்

கிறிஸ்தவ செய்தி இதழ்

TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## மனிதர்களுக்கும் இயேசுவுக்கும் இடையே அன்னை மரியா

ஆண்டின் முதல் நாளன்று இறைவனின் தாயான மரியாவின் திருநாளை இறைவன் வழங்க அதை நமக்கு திருஅவை வழங்கியுள்ளது. இன்றைய உலகின் துயரங்கள் குறைபாடுகள் நடுவே மனிதர்களுக்கும் இயேசுவுக்கும் இடையே தன்னையே நிறுத்துகிறார் அன்னை மரியா. உலக அமைதி நாளன்று வலுவற்ற மக்கள் சார்பில் அன்னை மரியா பரிந்து பேசுகிறார் என்றார் திருத் தந்தை.

# இலங்கையின் அனைத்து ஆயர்களும் கூடி நின்று மன்னார் மறைமாவட்டத்தை பொறுப்புக் கொடுத்தனர்



மன்னார் மறைமாவட்டத்தின் 3ஆவது ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் வரவேற்பும் பணிப்பொறுப் பேற்பும் கடந்த 30ஆம் திகதியன்று கோலாகலமாக நிறைவேறியது. மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை திருப்பலியை ஆரம்பித்த பின்னர் புதிய ஆயரின் நியமனம் தொடர்பான திருத்தந்தையின் ஆணைமடல் திருத்தந்தையின் பிரதிநிதியால் ஆங்கில மொழியில் வாசிக்கப்பட்டது.

அதன் தமிழ் மொழி பெயர்ப்பை ஏ.இராயப்பு அடிகளார் வாசித்தார். புதிய ஆயரின் நியமனம் தொடர்பான திருத்தந்தையின் ஆணைமடல் வாசிக்கப் பட்டவுடன் இந்தப் புதிய நியமனத்தை வரவேற்பதன் அடையாளமாக அனைவரும் கரவொலி எழுப்பி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். தொடர்ந்து மன்னார் மறைமாவட்டத்தைப் புதிய ஆயருக்குக் கையளிப்பதன் அடையாளமாக அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை பேராலயத் திறப்பை புதிய ஆயருக்குக் கையளித்தார்.

பேராலயநற்கருணைப் பேழையின் திறப்பை பேராலயப் பங்குத்தந்தை பெப்பி சோசை அடிகளார் புதிய ஆயருக்குக் கையளித்தார். ஆயருக்குரிய ஆட்சியதிகாரங்களைக் குறிக்கும்செங்கோலைஅப் போஸ்தலிக்க பரிபாலகர் புதிய ஆயருக்கு வழங்கினார். பின்னர் அப்போஸ் தலிக்க பரிபாலகரும் பேராயர் மல்கம் கர்தினால் றஞ்சித் ஆண்டகையும் புதிய ஆயரை அழைத்துச் சென்று மறைமாவட்ட ஆயருக்குரிய பேராலயத்தின் அதிகாரபூர்வ இருக்கையில் அமர்த்தினர். பின்னர் மன்னார் மறைமாவட்டக் குருக்களும் மன்னார் மறைமாவட்டத்தில் பணி செய்யும் குருக்களும் வரிசையாக வந்து புதிய ஆயரின் மோதிரத்தை முத்தமிட்டு தமது வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் கீழ்ப் படிவையும் தெரிவித்தனர்.

# உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் 2018 ஆம் ஆண்டின் உலக சமூகத்தொடர்பு தலைப்பு

"உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்; பொய் செய்திகளும் அமைதிக்கான இதழியலும்" என்ற தலைப்பை 2018ஆம் ஆண்டிற்குரிய 52ஆவது சமூகத் தொடர்புத்தின தலைப்பாக வெளியிட் டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். இன்றைய உலகம் எவ்வித ஆதாரமும் இல் லாமல் தகவல்களைத் திரித்துக் கூறியும் ஊக்கமளித்தும் வரும் நிலையில் பொய் செய்திகளின் தாக்கம் குறித்து முக்கியத்துவம் கொடுக்கும் விதமாக இத்தலைப்பை வெளியிட்டுள்ளார் திருத் தந்தை.

மக்களிடையே புரிந்துகொள்ளுதலை ஊக்குவித்து அமைதிக்கு வழிகாட்டும் இதழியலுக்கு ஆதரவுகொடுக்க திருப்பீடம் விழைகிறது. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தால் உருவாக்கப்பட்ட ஒரே உலக நாளான சமூகத்தொடர்பு நாள் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 13ஆம் திகதி சிறப்பிக்கப்படுகின்றது.

## வத்திக்கான் அஞ்சல்துறை 2018இல் புதிய தபால்தலைகளை வெளியிடவுள்ளது

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திரு அவையின் தலைமைப் பொறுப்பேற்ற நான்காம் ஆண்டு நிறைவு - திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2017ஆம் ஆண்டில் உலகில் மேற் கொண்ட திருத்தூதுப்பயணங்களின் நினைவு மற்றும் பல முக்கிய நிகழ்வுகளின் தபால்தலை களை வத்திக்கான் அஞ்சல் துறை 2018ஆம் ஆண்டில் வெளியிடவுள்ளது. திருத்தந்தையர் முத்திப்பேறு பெற்ற ஆறாம் பவுல் - முதலாம் ஜோன் போல் ஆகியோர் விண்ணகம் அடைந்ததன் நாற்பதாம் ஆண்டு - புனித பாதர் பியோ அவர்கள் இறைபதம் அடைந்த ஐம்பதாம் ஆண்டு - பாப்பிறை அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதன் 25 ஆம் ஆண்டு நினைவு - உலக ஆயர்கள் மாமன்றத்தின் 15ஆம் ஆண்டு - பாப்பிறை இறையியல் கழகத்தின் முன்னூறாம் ஆண்டு - உலகளாவிய மனித உரிமைகள் அறிக்கை வெளியிடப்பட்டதன் எழுபதாம் ஆண்டு உட்பட பல முக்கிய நிகழ்வுகளின் நினைவாக 2018ஆம் ஆண்டில் தபால்தலைகளை வெளியிடவுள்ளதாக அறிவித்துள்ளது வத்திக்கான் அஞ்சல் துறை.

## உண்மையின் எண்ணங்கள்

### மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர்

மன்னார் மறைமாவட்டத்தின் 3ஆவது ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை யாழ்ப்பாணத்தில் பிறந்தும் அவரின் சகோதரக்குரு ஜோ பெர்னாண்டோ அடிகளார் யாழ்.மறைமாவட்டத்தில் பணியாற்றியிருந்தும் (1962 - 1980) வடபகுதியைப் பொறுத்தவரை புதிய மன்னார் ஆயர் அதிகம் அறியப்படாத ஒருவராகவே இருந்துள்ளார். 11 நவம்பர் 2017 அன்று காலைக்கதிர் பத்திரிகை மறை மேய்ப்பரே வருக என்ற தலைப்பில் ஓர் ஆசிரியர் தலையங்கம் வரைந்துள்ளது.

கிறிஸ்தவ செய்தி இதழ் வாசக அன்பு நெஞ்சங்கள் அதனை படிக்க வேண்டுமென சிபாரிசு செய்கிறோம். பணியைத் தொடர்வதற்கு வருகை தரும் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை வரவேற்கும் அதேசமயம் அவருக்கு முதல் அப்பணியில் மேன்மைத்துவத்தை வெளிப்படுத்திய அருளாளர்களின் பண்பியல்புகள் சிறப்புக்களை ஒருதடவை நினைவூட்டிக்காட்டுவதும் இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாகவும் நமது கடமையாகவும் இருக்கும் எனக் கருதுகிறோம் எனத் தொடங்கும் அவ்வாசிரியர் தலையங்கம் முன்னாள் ஆயர்களின் பணிகளைப் பட்டியலிட்டு நமது கத்தோலிக்க ஆயர்கள் தமது மதம் சார்ந்த மறைமேய்ப்புப் பணிக்கு அப்பால் இனவழிகாட்டிகளாகவும் சமூக நெறியாளர்களாகவும் என்றும் செயலாற்றி வருகின்றார்கள்.

அந்த வகையில், தமது பொறுப்பை புதிய ஆயரும் தன்னினத்தின்பால் உவந்து முன்னைய ஆயர்களைப் போல் சிறப்பாக அருள்பணியாற்றுவார் என எதிர்பார்க்கிறோம் என வேண்டி நிற்கிறது. மன்னார் மறை மாவட்டத்தின் 3ஆவது ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை 45 ஆண்டுகள் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் பணியாற்றி சிங்கள மொழியை மிகச் சிறப்பாகப் பேசவும் சிங்கள அரசுத் தலைவர்கள் பலரை நன்கு அறிந்தும் இருக்கின்ற நிலையில் தமது பொறுப்பை புதிய ஆயரும் தன்னினத்தின்பால் உவந்து முன்னைய ஆயர்களைப்போல் சிறப்பாக அருள்பணியாற்றுவார் என்று நம்புகிறோம்.

# முகங்களுக்கல்ல கொள்கைகளுக்கே அனைவரும் முன்னுரிமை கொடுங்கள்

## யாழ். ஆயர் வேண்டுகோள்



யாழ்.ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை புத்தாண்டுச் செய்தியில்; தமிழ் மக்களின் பொதுநலனில் அக்கறை கொண்டோர் யார் - தமிழ் மக்களின் நீதியோடு கூடிய நிரந்தர தீர்விற்காக உழைக்கக் கூடியோர் யார் என்பதை இனங்காணவேண்டும்.

முகங்களுக்கல்ல கொள்கைகளுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஊரவர் உறவுகள் என்ற உணர்வு எல்லைகளைத் தாண்டி உண்மையாகத் திறமையுடையோரையும் இளையோர் களையும் தெரிவு செய்ய வேண்டும் என வேண்டுகிறோம். அரசியல்வாதிகளும் தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் - கொள்கை சுயலாபங்கள் - கட்சி நலன்கள்- கருத்து வேறுபாடுகள் போன்ற அனைத்தையும் கடந்து தமிழ் மக்களின் ஒட்டுமொத்த சுபீட்சமான எதிர்காலத்திற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டுமென தமிழ் மக்கள் அனைவர் போராலும் சம்பந்தப்பட்ட அனைவர்க்கும் வேண்டுகோள் விடுக்கிறோம் என வேண்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கட்சிகளின் கட்டுப்பாட்டிலா தொழிற்சங்கங்கள் உள்ளன?

## ஊர்வம்பு

■ குருவியார்

thamizhkaalaikathir@gmail.com

''போற போக்கிலை அரசாங்க ஊழியர்கள் வேலை செய்யிற நாள்களை விட, வேலைநிறுத்தம் செய்யிற நாள்கள்அதிகமாகிவிடும் போலையிருக்கு'' என்றபடியே சந்தியடியில் கச்சான் விற்பனையையும் ஊர்வம்பையும் ஒன்றாக ஆரம்பித்தாள் செல்லாச்சி.

''அப்பிடி 'விழுந்த வளத்துக்குக் குறிசுட்ட மாதிரி' கதைக்கக்கூடாது. தொழிற்சங்கம் என்பது தொழிலாளர்களின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்கத் தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட அமைப்பு. அரச இயந்திரம் தொழிலாளர்களின் நலன்களைப் பற்றிக் கவலைப்படாதபோது அவர்களும் வேலைநிறுத்தம் செய்து தங்களைப் பாதுகாக்க வேண்டித்தானே இருக்கு'' என்றார் ஏரம்பர்.

இதைக்கேட்டதும்ரூபன், ''இலங்கை போன்ற வளரும் நாடுகளில் அரச சேவைகளின் முக்கியத்துவம் எங்களுக்கும் தெரியும். எவ்வளவோ தூரத்தில் இருந்து தங்கடை பிள்ளைகளை இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்துகளில் சாரதிகள் மற்றும் நடத்துநர்களை நம்பியே அனுப்பும் பெற்றோர் இருக்கிறார்கள்.தனியார்துறையினர் தமக்கு இலாபம் இல்லாத எந்தப் பகுதியிலும் அல்லது எந்தத் துறையிலும் கால்வைக்க மாட்டார்கள். மிகவும் பின் தங்கிய பிரதேச மக்கள் எல்லாவற்றிற்கும் இலாப நோக்கமற்ற அரச சேவைகளையே நம்பியிருக்கிறார்கள். அதனால், கதைத்துத் தீர்க்கக் கூடிய பிரச்சினைகளில் கூட வேலைநிறுத்தம் என்று இறங்கக் கூடாது என்றுதான் சொல்லுகிறோம்'' என்றான்.

அப்போது கைபேசியிலிருந்து தலையை நிமிர்த்திய ஜீவன், ''அதிலும் இலங்கையிலை நடக்கிற வேலைநிறுத்தங்களில் தொழிற்சங்கங்கள் பிரச்சினைகளை முன்வைக்கிறதை விட, அரசியல் தலைவர்களை இலக்கு வைத்துத் தாக்குவதும், தொடங்கும் போது சொல்லும் காரணத்தை விட்டு.. புதுப்புதுக் காரணங்களைச் சொல்லி வேலைநிறுத்தத்தைத் தொடர்வதும், பொதுமக்களுக்கு இவற்றில் அரசியல் பின்னணிகள் இருக்குமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது''என்றான்.

இதற்குச் செல்லாச்சி, ''இப்ப எல்லாம் வேலைநிறுத்தத்தால் மக்களை எவ்வளவு அதிகமாகச் சிரமப்படுத்த முடிகிறதோ அந்தளவுக்கு தாங்கள் நினைத்ததை அடைந்துவிட முடியும் என்ற போக்கு தொழிற்சங்கங்களிட்டை வந்திருக்கு. கடைசியில் இலகுவாக ஒரு மன்னிப்புக் கேட்டுவிட்டால் மக்கள்பட்ட துன்பம் எல்லாம் போயிடும் என்று நினைக்கினம்'' என்று கோபமாகச் சொன்னாள்.

''இப்ப நடந்து முடிந்த வடக்கு பேருந்து வேலைநிறுத்தம் முடியும் போது தொழிற்சங்கத்தினர் 'பாடசாலை மாணவர், அரச, அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் வைத்திய சாலைப் பணியாளர்கள்ஆகியோருக்கு, தமது போராட்டத்தால் ஏற்பட்ட சிரமங்களுக்கு மன்னிப்புக் கேட்கிறம்' என்று சொல்லிச்சினம். எந்த அரச சார்பற்ற நிறுவனக்காரர் பேருந்திலை போகினம் என்று தெரியவில்லை. மற்றது மாணவர்களோ அரச ஊழியர்களோ பேருந்து இல்லாவிட்டால் அன்று விடுமுறை எடுக்கலாம். மிஞ்சிமிஞ்சி அன்றைய சம்பளம் போகும். ஆனால், சொந்தமாக இருசக்கர வாகனம் கூட வாங்க முடியாத, அன்றாடம் தினக்கூலிக்குச் செல்லும் உழைப்பாளர்கள் - அதிலும் நகர்பகுதியில் தனியார் நிறுவனங்களில் குடும்பக் கஷ்டத்துக்காக வேலைக்குப் போகும் யுவதிகள் - பேருந்து இல்லாமல் சிற்றூர்திகளில் காவாலிகளின் தொல்லைகளால் படும் சிரமங்கள் எல்லாம் எவர் கண்ணிலும் படுவதில்லை. இத்தனைக்கும் பெரும்பாலான வேலைநிறுத்தங்கள் ஆளும் தரப்புகளை இக்கட்டில் மாட்டிவிட, எதிர்தரப்பு அரசியல்வாதிகளால் தூண்டி விடப்படுகின்றனவோ என்ற சந்தேகம் பரவலாக எழுந்திருக்கிறது'' என்றான்.

அதுவரை மற்றவர்கள் கதைப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த வாத்தியார், ''அரசியல்வாதிகள் தொழிலாளரைத் தூண்டி விட்டு அரசியல் நடத்துவது இப்ப மட்டுமில்லை.முந்தியும் நடந்திருக்கு. அறுபதாம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் வாளி மலசலகூடங்கள் பாவனையில் இருந்தன.தினமும் துப்புரவுப் பணியாளர்கள் காலையில் தள்ளு வண்டியுடன் வீடுவீடாகச் சென்று மலசலகூட வாளிகளை வெறுமையாக்கிச் செல்வார்கள். உள்ளூராட்சித் தேர்தல் சமயத்தில் வட்டார உறுப்பினராக இருந்த சட்டத்தரணி ஒருவர், பணியாளர்களைத் தூண்டிவிட்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபடவைத்தாராம். மலசலகூட வாளிகள் நிரம்பி வழிந்து, மக்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்க நேர்ந்தது.அதன் பிறகு வேலைநிறுத்தத்தை நிறுத்திவிட்டு பணியாளர்கள் பணிக்குத் திரும்பினார்கள்.வேலைநிறுத்தத்தைத் தூண்டி விட்ட சட்டத்தரணி, அன்றைய தினம் காலையில் பணியாளர்களுடன் தானும் வீடுவீடாகச் சென்று தன்னால்தான் வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்ததாகப் 'படம் காட்டி' ஆதரவு பெற்றார். தகவல் தொழில்நுட்பம் வளராத காலத்தில் சனமும் ஏமாந்து அவருக்கு மீண்டும் வாக்களித்து வெற்றி பெற வைத்தது. ஆனால், வேலை நிறுத்தத்தைத் தூண்டி விட்டதே அவர்தான் என்று தெரிய வந்த பிறகு ,அவரால் எத்தனையோ குட்டிக்கரணம் போட்டும் எந்தத் தேர்தலிலும் வெல்ல முடியவில்லை. இன்று தகவல் தொழில்நுட்பம் வளர்ந்து விட்டது. இப்ப தமது சுயநலத்துக்காக வேலைநிறுத்தங்களைத் தூண்டி விடும் அரசியல்வாதிகளை இனம் கண்டு வாக்களிக்காது விடுவது மக்களின் கையில்தான் இருக்கிறது'' என்றார்.

இதைக் கேட்டபின்னர் தொண்டையைச் செருமிக் கொண்டே கதைக்கத் தொடங்கினான் பேப்பர்தம்பி.

''தொழிற்சங்கம் என்பது தொழிலாளர்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க, நிர்வாகத்துடன் முரண்பட்டுப் போராட வேண்டும். அதேவேளை, அந்தத் தொழில் சிறப்பாக வளர நிர்வாகத்துடன் ஒத்துழைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அதற்கு இருக்கிறது. முன்னர் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் இருந்தார்கள்.1980 ஆம் ஆண்டில் சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை முழுவதிலும் இருந்த பல தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தம்நடத்தின.அப்போதைய ஜே.ஆர்.ஜெயவர்த்தனாஅரசுஅவர்களைப் பணிநீக்கம் செய்தது.தொழிற்சங்கத் தலைவர்களை சிறையில் அடைத்தது. ஒருவாறு பலரும் மருத்துவ சான்றிதழ் கொடுத்து பணியில் சேர்ந்தாலும் சுமார் 40 ஆயிரம் பேர் ஒரேயடியாக வேலை இழந்தனர். அவர்களில் சிலர் வறுமையால் தற்கொலை செய்ததும்,பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதும் கொடுமையான வரலாறு. ஆனால், இன்று தொழிற்சங்கங்கள் கட்சி அரசியலின் இன்னொரு வடிவமாக மாற்றப்பட்டு விட்டன. இதுதான் தொழிற்சங்க இயக்கத்தைத் தடம்புரள வைத்திருக்கிறது. இதுவே அத்தனை சீரழிவுக்கும் காரணம்.'' என்றான் பேப்பர்தம்பி.

அதனைத் தலையசைத்து ஏற்றுக் கொண்ட வாத்தியார், ''தமிழர்பகுதிகளில் தம்மைத் தமிழ்த் தேசிய ஆதரவாகக் காட்டும் தொழிற்சங்க அமைப்புகள் தெற்கில் உள்ள தலைமைச் சங்கத்தின் கீழ் செயற்படுவதே நகைமுரணாக இருக்கிறது. கேட்டால் அப்போதுதான் அரசிடமிருந்து பயன்களைப் பெறலாம் என்கிறார்கள். அதையே அரசியல் தீர்வுக்கு அரசுடன் இணங்கிப் போய் பயன்களைப் பெறலாம் என்றால் எதிர்ப்பார்கள். இலங்கையில் தொழிற்சங்கங்களில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்களால் அந்தத் தொழிற்சங்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்பதுதான் உண்மை. ஏனென்றால், தொழிற்சங்கங்கள் அரசியல்கட்சிகளின் உள்ளமைப்புகளில் ஒன்றாகி விட்டன.அரசியல்கட்சியின் செயற்றிட்டத்தையே அந்தத் தொழிற்சங்கம் செயற்படுத்துகிறது. உலகில் எதற்காகத் தொழிற்சங்க அமைப்பு உருவாக்கப்பட்டதோ அது இன்று இல்லை.ஒரு நிறுவனத்தை அல்லது துறையை அரசியல்கட்சி ஒன்று மிரட்டிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கப் பயன்படும் ஓர் அமைப்பாகத் தொழிற்சங்கம் மாறி வருகிறது. இது நிறுத்தப்பட வேண்டும்'' என்றார்.

அப்போது பேப்பர்தம்பி, ''தமது அரசியல் இருப்புக்குத் தொழிற்சங்கத்தைத் துருப்புச் சீட்டாகக் கட்சிகள் பயன்படுத்துகின்றன. இதனால் அந்தத் துறை அல்லது நிறுவனம் முற்றாக அழிந்தாலும் அரசியல் கட்சிக்குக் கவலையில்லை. இந்தியாவின் கேரள மாநிலத்தில் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டியவுடனேயே, பக்கத்தில் சிவப்புக் கொடி ஒன்றை நட்டு தொழிற்சங்கம் ஆரம்பித்து விடுவார்கள் என்று வேடிக்கையாகச் சொல்வார்கள். இப்போது கேரளத்தில் இருந்த தொழில் துறைகள் பலவும் அரசியல்த் தொழிற்சங்கச் செயற்பாடுகளால் முற்றாக முடங்கி விட்டன. புதிதாக எந்த முதலீடும் அங்கு செல்வதில்லை. யுத்தத்தால் பாதிக் கப்பட்ட வடக்குக் கிழக்கில் இந்த நிலைமை வந்தால் என்னாகும் என்று சிந்திக்க வேண்டிய நேரம் இது'' என்றான்.

''இதைவிடக் கொடுமை ஒன்று நடக்கிறது'' என்று பீடிகை போட்ட ஜீவன், ''ஊழியர்களுக்குத் தொழிற்சங்கப் பாதுகாப்பு இருப்பதால், அவர்கள் என்ன தவறு செய்தாலும் நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்க முடிவதில்லை. இது ஊழியர்களிடம் 'எப்படியும் நடக்கலாம்; என்ன வேணுமென்றாலும் செய்யலாம்' என்ற மனநிலையைத் தோற்றுவித்து விட்டது.தொழிலாளரை அங்கத்தவர்களாக்கத்தான் எல்லாத் தொழிற்சங்கங்களும் முண்டியடிக்கின்றன. அவர்களின் தவறுகளைக் கண்டித்தால் வேறு சங்கத்துக்குப் போய் விடுவார்கள் என்ற பயத்தில், தொழிலாளர் களவெடுத்தாலும், பெண்களின் கையைப் பிடிச்சு இழுத்தாலும் 'செய்தது சரிதான்' என்று தொழிற்சங்கம் முட்டுக் கொடுக்கும். நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியாது.இது வரை தெற்கில் இருந்த இந்தப் பழக்கம் மெதுவாக இங்கும் வரத்தொடங்குகிறதோ என்று அச்சமாக இருக்கிறது'' என்றான்.

''இதெல்லாம் அரசுத் துறைகளில் மட்டும்தான் என்றில்லை'' என்று சொன்ன பேப்பர்தம்பி, ''வங்கிகள் போன்றவற்றிலும் நிலைமை இதுதான். வங்கிகள் சிலவற்றில் ஊழியர்கள் சிலர் செய்த தகிடுதத்தங்களால் பொதுமக்கள் பாதிக்கப்பட்ட போதும்,தவறு செய்த ஊழியர்களுக்குத் தொழிற்சங்கங்கள் பாதுகாப்பு வழங்கி விடுகின்றனவாம். அதனால் தவறு செய்தவர்கள் சுதந்திரமாக இருக்கின்றனர். ஆனால், பொதுமக்கள் தாம் இழந்தவற்றுக்கான நிவாரணத்தைக் கூடப் பெற முடியாதுள்ளதாகச் சொல்லுகிறார்கள்.'' என்றான்.

''இதெல்லாம் ஒருவித பரஸ்பர புரிந்துணர்வோடு நடக்கிறதால்தான் நாடு சீரழிகிறது'' என்று சொன்ன வாத்தியார், ''தொழிலாளர்களின் பொறுப்பற்ற செயல்களையும், மோசமான அயோக்கியத்தனங்களையும் தொழிற்சங்கம் ஆதரிக்கும். அவர்கள் மீது நிர்வாகம் வேலை நீக்கமோ வேறு எந்த நடவடிக்கையோ எடுக்காமல் தொழிற்சங்கம் சார்ந்த அரசியல்கட்சி காப்பாற்றும். அதற்குப் பதிலாகத் தொழிற்சங்கம் தான் சார்ந்த அரசியல்கட்சியின் அபிலாஷைகளுக்காகச் செய்யும் வேலைநிறுத்தம் போன்றவற்றையும், மறைமுக பேரம்பேசுதல்களையும் தொழிலாளர்கள் வாய்மூடி ஏற்றுக் கொள்வார்கள். இந்த எழுதப்படாத உடன்படிக்கை ஏற்கனவே கடனில் தள்ளாடும் இலங்கையை மட்டுமில்லாமல், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கை 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக' இன்னும் மோசமான நிலைக்குத் தள்ளி விடும்.'' என்றார்.

அதுவரை மற்றவர்கள் கதைப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த ஏரம்பர், ''அப்ப இனிமேல் இந்த நாட்டிலை தொழிற்சங்கங்களே தேவையில்லை என்று சொல்லுறீங்களோ?'' என்று கோபமாகக் கேட்டார்.

அதற்கு வாத்தியார், ''தொழிற்சங்கம் இந்த நாட்டிலை அவசியமான ஒன்றுதான். இப்ப பனி கொட்டத் தொடங்கி விட்டது. தொழிற்சங்கம் ஏன் தேவை என்று அடுத்த முறை கதைப்பம்'' என்றபடியே எழுந்து நடந்தார்.

மற்றவர்களும் அவரைத் தொடரவே சந்தியடி அமைதியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செப்புகிறார்... சின்னப்பு!

*வணக்கமுங்கோ!*

இப்ப கிட்டடியில உங்காலை வன்னிப் பக்கம் நம்மடை பழைய கூட்டாளி ஒருத்தன்ரை வீட்டை போனனான் பாருங்கோ!

கன காலத்துக்குப் பிறகு என்னைக் கண்டவுடன, அவனுக்கும் முகமெல்லாம் வலு புளுகமாப் போச்சுது!

வலிகாம இடப்பெயர்வோடை வன்னிக்குப் போய், அங்கை அவன்ர தென்னந்தோட்டக் காணிக்குள்ள இருந்து, பிறகு அடிபாடு உச்சக் கட்டத்துக்குப் போக, ஊரூரா அலைஞ்சு, ஆமியிட்டை 'சரண்டராகி', வவுனியா – செட்டிக்குளம் ஆனந்த குமாரசாமி முகாமிலை இருந்து கொண்டு அதுக்குப் பிற்பாடு யாழ்ப்பாணத்துக்கு மீள் குடியேற்றமெண்டு வந்தாப்போல, இப்பதான் அவனைச் சந்திக்கப் போனனான்.

"வாடாப்பா... இதிலை கொஞ்சத்துக்கு இரு! குறை நினைக்காதை கொஞ்ச வேலை கிடக்குது. செய்து போட்டு வாறன்..." எண்டு சொன்னவன், தோட்ட மண்வெட்டியை எடுத்துக் கொண்டு, எனக்கு முன்னால முற்றத்துக்கு நேர வளர்ந்து நிண்ட வாழைக்குட்டியளை மட்டம் பிரட்டத் தொடங்கினான்.

"என்ன நடப்போறியே...?" நான் கேட்டேன்.

"ஓமோம்! உங்கை வளவுக்குள்ளை, எங்கை மூலை முடுக்குகளுக்குள்ளை இடம் கிடக்குதோ, அங்கையெல்லாம் குட்டியளை நட்டு, அதின்ர பரம்பலைப் பெருப்பிக்கப் போறன்..." எண்டு சொன்னான்.

"ஏன் இஞ்சாலை வாழைப்பழம் நல்ல விலையே...?" நான் திரும்பக் கேட்டன்.

"சீச்சி... நான் நடுகிறது பழத்துக்கு இல்லை. இலையளுக்கு..." எண்டு சொன்ன என்ர கூட்டாளி, மேற்கொண்டு சொன்ன விசயத்தைக் கேட்டு எனக்கு உடம்பெல்லாம் புல்லரிச்சுப் போச்சுப் பாருங்கோ!

'அவன் சொன்னவை இவைதான். இப்ப நான் அதைச் சொல்லுறன். கொஞ்சம் கவனமாகக் கேளுங்கோ!

டேய் சின்னா! நான் வாழைக்குட்டியள் நடுகிறதுக்குப் பின்னால ஒரு நோக்கம் இருக்குக் கண்டியே! அது என்னெண்டால், இப்ப உங்கினேக்கை உந்தப் பிளாஸ்ரிக் சமான்களாலை சூழல் மாசடையுறதாக ஒரு குற்றச்சாட்டு இருக்குது தானே. அதுதான் நான் பார்த்திட்டு, உந்தப் பிளாஸ்ரிக் பாவனையை ஒழிக்கிறதுக்கு, ஏதோ என்னாலை இயண்டதைச் செய்வம் எண்டிட்டுத்தான், இப்ப இந்த முயற்சியிலை இறங்கியிருக்கிறன். என்ர இந்த முயற்சியை, மற்றவையளும், பின்பற்றி நடப்பினமெண்டால்,உந்தப் பிளாஸ் ரிக் பாவனையைக் கொஞ்சம் கட்டுப் பாட்டுக்குள்ளை கொண்டு வரலாம்... எண்டு சொல்ல வாறன்.

வாழை இலை எண்டது எங்கட முன்னோர்களின்ர பாரம்பரியத்தில ஊறிப்போன ஒண்டு. இதை நாங்கள் விருத்தி செய்ய வேணும். இப்பவெல்லாம் சாப்பாட்டுக்கடையள்ள 'லஞ்சீற்' எண்டு ஏதோ ஒண்டை கோப்பைக்கு மேல விரிச்சுப் போட்டு, சோத்தை அள்ளிப் போடுகினம். இந்த 'லஞ்சீற்' பிளாஸ்ரிக் ரகத்தைச் சேர்ந்தது. மண்ணுக்குள்ளை போனாலும் உக்காது. வெளியில வைச்சு நெருப்புக் கொளுத்தினாலும், அதின்ர புகை நச்சுத் தன்மை உள்ளதெண்டும் சொல்லுகினம்.

அதாலை, நாங்கள் பழையபடி... உந்தச் சாப்பாட்டுக் கடை வழிய வாழையிலைப் பாவனையைக் கொண்டுவர வேணும். இப்பிடிக் கொண்டுவாறதன் மூலம் உந்த 'லஞ்சீற்' பாவனையை ஓரளவுக்குக் குறைக்கலாம்... எண்டுதான் நான் இதில இறங்கியிருக்கிறன்.

உங்கை சந்தியில இருக்கிற ரண்டொரு சாப்பாட்டுக் கடைக்காரருக்கு நான் இப்பவே சொல்லி வைச்சிட்டன். இன்னுமொரு நாலைஞ்சு மாசத்தாலை, உங்கட கடைக்கு ஒவ்வொரு நாளும் வாழையிலைக் கட்டுக் கொண்டு வந்து தருவன் . இனி உந்த 'லஞ்சீற்' எண்டதை எறிஞ்சு போட்டு, கடைக்கு வாற சனங்களுக்கு, வாழையிலையிலதான் எதுவும் வைச்சுக் குடுக்க வேணும் எண்டு.

அவையளும் மெத்த சந்தோஷப்பட்டு, ஓமெண்டு சொல்லிப் போட்டினம். எனக்கும் நல்ல சந்தோஷமாகக் கிடக்குது... எண்டு சொன்னவன், நாலு வாழைக்குட்டியளை ஒரு உரப் பையுக்குள்ளை வைச்சுக் கட்டித் தந்து, என்னைப்போல நீயும் உன்ர ஊரில,நாலு சாப்பாட்டுக் கடைக்காரரின்ர அணைவைப் பிடிச்சு, செய்யப்பார்.. எண்டான்.

உண்மையில என்ர கூட்டாளியை நினைக்க எனக்கு ரொம்பப் பெருமையாத் தான் இருந்தது.

ஏனெண்டாப் பாருங்கோ... 'பிளாஸ்ரிக் பாவனையை ஒழிப்போம்...' எண்டு உந்த றோட்டு வழிய ஊர்வலம் நடத்துறதையும், அந்த ஊர்வலத்துக்கு முன்னால நிண்டுகொண்டு போட்டோக்குப் 'போஸ்' குடுத்திட்டு, அது நாளைக்குப் பேப்பரிலை வருகுதோ எண்டு பார்க்கிறதையும் விட்டுப்போட்டு, குடும்பத்தில உள்ள ஒவ்வொருத்தரும், என்ர கூட்டாளி சிந்திச்சமாதிரி,... அவன் அதைச் செயற்படுத்தின மாதிரி... நடந்து கொண்டால் உந்தச் சாப்பாட்டுக் கடையில 'லஞ்சீற்' பாவனை குறையிற தோடை, சுற்றுச் சூழல் மாசடைவதைக் கட்டுப்படுத்தலாமல்லோ!

இனியாவது கொஞ்சம் சிந்திப்பமே... செயற்படுவமே...



# ஆளரவமற்ற தீவில் 887 சிலைகள்!

ஒரு பூர்வகுடி இனம் அழிந்த துயரக் கதை இது.

பசிபிக் பெருங்கடலில் தனித்துக்காணப்படும்தீவு அது. தனித்து என்றால்... மிகவும் தனித்து. அதைச் சுற்றி பல ஆயிரம் கிலோமீற்றர்களுக்கு எந்த நிலப் பரப்பையும், வேறு எதையும் கூட பார்த்திட முடியாது. நீலக் கடலின் நடுவே, பச்சை புள்ளியாய் இருக்கும் அந்தத் தீவு.

## அவற்றை நிறுவியவர்கள் யார்?

அந்தத் தீவின் வடக்கு மூலையில் ராணா ரராக்கு (Rana Raraku) எனும் அந்த எரிமலை எரிந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட முடியும் தருவாயில் இருந்தது. புகை மூட்டம் எங்கும். புகை இன்னும் முழுமையாக விலகாத நிலையில், சிலர் அந்த இடத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் உடல் மிகவும் வலிமையானதாக இருக்கிறது.

அவர்கள் அந்த எரிமலையின் அருகே சென்று, சில கூடைகளில் சாம்பல்களை சேகரிக்கிறார்கள். அதைச் சுமந்து கொண்டு மீண்டும் மலையிலிருந்து இறங்குகிறார்கள். கால்களில் செருப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அந்தக் காட்டில், மலையில் அவர்கள் வெறுங் கால்களோடு நடக்கின்றமை பெரும் ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. சில மணி நேர நடைக்குப் பிறகு, ஓர் இடத்துக்கு வந்து சேர்கிறார்கள். அங்கு ஏற்கெனவே குழுமியிருக்கும், அந்தக் கூட்டம் ஏதேதோ கலவைகளைக் கலந்து சில வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

உற்றுப் பார்த்தால், அவர்கள் சிலைகளை வடித்துக் கொண்டிருப்பது தெரிகிறது. அங்கிருந்து சற்று நகர்ந்துப் போனால், பலர் அந்த மண்ணில் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். சிலர் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த மொழி நமக்குப் பரிச்சயமானது அல்ல.

### எத்தனை மோவாய் (Moai) முடிந்தது?

கடைசி மோவாய் செய்துகொண்டிருக்கிறோம். கணக்குப் பார்த்தால், எப்படியும் 800 இற்கு மேல் இருக்கும். என்று அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வாழ்க்கை அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது. கடலும், காடும், மலையும், எரிமலையும், சிற்பக்கலையும், மீன் உணவும் என அத்தனை ரம்மியமாக ஒரு வாழ்வை வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

இந்தத் தீவை ஈஸ்டர் தீவு என்று இன்று அழைக்கிறார்கள். இந்தக் கதைகள் நடப்பது 13 இலிருந்து 15 ஆம் நூற்றாண்டு காலகட்டமாக இருக்கலாம். ஐரோப்பியர்களின் கால்கள் இந்தத் தீவை கண்டடையும் வரை நிம்மதியாகத்தான் இருந்தார்கள். முதல் ஐரோப்பியன் அந்தத் தீவில் கால்வைத்த அந்த நொடி முதல் இவர்களின் அழிவு தொடங்கியது. அதுவரை அதிக வேற்று மனித இடையூறு இல்லாமல், இயற்கையை மட்டுமே நாடி வாழ்ந்து வந்த அந்த இனம் சூறையாடப்பட்டது. பல நாடுகளுக்கு, அவர்கள் அடிமைகளாக இழுத்துச் செல்லப்பட்டனர். இது அந்த இனத்தின் எண்ணிக்கையைப் பாதியாகக் குறைத்தது. மிச்சமிருந்த மக் களையும் அந்த எலிகள் கடித்துக் குதற ஆரம்பித்தன. ஆம்...நிஜமான எலிகள் தான்.



பல வெளிநாட்டவர்கள் வரத் தொடங்கிய நிலையில், அவர்களின் கப்பல்களில் பாலிநேசியன் எலி (Polynesian rats) எனப்படும் அந்த எலிகள் தீவை ஆக்கிரமிக்கத் தொடங்கின. அது பலவித நோய்களை அவர்களுக்கு ஏற்படுத்தின. கொந்தளிக்கும் கடலிலும், கொதிக்கும் எரிமலைகளிலும் துள்ளி விளையாடிய அந்த இனம், பலவீனமடையத் தொடங்கியது.

வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும்போது, கிடைத்த முதல் தகவல்படி இந்தத் தீவில் 17,500 பேர் வரை வாழ்ந்துள்ளார்கள் என்பது நிரூபணம் ஆகிறது. 1,700 களில் தொடக்கத்தில் இந்தத் தீவில் 3,000 பேர் வரை



இருந்தார்கள் எனச் சொல்லப்படுகிறது. 1877 இன் கணக்குப்படி 111 பேர் இருந்திருக்கிறார்கள். இந்தத் தீவின் பூர்வ குடி இனத்தின் பெயர் ரபா நுய் (Rapa Nui). இன்று இந்த ஈஸ்டர் தீவு உலகின் சில ஆச்சரியங்களில் ஒன்று. குறிப்பாக, இங்கிருக்கும் மோவாய் என்று சொல்லப்படும் அந்தச் சிலைகள்.

1. ஈஸ்டர் தீவு சிலி நாட்டின் ஆளுகைக்குள் வருகிறது. சிலியின் தலைநகரான சான்டியாகோவுக்கும் ஈஸ்டர் தீவுக்கும் 2,300 மைல்கள் தூரம். 5 மணி நேர விமானப் பயணம்.

2. இந்தத் தீவில் ஒரே ஒரு சிலை மட்டும் சற்று வித்தியாசமாக இருக்கும். அது முட்டியிட்டபடி உட்கார்ந்திருக்கும். அதன் முகம் சற்றே மேலே பார்த்தவாறு, குறுந்தாடியோடு இருக்கும். இது அந்தத் தீவின் Red Puna Pua எனும் கல்லைக் கொண்டு செதுக்கப்பட்டுள்ளது.

3. ரபா நுயி இனத்தின் வழிபாட்டுத் தலம் ஒன்று இந்தத் தீவிலிருக்கிறது. அதற்கு அஹூ அகிவி (Ahu Akivi) என்று பெயர்.

**அந்த ஒரேயொரு வித்தியாசமான சிலை...**

நீளமான மூக்கு, அகலமான கன்னங்கள், அடர்த்தியான புருவம், ஆழமான கண்கள், செவ்வக வடிவிலான காதுகள், அந்த நாசி துவாரம் சற்றே வளைவாகக் காணப்பட்டது. அதாவது ஒரு மீன் தூண்டிலைப் போல. இப்படித்தான் அந்த மோவாய்கள் இருக்கும். இதுபோன்ற சிலைகளை உலகின் வேறு எந்தப் பகுதியிலுமே பார்க்க முடியாது. 101 சதுர கி.மீ. பரப்பளவில் இருக்கும் ஈஸ்டர் தீவில் மொத்தம் 887 மோவாய்கள் இருக்கின்றன.

இதில் பாதிக்கும் மேலான சிலைகள் கடலைப் பார்த்தும், மிகுதியானவை தீவைப் பார்த்த மாதிரியுமாக இருக்கின்றன. இந்தத் தீவை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்களுக்குப் பல ஆச்சரியங்கள் இருந்தன. முதலில் இந்தச் சிலைகளை யார் செய்தார்கள் என்ற கேள்வி வந்தது. ஒருவேளை வேற்றுக்கிரகவாசிகளின் (ஏலியன்களின்) வேலையாக இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது.

(21 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கர்ப்பப்பை வாய் பரிசோதனை அவசியம்

கர்ப்பப்பையில் தொற்றுகள், வெள்ளைப் படுதல் போன்ற பிரச்சினைகள் தொடர்ந்து இருந்தால் அதை அலட்சியப்படுத்தக் கூடாது.

கர்ப்பப்பை வாய் புற்றுநோய், மரபு ரீதியில் வருவதற்கு வாய்ப்புகள் இல்லை. அறிகுறிகள் இருந்தால் தான், பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்பதில்லை.

மணமான பெண்கள், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.குறைந்தபட்சம், 35 வயது முதல், 45 வயது வரையுள்ள பெண்கள், இந்த பருவத்தில் ஒருமுறையாவது, பாப்ஸ்மியர் பரிசோதனை செய்து கொள்வது நல்லது.அதேபோல், 35 முதல் 45 வயதிற்குள், ஹெச்.பி.வி., பரிசோதனை செய்து கொள்வதும் நல்லது.

பாப்ஸ்மியர் பரிசோதனையில், வைரஸால் உண்டாகும் மாறுதல்களை மட்டும்தான் கண்டுபிடிக்க முடியும். 35 வயதிற்குக் கீழ் இருந்தால், இந்தப் பரிசோதனை தேவை இல்லை. மெனோபாஸ் எனப்படும் மாதவிடாய்



நின்ற பெண்களும், பாப்ஸ்மியர் பரிசோதனை செய்து கொள்வது சிறந்தது.



# மார்பக புற்றுநோய் வராமல் தடுக்க...!

இன்றைய காலகட்டத்தில் மார்பகப் புற்றுநோய் அதிகளவில் பெண்களை பாதிக்கிறது. இந்த நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளைப் பார்க்கலாம்.

30 வயதுக்கு பிறகு ஆண்டுக்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

தாய்மார்கள் குழந்தைகளுக்கு குறைந்தது ஓராண்டு வரை கட்டாயம் பாலூட்ட வேண்டும்.

உயரத்துக்கு ஏற்ற எடை என்பதற்கு கவனம் கொடுக்க வேண்டும்.

மாதவிலக்குக்கு இடைப்பட்ட நாள்கள், கர்ப்ப காலம், பாலூட்டும் காலம் ஆகிய காலங்களில் ஏற்படும் இயல்பான மாற்றங்களைத் தெரிந்துவைத்துக் கொண்டால்தான், இயல்புக்கு மாறான மாற்றங்கள் தோன்றினால் அதை உடனே உணர முடியும்.

தக்காளி, கரட், கருப்பு திராட்சை, மாதுளை, குடமிளகாய், முட்டைக்கோஸ் பப்பாளி, புறொகோலி, பூண்டு ஆகிய புற்றுநோய்க்கு எதிரான உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதன் மூலம் மார்பகப் புற்றுநோய் வராமல் தடுக்க முடியும்.



# கண்கள் வழியாக காதல் ஆய்வு

அறிமுகமற்ற ஆணும், பெண்ணும்கூட அதிக நேரம் கண்ணுக்கு கண் நோக்கிக் கொண்டிருந்தால் காதல் வந்துவிட வாய்ப்பு இருக்கிறதாம்.

கண்ணும் கண்ணும் நோக்கினால் காதல் வரும் என்பது சரிதான் என்று நவீன ஆய்வு ஒன்று உறுதி செய்திருக்கிறது. அறிமுகமற்ற ஆணும், பெண்ணும் கூட அதிக நேரம் கண்ணுக்கு கண் நோக்கிக் கொண்டிருந்தால் காதல் வந்துவிட வாய்ப்பு இருக்கிறதாம். அறிமுகமற்ற ஆண்களையும், பெண்களையும் நேருக்கு நேராக உட்காரவைத்து இரண்டு நிமிடங்கள் கண்களை உற்றுப்பார்க்க வைத்திருக்கிறார்கள். அப்போது அவர்கள் கண்களை மூடாமலே பார்க்கும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் அவர்களது மூளையில், மனோநிலையில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படுகின்றன? என்று ஆராய்ந்திருக்கிறார்கள்.

ஆழமான அந்தப் பார்வையில் அன்புக்கும், காதலுக்கும் தேவையான மாற்றங்கள் இருவரிடமும் நிகழ்ந்தன எனக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்போதுதான் அவர்கள் முதல் முறையாக பார்த்த நிலையிலும், அவர்கள் பார்வையிலே காதல் ஊடுருவியதை கண்டு சிலிர்த்திருக்கிறார்கள். இது இங்கிலாந்தில் நடந்த ஆராய்ச்சி.

இலங்கையைப் பொறுத்த வரையில் முன்பு ஆண்களின் பார்வைக்கு அதிக சுதந்திரமும், பெண்களின் பார்வைக்கு தடையும் போடப்பட்டிருந்தது. ஆண்களை நேருக்கு நேர் பார்ப்பவள், திரும்பித் திரும்பிப் பார்ப்பவள் அவ்வளவு நல்லவள் அல்லாள் என்பது போன்ற கருத்து முன்பு நிலவி வந்தது.

இதில் ஆச்சரியமான உண்மை என்னவென்றால் ஆண்களைவிடப் பெண்களுக்கு அதிக சக்தி இருக்கிறது.

அவர்கள் ஒரே பார்வையிலே, அந்த ஆண் நல்லவனா? கெட்டவனா? என்று முடிவு செய்துவிடுவார்கள். முடிவெடுக்கும் மையமான இடதுபக்க மூளை பெண்களுக்கு கூடுதல் சக்தியோடு இயங்குவதுதான் இதற்கான காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்

# பசிக்கும் போதுதான் சாப்பிட வேண்டுமா?



வயிற்றில் சில அமிலங்கள் சுரக்கும்போது பசி உணர்வு ஏற்படும். அந்த நேரத்தில் சாப்பிட்டால் தான், உணவு முழுமையாக செரிமானமாகி சத்துகளை உடல் கிரகிக்க முடியும்.

நேரத்துக்குச் சாப்பிட வேண்டாம். எப்போது உணவு தேவையோ அந்த நேரத்தில், வயிற்றில் சில அமிலங்கள் சுரக்கும். அதன் விளைவாக பசி உணர்வு ஏற்படும்.

அந்த நேரத்தில் சாப்பிட்டால்தான், உணவு முழுமையாக செரிமானமாகி சத்துகளை உடல் கிரகிக்க முடியும். பசி உணர்வு இல்லாதபோது சாப்பிட்டால் இந்தச் செயற்பாடு முறையாக நடக்காது. எனவே, நேரத்துக்குச் சாப்பிடுவதை விட, பசி உண்டாகும் நேரத்தில் சாப்பிடுவதே நல்லது.

எப்போது நமக்குப் பசி வந்து, சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் வருகிறதோ அப் போதே செரிமானத்துக்கான பணிகள் ஆரம்பித்துவிடும். அதாவது, என்ன சாப்பிடப்போகிறோம் என்று திட்டமிடுவதில் தொடங்கி, அந்த உணவைப் பார்ப்பது, நுகர்வது, சுவைப்பது என உணவு வயிற்றுக்குள் போகும் முன்னரே அந்த உணவின் இலகுவான தன்மையைப் பொறுத்து செரிமானத்துக்கு உடல் தயாராகி விடும்.

உடல் அமைப்புக்கும் உணவின் அளவுக்கும் சம்பந்தமில்லை. ஒருவர், தொடர்ச்சியாக அதிகம் சாப்பிட்டு வந்தால், நாளடைவில் இரைப் பையின் அளவு, தானாகப் பெரிதாகி விடும். அதற்கேற்றால் போல் பசியும் உணவின் அளவும் அதிகரித்து விடும்.

தூக்கத்துக்கும் உண்ணும் உணவுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. போதுமான அளவு தூங்காதவர்கள் அதிகமாகச் சாப்பிடுவார்கள். எனவே, போதுமான அளவுக்குத் தூங்குங்கள். உங்களை அறியாமலேயே நீங்கள் சரியான அளவில் உண்ணத் தொடங்கி விடுவீர்கள்.

வயிறு நிரம்பியவுடன் சாப்பிடுவதை நிறுத்தி விடுங்கள். நீங்களாகப் பார்த்து, முதல் முறை தட்டில் எடுத்து வைத்துக்கொண்ட உணவே உங்களின் தேவைக்கான சரியான அளவு. எனவே, தட்டு நிறையச் சாப்பிட்டபிறகு, மீண்டும் சாப்பிடாமல் இருக்க முயற்சி செய்யுங்கள். இது உடல் பருமனாவதில் இருந்து தப்ப உதவும்.

# யோகாவின் சிறப்பு அம்சங்கள்

நோய் ஏதும் இல்லாமலிருக்கும் போதே யோகாசனம் செய்தால் வியாதிகளைத் தடுக்கலாம். நல்ல ஆரோக்கியத்துடன் வாழலாம்.

இதர மருந்து முறைகளுடன் இணைந்து செய்யலாம். சில வியாதிகளுக்கு உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய்களுக்கு அலோபதி சிகிச்சையுடன் யோகா சிகிச்சையும் மேற்கொண்டால் சிறந்த பலனைப் பெறலாம். யோகா செய்யும் முன் உங்களின் வைத்தியரையும், யோகா நிபுணரையும் கலந்தாலோசித்து செய்தால் மிகவும் நல்லது.

நோய் ஏதும் இல்லாமலிருக்கும் போதே யோகாசனம் செய்தால் வியாதிகளைத் தடுக்கலாம். நல்ல ஆரோக்கியத்துடன் வாழலாம். மனமும் அமைதியாக மகிழ்ச்சியாக இருக்கும். 30 லிருந்து 40 வயதுக்குள் யோகாவை பயின்று செயற்படுத்துவது மிகவும் நல்லது.

நமது துயரங்களுக்கெல்லாம் காரணம். புலனேந்திரியங்களுக்கு அடிமையாகி, கோப, காமக்குரோதங்கள், பணத்தாசை பிடித்து அலைவது. ஆனால், நம்முள் உறையும் ஆத்மாவை அறிந்து கொண்டால், மன, உடல் நோய்கள் மறையும். இதற்கு உதவுவது யோகாப் பயிற்சி.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# மியன்மாரில் ரோஹிங்கியா போராளிகள் மீண்டும் தாக்குதல்



யாங்கூன்,ஜன.07

மியன்மார் நாட்டில் இராணுவ வாகனம் மீது ரோஹிங்கியா போராளிகள் நேற்று மீண்டும் தாக்குதல் நடத்தியதில் பாதுகாப்புப் படை வீரர்கள் உட்பட 3 பேர் காயமடைந்துள்ளனர்.

மியான்மர் நாட்டில் இராணுவ ஒடுக்குமுறைக்குப் பயந்து சுமார் 4 லட்சம் ரோஹிங்கியா முஸ்லிம்கள் அண்டை நாடான பங்களாதேஷில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர். இதேபோல், இந்தியாவில் சுமார் 14 ஆயிரம் ரோஹிங்கியா அகதிகள் தங்கியுள்ளனர்.

ரோஹிங்கியா போராளிகளை மீண்டும் அங்கு குடியமர்த்துவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த நிலையில், மியான்மர் நாட்டின் ராக்கின் மாகாணத்தில் சென்றுகொண்டிருந்த இாணுவ வாகனத்தின் மீது ரோஹிங்யா போராளிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் பாதுகாப்பு படையை சேர்ந்த 2 வீரர்கள் உள்பட மூன்று பேர் காயம் அடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரோஹிங்கியாக்களை மீண்டும் குடியமர்த்தும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், அவர்கள் இதுபோன்ற தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உலகிலேயே மிக விலை உயர்ந்த வொட்கா மதுப் போத்தல் திருட்டு!



டென்மார்க் தலைநகர் நகரில் உள்ள தனியாருக்குச் சொந்தமான மதுபானவிடுதியில் 8 கோடியே 50 லட்சம் ரூபா மதிப்புள்ள 'வொட்கா' மதுப்போத்தல் திருட்டுப் போன சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டென்மார்க் தலைநகர் கோபன்ஹகனில் பிரையன் இங்க்பெர்க் என்பவருக்குச் சொந்தமான மதுவிடுதி உள்ளது. இங்கு உலகிலேயே மிக விலை உயர்ந்த 'வொட்கா' மதுவை அவர் வைத்திருந்தார்.

அதன்மதிப்பு 8 கோடியே 50 லட்சம் ரூபாவாகும். அந்தப் போத்தல் வெள்ளை மற்றும் தங்க நிற மஞ்சள் நிறத்தால் ஆனது. அதன் மூடியில் ரஷ்யாவின் இம்பீரியல் கழுகு முத்திரை உள்ளது. அதன்மீதுவிலைஉயர்ந்த வைரம் பதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய விலை மதிப்புமிக்க 'வொட்கா' மர்ம நபரால் அபகரிக்கப்பட்டுள்ளது. முகமூடி அணிந்த மர்ம மனிதன் பூட்டைசாவிமூலம்திறந்து இருந்த வொட்காவைத் திருடிச் சென்றது கண்காணிப்பு கமராவில் பதிவாகியுள்ளது.

அதுதொடர்பாககோபன்ஹகன் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

## 150 ஆண்டுகளுக்குப் பின்னர் சூப்பர்மூன் சந்திர கிரகணம்



77 நிமிடங்கள் நீடிக்கும் எனத் தகவல்

150 ஆண்டுகளுக்குப் பின்னர் இம்மாதம் 31ஆம் திகதி தோன்றவுள்ள ப்ளூ சூப்பர்மூன் சந்திர கிரகணம், 77 நிமிடங்கள் நீடிக்கும் என நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

150 ஆண்டுகளுக்கு பின்னர் நிகழப்போகும் ப்ளூ சூப்பர்மூன் சந்திர கிரகணம் (blue supermoon lunar eclipse) வருகிற 31ஆம் திகதி தோன்றவுள்ளது. 2018 ஆம் ஆண்டு தோன்றும் முதல் கிரகணம் இதுவாகும். இந்த நிகழ்வின் போது சந்திரன் பூமிக்கு மிக அருகில் உள்ள அதன் சுற்றுவட்டப் பாதையில் நிலைகொண்டிருக்கும். இதனால் மற்ற நேரங்களைவிட இந்தத் தருணத்தில் மிகவும் பெரிதாக இது காணப்படும்.

இந்தச் சந்திர கிரகணம் மொத்தமாக 77 நிமிடங்கள் நீடிக்கும் எனவும், 150 ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றும் இந்தக் கிரகணத்தால் பசுபிக் பெருங்கலில் கொந்தளிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் கூறப்படுகிறது.

மேலும், இந்தக் கிரகணத்தின் போது சந்திரனின் கீழ் விளிம்பு பிரகாசமாகவும், மேல் விளிம்பு இருளாகவும் காணப்படுமாம். மத்திய மற்றும் கிழக்கு ஆசியா, இந்தோனேசியா, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மாலை நேரத்தில் முழு நிறைவாக இந்தக் கிரகணம் தெரியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது போன்ற முழு கிரகணம் 1866 ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி தோன்றியுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

## தென்கொரியா — வடகொரியா மீண்டும் அமைதிப் பேச்சு

தென்கொரியாவுடன்பேச்சு நடத்த வடகொரியா சம்மதம் தெரிவித்துள்ளதையடுத்து நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பேச்சு நடைபெறவுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

வடகொரியா கடந்த ஆண்டில் தொடர்ந்து பல்வேறு அணு ஆயுதச் சோதனைகளை நடத்தியது. ஏவுகணைச் சோதனை மற்றும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைப் பரிசோதனை செய்தது. இதனால் ஐ.நா. சார்பில் வடகொரியா மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன.

இந்த நிலையில், புத்தாண்டு அன்று தொலைக்காட்சியில் உரையாற்றிய வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன், தென்கொரியாவில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கு வடகொரியா தனது அணியை அனுப்பும் எனத் தெரிவித்திருந்தார். வடகொரிய அதிபரின் அறிவிப்பை அடுத்து, பேச்சு நடத்துவதற்கு தென்கொரியா அழைப்பு விடுத்துள்ளது. நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பன்முன்ஜம் பகுதியில் பேச்சு நடைபெற உள்ளது. ஆனால், இந்தப் பேச்சில் கலந்துகொள்பவர்கள் தொடர்பாக எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

வடகொரியா, தென்கொரியா இடையே 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உயர்மட்ட அளவில் எந்தவொரு பேச்சும் நடக்கவில்லை. கடந்த ஆண்டு தென்கொரியாவுடனான தகவல் தொடர்பு வசதியை வடகொரியா முறித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இத்தாலி வெனிஸ் அரண்மனையில் மொகலாய ஆபரணங்கள் திருட்டு

இத்தாலியின்டோஜஸ்அரண்மனையில்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பல லட்சம் ரூபா மதிப்புள்ள இந்திய ஆபரணங்கள் திருடப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இத்தாலியின் வெனிஸ் நகரில் உள்ள பாரம்பரியமிக்க டோஜஸ் அரண்மனையில் மொகலாயப் பேரரசின் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்த இந்திய ஆபரணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அல்தானிதொகுப்புஎன்றபெயரில்வைக்கப்பட்டிருந்த இந்த ஆபரணங்கள் திருடப்பட்டுள்ளன. இந்த ஆபரணங்களானது தங்கம், பிளாட்டினம் மற்றும் வைரங்களால் செய்யப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் அரண்மனையில் இருக்கும் பாதுகாப்பு அலாரம் ஒலி எழுப்பியது. பொலிஸார் வந்து பார்த்தபோது நகை திருடப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்தாலும் திருடர்கள் தப்பிச்சென்று விட்டனர். அலாரம் தாமதமாக ஒலி எழுப்பும் விதமாக கொள்ளையர்கள் அலாரத்தை மாற்றி அமைத்திருந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். திருட்டுப் போன ஆபரணங்களின் மதிப்பு பல லட்சம் ரூபாவாகும்.

இந்த அல்தானி தொகுப்பில் 400 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து இன்று வரை உள்ள முகலாய ஆபரணங்கள் இருந்தன. இது கட்டாரின் கே கமத் பின் அப்துல்லா பின் அல் தானியால் சேகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கமலஹாசன் மன்னிப்பு கேட்க வேண்டும் : புகழேந்தி





ஆர்.கே.நகர் தொகுதி மக்களைப் பிச்சைக்காரர்கள் என்று தரக்குறைவாகப் பேசிய நடிகர் கமலஹாசன் மன்னிப்புக் கேட்க வேண்டும் எனத் தினகரன் ஆதரவாளர் புகழேந்தி கூறியுள்ளார்.

ஆர்.கே.நகர் தொகுதி மக்களைத் திருடர்கள் என்றும், பிச்சைக்காரர்கள் என்றும் தரக்குறைவாகப் பேசிய நடிகர் கமலஹாசன் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும்.

இந்திய அரசியல் வரலாற்றில் இதுவரை எந்த அரசியல் தலைவர்களும்இதுபோன்றவார்த்தைகளைப் பயன்படுத்தியமை கிடையாது. இவர் அரசியலுக்கு வந்தால் 5 வீதம் கூடத் தேர்ச்சி பெற முடியாது.

அரசியலுக்கு வரமாட்டேன் என்று சொல்லிக் கொண்டு இருந்த ரஜினி இவர் தூங்கிக்கொண்டு இருந்த நேரத்தில் அரசியலுக்கு வந்து விட்டார். அந்த எரிச்சலில் கமலஹாசன் என்னமோ பேசுகிறார். அவர் இன்னும் அரசியலில் முளைக்கவில்லை.

அவர் இப்படி பேசியதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லையென்றால் எங்கள் போராட்டம் தொடரும். அவர் மன்னிப்பு கேட்கும்படியான சூழ்நிலையை உருவாக்கும் வரை அவருக்கு எதிரான எங்கள் நடவடிக்கை தொடரும். எங்கள்துணைப் பொதுச்செயலாளர் தினகரன் அனுமதியைப் பெற்று அவருக்கு எதிராகப் போராடுவோம் என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5 ஆவது ஆஷஸ் டெஸ்ட்:

# கவாஜா அசத்தல் சதம்!

## 133 ஓட்டங்கள் முன்னிலையில் தொடரும் ஆஸியின் ஆதிக்கம்!






இங்கிலாந்து அணிக்கு எதிரான 5ஆவது டெஸ்ட் போட்டியில் ஆஸி. வீரர் உஸ்மான் கவாஜா மிகச்சிறப்பாக விளையாடி 171 ஓட்டங்கள் குவித்துள்ளார். ஆஸி. அணி 4 விக்கெட் இழப்புக்கு 479 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் உள்ளது.

சிட்னியில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 112.3 ஓவர்களில் அனைத்து விக்கெட் இழப்புக்கு 346 ஓட்டங்கள் எடுத்தது. ஜோரூட் அதிகபட்சமாக 83 ஓட்டங்கள் எடுத்தார். ஆஸ்திரேலிய தரப்பில் கம்மின்ஸ் அதிகபட்சமாக 4 விக்கெட்டுகள், ஸ்டார்க் 2 விக்கெட்டுகள், ஹேஸில்வுட் 2 விக்கெட்டுகள், நாதன் லயன் ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலியா நேற்று முன்தினம் ஆட்டத்தின் முடிவில் 67 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 193 ஓட்டங்கள் எடுத்தது. உஸ்மான் கவாஜா 7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 91 ஓட்டங்களுடனும், ஸ்டீவ் ஸ்மித் 3 பவுண்டரிகள் உட்பட 44 ஓட்டங்கனுடனும் களத்தில் இருந்தார்கள்.

நேற்றுத் தொடர்ந்த ஆட்டத்தில் சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட ஸ்மித், எதிர்பாராத விதத்தில் 83 ஓட்டங்களில் மொயீன் அலி பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். 222 பந்துகளில் சதத்தைப் பூர்த்திசெய்த கவாஜா, 334 பந்துகளில் 150 ஓட்டங்கள் எடுத்தபோது அவர் இரட்டைச் சதமெடுப்பார் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் 171 ஓட்டங்களில் கிரேன் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அவருடைய அற்புத மான சதத்தால் ஆஸி அணி வலுவான நிலையை அடைந்தது.

3ஆம் நாளின் முடிவில் ஆஸ்திரேலிய அணி 157 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 479 ஓட்டங்கள் எடுத்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஷோன் மார்ஷ் 98ஓட்டங்கள், மிட்செல் மார்ஷ் 63 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார்கள். 6 விக்கெட்டுகள் மீதமுள்ள நிலையில் ஆஸி. அணி 133 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. இதனால் முதல் இன்னிங்ஸில் குறைந்தபட்சம் 300 ஓட்டங்கள் முன்னிலை பெற்று இந்த டெஸ்ட் போட்டியையும் வெல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பாக். எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட்: 61 ஓட்டங்களால் நியூஸிலாந்து வெற்றி




வெலிங்டன் நகரில் நேற்று நடைபெற்ற முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி நியூஸிலாந்து வெற்றி பெற்றது.

நியூஸிலாந்து அணியுடன் 5 ஒரு நாள் போட்டிகள் மற்றும் 3 ரி – 20 போட்டிகளில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூஸிலாந்திற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முதல் ஒரு நாள் போட்டி நேற்று வெலிங்டன் நகரில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவருக்கு 7 விக்கெட் இழப்பிற்கு 315 ஓட்டங்கள் குவித்தது. கப்டன் வில்லியம்சன் சதம் அடித்தார். அவருக்கு இது 10 ஆவது சதமாகும். வில்லியம்சன் 117 பந்தில் 115 ஓட்டங்களும் (8 பவுண்டரி, 1 சிக்ஸர்), காலின் முன்ரோ 35 பந்தில் 58 ஓட்டங்களும் (6 பவுண்டரி, 2 சிக்ஸர்), நிக்கொலஸ் 50 ஓட்டங்களும் எடுத்தனர்.

ஹசன்அலி 3 விக்கெட்டும், முகமது அமீர், ரூயஸ் பகர் ஜமான், பகீம் தலா ஒரு விக்கெட்டுகளும் கைப்பற்றினார்கள்.

இதையடுத்து 316 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி இலக்குடன் பாகிஸ்தான் அணி விளையாடியது. மழை குறுக்கிட்டதால் டக்வொர்த் லூவிஸ் விதி கடைபிடிக்கப்பட்டது. அதன்படி ஓவரானது 30.1 ஆக குறைக்கப்பட்டு, 228 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை எதிர்கொண்ட பாகிஸ்தான் அணி 54 ஓட்டங்களில் 5 விக்கெட்டை இழந்து திணறியது. 6ஆவது விக்கெட்டான பகர் ஜமான் – சதாப் கான் ஜோடி பொறுப்புடன் ஆடி வந்தனர். சதாப் கான் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

30.1 ஓவர் முடிவில் பாகிஸ்தான் 6 விக்கெட் இழப்பிற்கு 166 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 61ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்று, 1:0 எனத் தொடரில் முன்னிலை பெற்றுள்ளது. இரண்டாவது ஒருநாள் போட்டி 9ஆம் திகதி நெல்சன் நகரில் நடைபெற உள்ளது

# ஆளரமற்ற தீவில்...

18 ஆம் பக்கத் தொடர்ச்சி...



பின்னர், அந்த சிலைகளை ஆராய்ந்தபோது அது அந்தத் தீவிலிருக்கும் பொருள்களைக் கொண்டே உருவாக் கப்பட்டிருக்கிறது என்பது தெரிந்தது. குறிப்பாக 834 சிலைகள் டஃப் (Tuff) என்று சொல்லப்படும் எரிமலை சாம்பலைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு மூலப்பொருளைக் கொண்டே உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதைக் கண்டிப்பாக ஏலியன்கள் செய்திருக்க முடியாது என்பது நிரூபணமாகிறது.

அடுத்ததாக இந்தப் பெரிய சிலைகளை எப்படி தீவு முழுக்க பல இடங்களுக்கு நகர்த்தியிருப்பார்கள் என்ற கேள்வி எழுந்தது. 1980 களின் ஆரம்பத்தில் சில அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் உண்மையிலேயே அதே போன்ற சிலைகளைக் கொண்டு, நவீன தொழில்நுட்பங்கள் ஏதுமில்லாமல் அந்தக் காலகட்டத்திலிருந்த பொருள்களைக் கொண்டே அதை நகர்த்த முடியுமா என்று முயற்சி செய்து பார்த்தார்கள். ஆனால், அது முடியவில்லை. பின்னர், சில ஆராய்ச்சியாளர்கள் அதை சாத்தியப்படுத்திக் காட்டினார்கள்.

இப்படியாகத் தான் அவர்கள் சிலைகளை நகர்த்தியிருக்கக் கூடும்...

சிலைக்கு வலப்பக்கமும், இடப்பக்கமும் கயிறைக் கட்டி அசைத்து, அசைத்து இழுத்தார்கள். அதே சமயம், அது நிலையாக நிற்க வேண்டுமென்பதற்காக பின் பக்கமும் கயிற்றை கட்டிப் பிடித்துக் கொண்டனர். இப்படியாக முயற்சி செய்து பார்த்தபோது, சிலையை நகர்த்த முடிந்தது. இப்படியாக அந்தத் தீவு கொடுத்த பல ஆச்சரியங்களுக்கு, பல வகைகளிலும் ஆராய்ச்சியாளர்கள் விடைகளைக் கண்டு பிடித்தனர். கண்டுபிடித்துக் கொண்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடு நிலையோடு – இடம் கொடுப்பது போல அது வேடம் போடுகின்றது என்றார் அவர். அப்படி அந்த நாளிதழ் – தனது போக்கைத் தற்காலிகமாக வேனும் மாற்றிக்கொண்டமைக்குப் பின்னணியில் ஒரு சூத்திரம் பொதிந்துகிடப்பதாகவும் அவர் சொன்னார்.

ஊடகங்கள், அனைத்துத் தரப்புக்கும் இடம் கொடுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் வழிகாட்டல் விடுத்துள்ளது. ஆனால், சம்பந்தப்பட்ட நாளிதழ் அப்படி நடப்பதில்லை என்று சைக்கிள்காரரும், வீணைக்காரரும் தேர்தல் ஆணையத்துக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்திருக்கின்றார்களாம். அதனை அடுத்து தேர்தல் ஆணையத்திடமிருந்து அந்த நாளிதழுக்கு ஒரு கடிதம் பறந்திருக்கின்றதாம். அதனை அடுத்தே அந்த நாளிதழின் போக்கில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்று குறிப்பிட்ட அந்த நண்பர், அந்த விடயத்தை 'செக்' பண்ணிப் பாருங்கோ என்றும் அட்வைஸ் தந்தார்.

வெளியில் உறுதிப்படுத்துவதை விட தேர்தல் ஆணையத்திடமே நேரில் கேட்டால் என்ன என்று தோன்றியது.

தேர்தல் ஆணையர் மூவரில் ஒருவர் தமிழரான பேராசிரியர் ரட்ணஜீவன் கூல். பத்திரிகையாளர்கள் எந்நேரமும் தொடர்பு கொள்ளக் கூடியவர். ஒளிவு மறைவின்றிப் பேசுபவர். மனதில் படுவதைப் பட்டென்று கூறுபவர். அதனால், அவ்வப்போது சர்ச்சைகளில் சிக்குபவர். அப்படிப் பேசுகின்றமைதான் அவரின் பலமும் பலவீனமும்.

நாம் குறிப்பிட்ட விவகாரத்தைக் கேட்டதும் ''எனக்குத் தெரிய தேர்தல் ஆணையர்கள் மூவரும் கூடி அப்படி ஒரு கடிதம் எழுதுவது எனத் தீர்மானிக்கவில்லை. எதற்கும் உறுதிப்படுத்தி விட்டுக் கூறுகிறேன்." – என்றார் அவர்.

சற்று நேரத்தில் அவரே தொடர்பு கொண்டார்.

*– "அப்படி ஒரு கடிதம் அந்த நாளிதழுக்கு தேர்தல் ஆணையத்திலிருந்து சென்றிருப்பதாக அறிகிறேன். தேர்தல் ஆணையாளர் என்ற வகையில் என்னைப் பொறுத்தவரை தனியார் ஊடக நிறுவனம் ஒன்றுக்கு தேர்தல் ஆணையம் அப்படி ஒரு கடிதம் அனுப்புவதில் எனக்கு உடன்பாடில்லை. நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. என் இணக்கம் அல்லது சம்மதத்தோடு அக்கடிதம் அனுப்பப்படவில்லை.*

*''அரச நிதியில் இயங்கும் ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் போன்றவை அரசுத் தரப்புக் கட்சிகளுக்கு சார்பாகச் செயற்படுகின்றமையைத் தவறு என்று தேர்தல் ஆணையம் தலையிட்டுக் கட்டுப்படுத்தலாம். தனியார் ஊடகங்கள் தத்தமது தரப்புகளுக்கு ஆதரித்துச் செயற்படுகின்றமையை தேர்தல் ஆணையம் கட்டுப்படுத்த முயல்வது தவறான அணுகுமுறை என நான் நினைக்கிறேன். இதனை எனது பெயரை மேற்கோள்காட்டியே நீங்கள் பகிரங்கப்படுத்தலாம்.'' – என்றார் தேர்தல்* ஆணையர் ரட்ணஜீவன் கூல்.

இனி என்ன?

நடுநிலை நாளேடு என்ற பெயரைத் தம்பட்டம் அடித்துக்கொண்டு கட்சிப் பத்திரிகையாக இதுவரை இயங்கி வந்த அந்த நாளேட்டுக்கு, தேர்தல் ஆணையரில் ஒருவரான பேராசிரியர் ரட்ணஜீவன் கொடுத்த ஊக்கமான பதில் போதாதா? பழைய குருடி கதவைத் திறவடி என்ற நிலைமை மீண்டும் வந்துவிடும்...!

தமிழரசுக் காட்டில் மட்டும் தான் இனி நல்ல மழை. மாவிட்டபுரம் செழிக்கும்.

அந்த மழை மேகத்தின் கொடைக்கு மயங்கித்தானே வேட்பாளர் நியமனங்களில் குளறுபடிகள் நடந்தன!

**- மின்னல் -**

## 27 இந்தியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேடுதலில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஆறு மணி நேரம் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இவர்கள் கைதாகியுள்ளனர். அவர்களின் கடவுச்சீட்டுக்களை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களை நாளை திங்கள்கிழமை இந்தியாவுக்குத்திருப்பிஅனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ)

## தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதலில் சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினரும், தற்போதைய வேட்பாளருமான காசிலிங்கம் சற்குணதேவன் என்பரே காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோதே தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவர் வீடொன்றுக்குள் பிரசாரத்துக்காகச் சென்றபோது, இங்கு ஏன் வந்தீர்கள்? நாங்கள் யாருடைய ஆள்கள் என்று தெரியுமா? எனக் கேட்டு அங்கிருந்தவர்கள் தாக்குதல் நடத்தினர் எனக் கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரிப் பொலிஸார், சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவரைக் கைதுசெய்து விசாரணை செய்துவருகின்றனர். (ஐ–7)

## வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டுஉரையாற்றும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:

பொய்ப்பிரசாரங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. எல்லா ஊடகங்களையும் பார்த்து நான் நேரடியாகச் சொல்கிறேன். அப்பட்டமான பொய் சொல்கிறார்கள்.

ஓர் உதாரணம், எனக்குக் கொழும்பு–7 இல் வீடு ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது என்று சுரேஷ் பிறேமச்சந்திரன் சொல்கிறார். அதற்கு 135 ரூபா வாடகையாம். அதன் முகவரியும் அவர் குறிப்பிட்டார். அதை இங்குள்ள பத்திரிகை ஒன்று பிரசுரித்துள்ளது. அந்தப் பத்திரிகைக்கு எதிராக வாதாடுவதா அல்லது அதற்கு எதிராக வழக்குப் போடுவதா என்று கேள்வி எழுகிறது.

இடைக்கால அறிக்கை பற்றி ஓர் ஊடகமும் விலக்கில்லாமல் எல்லா ஊடகங்களும் பொய் தான் சொல்கின்றன.

ஏன் இந்த ஊடகங்கள் இப்படிச் செய்கின்றன?. ஊடகங்கள் அரசியல்வாதிகளைவிட மோசமானவை. அதுதான் காரணம்.

அரசியல்வாதிகள் தங்கள் பதவிக்காகப் பொய் சொல்கிறார்கள். ஊடகங்கள் பத்திரிகை விற்பனைக்காகப் பொய் சொல்கிறார்கள். காசுக்காக அவர்கள் பொய் சொல்கிறார்கள்.

நாங்கள் சொல்லும் உண்மைகளை மக்களிடம் எடுத்துச் செல்ல ஊடகங்களும் தயாரில்லை.

ஏக்கிய இராச்சிய என்பதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இணங்கியது. ஆனால் அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் விடயத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நெகிழ்வுத்தன்மையை காட்டாது.

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கச் சொன்னவர்கள் இப்போது மீண்டும் வந்து நாங்கள் எல்லாவற்றையும் செய்து கொடுப்போம் எனச் சொல்கிறார்கள். எப்படி பெற்றுக் கொடுக்கபோகிறீர்கள்? என கேட்டால் அதற்கு அவர்களிடம் பதில் இல்லை. புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் சில விடயங்களில் நாங்கள் இணங்கியிருக்கிறோம்.

குறிப்பாக ஏக்கிய இராச்சிய என்பதில் நாங்கள் இணங்கியிருக்கிறோம். அது எதற்கான இணக்கம் என்றால், சமஷ்டி என்றால் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள கருத்து, நாட்டை பிரிக்கிறார்கள் என்பதாகும். நான் சிங்கள மக்களைச் சந்தித்து பேசுகின்றேன். இதன்போது, நாட்டைப் பிரிக்கும்படி நாங்கள் கேட்கவில்லை. ஆனால் பூரணமானதும், மீள பெறமுடியாததுமான அதிகாரங்களை எங்களுக்குத் தாருங்கள் என அவர்களிடம் கேட்கிறேன். இதனாலேயே நாங்கள் ஏக்கிய இராச்சிய என்பதற்கு இணங்கினோம். அதிகாரப்பகிர்வுதவிர்ந்த மற்றைய விடயங்களில் நாங்கள் இணக்கப்பாட்டைத் தெரிவித்திருக்கின்றோம்.

ஆனால் அதிகாரப் பகிர்வு விடயத்தில் நாங்கள் தொடர்ந்தும் இறுக்கமான நிலைப்பாட்டைக் கடைப் பிடிப்போம். காரணம் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகள் விடயத்தில் விட்டு கொடுப்புக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இல்லை.

அரசின் செயற்பாடுகளிலும், இடைக்கால அறிக்கையிலும் எங்களுக்கும் பூரணமான திருப்தியில்லை. ஆனால் வந்திருப்பது ஓர் இடைக்கால அறிக்கை. அந்த இடைக்கால அறிக்கையிலேவே இந்தளவு விடயங்களைச் சாதிக்க முடிந்தமையில் எமக்கு பூரணமான திருப்தி இருக்கின்றது–என்றார்.

(ஐ)

## குருநகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறையில் மட்டுமே தீ பரவியதால் வீட்டிலிருந்த 2 குழந்தைகள்உட்பட5பேருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

தீ பரவிய அறைக்குள் இருந்த பெறுமதியான பொருள்கள் மற்றும் ஆவணங்கள் எரிந்து நாசமாகின என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மற்றும் யாழ். மாநகர சபைத் தீயணைப்புப் பிரிவினரின் கடும் போராட்டத்துக்குப் பின் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

நிந்தவூர் பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கும் வகையில், கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஆரிப் சம்சுதீன் தலைமையில் நிந்தவூரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கையும், கிழக்கை இணைப்பதற்கு நான் இரகசியமாக ஒப்பந்தம் செய்தது போலப் பேசிக்கொண்டு திரிகின்றனர். இவற்றையெல்லாம் செய்யவேண்டும் என்று பேசிய வந்த முன்னாள் செயலாளர் இப்போது பல்டி அடித்துக்கொண்டு இப்படி பேசித் திரிகின்றார். இந்தக் காலகட்டத்தில் நடக்காத ஒரு விடயத்தைப் பற்றிப் பேசுவதில் எந்த நியாயம் இருக்கிறது.

அரசியல் பிழைப்புக்காக தினேஷ் குணவர்தன, விமல் வீரவன்ஸ போன்றோர் வடக்கு – கிழக்கு இணைப்பு தொடர்பாகப் பேசலாம். அவர்களைப் போல, இதை வைத்துத்தான் அரசியல் பிழைப்பு நடத்தவேண்டும் என்ற நிலைக்கு இவர்களது ஆதரவுத்தளம் இருக்கிறது.

வடக்கு – கிழக்கு இணைப்பு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக மு.கா. பகிரங்கமாக எதையும் பேசப்போவதில்லை. அப்படியொரு விடயம் நடந்தால் நாங்கள் அதைப் பற்றிப் பேசுவோம். எங் களது அரசியலுக்காகத் தமிழர்களின் அபிலாஷைகளில் மண் அள்ளிப்போடவேண்டிய தேவை எங்களுக்கு இல்லை. முஸ்லிம்களுக்குத் தனி மாகாணம் அமையாமல் இது எதுவும் நடக்கப்போவதில்லை. முஸ் லிம்களின் உரிமைகளை நாங்கள் ஒருபோதும் அடகுவைக்கப் போவதில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சாமானியர்களைப் பதவிகளில் அமர்த்தி அழகு பார்த்திருக்கிறது. நானும் அப்படியான ஒருவன்தான். பாமரமக்களுக்கு அவர்களின் திறமைகளின் அடிப்படையில் அரசியலில் அடையாளம் கொடுத்திருக்கிறது. ஏனைய கட்சிகள்போல இது வாரிசுரிமைக் கட்சியல்ல. சில நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர்களது சகோதரர்களை அரசியலுக்குள் இழுந்த வந்தபோது இதற்கு இடம் கொடுக்கவில்லை.

தேசியப்பட்டியல் ஆசனத்துக்காகச் செயலாளரே கையொப்பம் இடவேண்டும். எங்களது முன்னாள் செயலாளர் ஹஸன் அலிக்கு தேசியப் பட்டியல் வழங்குவதற்கு அவருக்கு அவரே கையொப்பம் வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் கட்சிக்குள் பல சிக்கல்கள் எழுந்தன. இதற்காகச் செயலாளர் பதவியில் இருப்பவர் நாடாளுமன்ற உறுப்பினராக முடியாது என்று எங்களது யாப்பை மாற்றினோம். இதன் போதுதான் எனக்கும் ஹஸன் அலிக்கும் பிரச்சினை ஆரம்பமானது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூலம் தேசியப்பட்டியல் பெற்ற 15 பேரில் 11 பேர் கட்சியை விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர். இவ்வாறு, பதவிக்காக மட்டும் கட்சியில் இருந்துவிட்டுப் போகின்றவர்கள் பற்றி நாங்கள் ஒருபோதும் அலட்டிக்கொள்வதில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் என்ற பஸ் இலக்கை நோக்கி பயணித்துக்கொண்டே இருக்கும். பஸ்ஸில் யாரும் ஏறலாம், இறங்கலாம். சாரதியாக இருக்கின்ற நான்கூட மாறலாம். ஆனால், இந்த மக்கள் இயக்கம் வாழ வேண்டும். இந்த இயக்கத்துக்கு இருக்கின்ற புனிதத்தை யாரும் பிழைப்புக்கான பாவிக்க முடியாது. கட்சியை விட்டு வெளியேறியவர்கள் மரச்சின்னம் பற்றி கதைப்பதற்கு எந்த அருகதையும் அற்றவர்கள் – என்றார்.

இந்தக் கூட்டத்தில் சுகதார பிரதியமைச்சர் பைசால் காசிம், கட்சியின் தவிசாளர் அப்துல் மஜீத், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், வேட்பாளர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர். (ஐ)

## ஆளுநருடனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காமல் திரும்பியுள்ளது.

இந்தக் குழுவினர் இவ்வாறு தமது சந்திப்பை மட்டுப்படுத்தியமைக்கு அதில் இடம்பெற்றிருந்த இலங்கையரான பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் ஜெயவர்த்தனவின் ஆலோசனையே காரணம் என்றும் கூறப்படுகிறது.

இதனையடுத்துக் இந்தக் குழுவினரின் யாழ். பயணம் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் குறுகிய காலப் பயணமாக அவசர அவசரமாக யாழ்ப்பாணம் வந்த இவர்கள், படைத் தளபதியையும் வடக்கு ஆளுநரையும் மட்டும் சந்தித்தமை குறித்து சிவில் அமைப்புக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பொது மக்களின் காணிகள் பல இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள நிலையிலும், இராணுவத்துக்கு ஆதரவான கருத்துக்களையே வடக்கு ஆளுநர் கொண்டுள்ள நிலையிலும் பிரிட்டன் எம்.பிக்களின் இந்தச் சந்திப்பு பலத்த சந்தேகங்களைக் கிழப்பியுள்ளது.

இலங்கைக்கு உத்தியோக பூர்வப் பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டன் நாடாளுமன்றச் சர்வகட்சிக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

கொழும்பில் இருந்து விமானம் மூலம் நேற்றுக் காலை யாழ். வந்த இந்தக் குழுவினர் பலாலியில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் ரெஜினோல்ட் குரேயையும் அவர்கள் சந்தித்தனர்.

மேலும் ஆளுநருடனான சந்திப்பின்போது, போரால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதற்கு அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் என்பன தொடர்பில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதாக இருந்த போதும், அவர்களது வருகை தாமதமானதால் அந்த நிகழ்வுகள் இரத்துச்செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரிட்டன் எம்.பிக்கள் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரணில் ஜெயவர்த்தன, திருமதி மைக்கெலி டொலினி, கிரிஸ் கிறீன், திருமதி கெல்லி டொல்கேட்ஸ் மற்றும் டான் கார்டன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir



# 2017 இல் அறிமுகமான உயிரினங்கள்

2017 ஆம் ஆண்டு நிறைய உயிரினங்கள் அறிவியலாளர்களால் 'புதிய உயிரினங்களாக' அறிவிக்கப்பட்டன. இவையனைத்தும் பல ஆண்டுகளுக்கு முன்னரே கண்டறியப் பட்டவை. நீண்ட ஆராய்ச்சிக்குப் பின்னரே இவை புதிய உயிரினங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றில் சில முக்கி யமான உயிரினங்களை யும் அவற்றின் கதை களையும் காண்போம்.

## தபானுலி உராங்குட்டான்



இந்தோனேசியாவின் சுமத்ராதீவில் புதிய உராங்குட்டான் இனம் ஒன்றை அறிவியலா ளர்கள் கண்டறிந்துள் ளனர். 1997 இல் உயிரியல் வல்லு நர்கள் குழு, வித்தியாசமான உராங்குட்டான் குரங்குகளை அங்கே கண்டறிந்தனர்.

இதுவரை கண்டறியப் படாத குரங்கு வகையாக அவை இருக்கலாம் என விஞ் ஞானிகள் கருதினர்.

பல ஆண்டுகளாக மேற் கொண்ட ஆய்வில் அவை, ஏற்கெனவே உள்ள, போர் னிய மற்றும் சுமத்ரா வகை உராங்குட்டான்கள் அல்ல என்பது தெரியவந்தது. அவை புதிய வகை குரங்குகள் என் பது உறுதிசெய்யப்பட்டது.

அந்தக் குரங்குகளுக்கு, 'தபானுலி' எனப் பெயர் சூட்டியுள்ளனர். இது உலகில் மீதமுள்ள எட்டாவது வகை உராங்குட்டானாகும். இவ் வகை குரங்குகள் தற்போது 800 மட்டுமே இருக்கின்றன என அறிவித்திருக்கிறார் கள்.

## கோமாளித் தவளை

அமேசான் பகுதியில் கோமாளித் தவளைகள் அதிகமாக இருக்கின்றன. அவற்றின் உடல் நிறம் பிரகாசமான வண்ணத்தில் இருப்பதால் அப்படியான பெயரைப் பெறுகின்றன. சமீபத்தில் பொலிவியா மற் றும் பெருவின் அமேசானிய மழைக் காடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு கோமாளித் தவளைகள் பிற இனங்களைச் சேர்ந்தவையாகக் கருதப்பட்டன.


ஆனால், ஆராய்ச்சியாளர்கள் அவற்றை டி.என்.ஏ பகுப்பாய்வு செய்ததன் பய னாய் புதிய தவளை வகையைக் கண்டறிந்தனர். இந்தத் தவளைகளின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து இன்னும் கண்டறியப்படவில்லை.



## ஹுலோக் ஜிப்பான் குரங்கு

ஏப்(Ape) இனத்தைச் சேர்ந்த ஜிப்பான் என்பது ஒரு வகை குரங்கு. தென்கிழக்கு ஆசியா வில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புதிய ஜிப்பான் வடகிழக்கு சீனா வுக்கும் வடக்கு மியன்மாருக்கும் இடையிலான எல்லைகளை அகற் றும் காளியாகோங் மலைகளின் காடுகளில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஜிப்பான்கள் தரையிலிருந்து மேலெழும்பி சுமார் 3 மீற்றர் உயரம் தாவிக்குதிக்கும் திறன் பெற்றவை.





## பறக்கும் அணில்

வட அமெரிக்காவில் மூன்றாவது பறக்கும் அணில் இனத்தை, ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளார்கள். அதற்கு ஹம்போல்ட்டின் பறக்கும் அணில் பெயரி டப்பட்டுள்ளது. கொலம்பியா பசிபிக் கடலோரப் பகுதி யிலிருந்து தெற்கு கலிபோர்னியாவின் மலைகள் வரை இவ்வகை அணில்கள் காணப்படுகின்றன. இவை ரகசிய இனங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடார் குழிபறிக்கும் தவளை

இந்தத் தவளை இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இருப்பதா கக் கருதப்பட்டது. உலகிலேயே குழிபறித்து நிலத்துக்கு அடியில் வாழும் ஒரே தவளை இனம் இது மட்டுமே என ஆராய்ச்சியாளர்கள் கருது கிறார்கள்.

பல ஆண்டுகளாக விஞ்ஞானிகள் இவ் வகை தவளைகளை ஆராய்ச்சிகளுக்காக தேடிவந்தனர். இந்தத் தவளையானது மண் ணுக்குள்ளேயே இருப்பதால் நிலப்பகு திக்கு அடிக்கடி வருவதில்லை. அதனால், இந்தத் தவளை குறித்த தகவல்கள் கண் டறியப்படாமல் இருந்தன.

2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மேற் குத் தொடர்ச்சி மலைகளிலிருந்து தவளை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, டெல்லி ஆய் வகத்துக்கு அனுப்பி ஆய்வுசெய்து கண்ட றிந்தனர். கேரளாவின் வளச்சல் காட்டுப் பகுதியில் இந்தத் தவளை கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. கேரளக் காடுகளில் வாழும் கடார் இன மக்களின் பெயரை இந்தத் தவ ளைக்குச் சூட்டியிருக்கிறார்கள்.



## யோதா வெளவால்



பப்புவா நியூ கினியாவின் மழைக்காடுகளில் புதிய வெளவால் இனமொன்று கண்டறியப்பட்டுள்ளது. ஸ்டார் வார் திரைப்படத்தில் வருகிற யோதாவைப் போன்று உருவ அமைப்பில் இருப்பதால் புதிய வெளவாலை யோதா பேட் என்று குறிப்பிடுகிறார்கள். அமெரிக்காவின் யார்க் பல்கலைக்கழகத்தின் உயிரியல் பிரிவின் கௌரவ ஆராய்ச்சி மாணவரான நான்சி இர்வின் ஹமாமாஸ் குழாய் – மூடிய வெளவால் என்ற பெயரை தேர்வு செய்தார், ஹமாமாஸ் என்கிற சொல்லுக்கு அந்த நாட்டில் மகிழ்ச்சி என்று பொருள்.

## பிடல் காஸ்ட்ரோ சிகரெட் பெட்டி ஏலத்தில்

கியூபா முன்னாள் அதிபர் பிடல்காஸ்ட்ரோவின் கையெழுத்திட்ட சிகரெட் பெட்டி 13 லட்சம் ரூபாவிற்கு ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கியூபா நாட்டின் புரட்சி வீரரான முன்னாள் அதிபர் பிடல் காஸ்ட்ரோ. இவர் மரணம் அடைந்து விட்டார். இந்த நிலையில் இவர் பயன்படுத் திய சிகரெட் பெட்டி அமெரிக்கா வில் ஏலம் விடப்படுகிறது.

சிகரெட் பெட்டியில் பிடல் காஸ்ட் ரோவின் கையெழுத்து உள்ளது. இது பொஸ்டன் நகரைச் சேர்ந்த பெண் கொடைவள்ளல் ஈவா ஹார் லர் என்பவருக்கு பிடல் காஸ்ட்ரோ பரிசாக வழங்கியது. இத்தகவலை அவர் ஒரு கடிதத்தில் எழுதியுள் ளார்.

மேலும் இப்பெட்டியில் நீங்கள் கையெழுத்திடுங்கள். அப்போது தான் இதை நான் அதிக விலைக்கு ஏலத்தில் விற்க முடியும் எனக் கேலி யாக கூறினேன். உடனே அதில்




அவர் கையெழுத்து போட்டுவிட் டார் என்றும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். முஸ்லிம்களுக்கு உதவி வழங்கத் தயார்!

## கனடா எம்.பி. ஹரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு




பொருளாதார ரீயாகப் பின்னடைவு கண்டுள்ள யாழ். முஸ்லிம் மக்களின் தேவைகளை முன்னெடுப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்கத் தம்மாலான உதவிகளை மேற்கொள்ள முடியும் எனக் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தலைமையிலான ஐவர் அடங்கிய குழுவினர் யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்து முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் மற்றும் முஸ்லிம் சமயத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ். பெரிய ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஹரி ஆனந்தசங்கரியிடம் எடுத்து கூறப்பட்டது.

இதனையடுத்து, கருத்து தெரிவித்த ஹரி, மக்களுடைய இன ரீதியான ஐக்கியம் கட்டியெழுப்ப முடியாத சூழல் காணப்படுகின்றது. அவ்வாறான ஒரு நிலை தமிழ் பேசும் மக்களிடையே ஏற்பட அனுமதிக்கக் கூடாது. அதற்கான புதிய வழிகளைக் கொண்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அப்போது தான் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான ஒரு தீர்வை பெறக் கூடியதாக அமையும். அந்த வகையில் இவ்வாறான தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குச் சகல வழிகளிலும் நடவடிக்கைகளை முன்னெடுக்க தாம் தயார். – என்றார். (ஐ)



## யோகாசனப் பயிற்சி வகுப்பின் 10ஆம் ஆண்டு நிறைவு விழா







ஸ்ரீ சிவகுரு நாத குருபீடம் ஆரம்பித்த யோகாசனப் பயிற்சி வகுப்பின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்றுச் சனிக்கிழமை ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொண்டார். ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் சின்மயா மிஷன் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் யோகாசன அறிமுக உரை, அரங்காற்றுகை ஆகியன இடம்பெற்றன.

## முஸ்லிம்களின் மீள்குடியமர்வுக்கு தமிழ்த் தேசியப் பேரவை ஆதரவு

### சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவிப்பு

முஸ்லிம் மக்களின் மீள்குமர்வுக்கு நாம் தடையாக இருக்கமாட்டோம். அவர்களுக்கு மாநகர சபைக்குட்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்திச் சகல உதவிகளையும் வழங்குவோம். ஆனால் முஸ்லிம் மக்களின் குடியேற்றத்துக்கு அனுமதியளிக்க முடியாது.

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் வேட்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

தமிழ்தேசிய பேரவையின் செய்தியாளர்கள் சந்திப்பும் செய்தியாளர்களுக்கான விருந்துபசார நிகழ்வும் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

அதில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியப் பேரவை, மத, இன வேறுபாடியின்றியே யாழ்ப்பாண மாநகர சபை ஆட்சியை முன்னெடுக்கும். அனைவரினது உரித்துக்களும் கவனத்திலெடுத்தே அடிப்படை வசதிகள் உள்ளிட்ட அபிவிருத்திகள் மேம்படுத்தப்படும். – என்றார். (ஐ)

## மைத்திரிபாலவின் தலைமையில் சு.கவின் முதல் பிரசாரக் கூட்டம்

சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அனுராதபுரம் சல் காது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

வரலாற்றில் இதுவரை காணாத மக்கள் வெள்ளத்துடன் இந்தக் கூட்டத்தை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ)




திருமறைக் கலாமன்றம்
கலைத்தூது அழகியல் கல்லூரி

எமது கல்லூரியால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான செவ்வாய்க்கிழமை 2018 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பிரதான பாடங்கள்
★ வாய்ப்பாடு
★ வீணை
★ புல்லாங்குழல்
★ ஓர்கன் (கீபாட்)
★ ட்றம்
★ சித்திரம்
★ நடனம் (பரதம், கதகளி, மோகினி)
★ வயலின்
★ மிருதங்கம்
★ கிற்றார்
★ ஒக்ரோபாட்
★ நாடகமும் அரங்கியலும்

சிறப்பு பாடங்கள்
★ கூத்து
★ கண்டிய நடனம்
★ யோகாசனம்
★ அழகுக்கலை(முக ஒப்பனை, தலையலங்காரம், கேக் ஐசிங், சேலை அலங்காரம்,தையல்)
★ பண்பாடு (கிறிஸ்தவ கலைகள்,சைவசித்தாந்தம்)

துணைப்பாடம்
★ ஆங்கிலம்

இப்பாடங்களைப் பயில விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து 25.01.2017 வியாழக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.

மேலதிக விவரங்களுக்கும் தொடர்புகளுக்கும்
அதிபர், கலைத்தூது அழகியல் கல்லூரி
இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 9419

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.